வாங்கியதையாட்டிவைத்துவாவின்பால்தான் மைந்தனேநாலு படிவடிதான்கட்டி, பாங்காகநெய்படியு மிரண்டுவிட்டுப் பதமாகச்சி வந்தபின்புவடித்துநீயும், நீங்காதவீளைவலிசுவாசகாசம் நீர்க்காசஞ் சுரகாசம்பித்தகாசம், தாங்காமலொருமக்கங்கொள்ளும்போதுதலை கெட்டநூல்போலேசாடிப்போமே. 213

மேகவியாதிக்கெல்லாம் ஏலாதிக்கிருதம்.

சாடிவிழுநோய்க்கெல்லாமேலாதிக்கிருதம் சாற்றுகிறேன்சாத கமாய்கேளுகேளு, சாடிவிழுநெய்யின்றிஎண்ணேதன்னிற் சம்பிரதா

யமாருமடாசுார்ந்துசெய்வாய், சாடிவளரத்தியாலாசுயித்தி தனித் தனியேமுதிர்மரத்தின்சிவந்தபட்டை, சாடியேயிடித்ததனைப்பாண் டத்திலிட்டுத் தயவாகத்தண்ணீர்தான்றாணியூற்றே. 214

ஊற்றியேயெட்டொன்றுய்க்குறுக்கிநீயு முறவுசேரிரண்டுபடி தாழைநீர்தான், ஊற்றுவாயிரண்டுபடிவெள்ளறுகுநீர்தா னுத்தம னேரண்டுபடிநெய்யுமூற்று, ஊற்றிடவேயிரசாலின் முகிழெடுத்து உயர்ந்துநின்றபத்திமுகழ்மதுரங்கோட்டம், ஊற்றுவாய்சந்தனமு மிலுப்பைப்பூவு முற்பனஞ்சேர்தாமரையின்வளையம்வாங்கே. 215

வளையமொடுசெங்கழுநீர் மூலந்தானு மகத்தானவெள்ளறுகு மூலந்தானும், இளையவேபேரீந்துநாகப்பூவு மியலானசெண்பகப்பூ விலவங்கப்பத்திரி, தளையவேகச்சோலகாணற்றுது தனித்துவளர் நன்னரிநெய்தல்மூலம், விளையவேயமுக்குறுயேலந்தானு மீறுமற் கழஞ்சொன்றுபாலிலாட்டே. 216

ஆட்டியதிற்கலந்துகொண்டு தினந்தானலு வளமாகக்காய்ச்சி நீயைந்தாநாளில், ஊட்டியேவடித்திறுத்துவுண்டபோது உயர்ந்த தோரீளையெலும்புருக்கித்தீரும், காட்டியேபித்தவறட்காசம்பொகும் நலமளிக்குமுளமாந்தைநாடாதென்று, ஊட்டியேநெய்வார்த்தயெண் ணேசேர்த்து யுறக்காய்ச்சிமுழுகிடவேயுறுதிகேளே. 217

உளமாந்தைக்கு கண்டங்காரிநெய்.

உறுதியென்றநீரிழிவுவள்ளுணர்த்தி யுழலையுறுங்கிரந்திமுதற் பிளவைதீரும், மிறுதியுறுங்காலெரிவுமேலெரிவுதீரு மிதுதயிலநெய் கூடிற்கிருதமாகும், பெறுதியுறுமல்லவர்க்குமிந்தநூல்தான்பேசுகி றேனுளமாந்தையெட்டுந்தீரச், சுருதிபுரிகண்டங்காரி நெய்மைந்தா சொல்லுகிறேன்சமூலமும்வாங்குவாங்கே. 218

வாங்கியேநாலெட்டுபலந்தானப்பா வாகானகூவிளமுமமுக்கரு வும், பாங்கிடவும்பேய்ப்புடலுமாடாதோடை பாங்கானசங்குசிறு வழுதலையோடாறும், தாங்கியபேரிறுத்திநீயிடித்துக்கொண்டு தண் ணீர்தானெண்குருணைதன்னிலிட்டு, நீங்கிடாதெரியிட்டுவெட்டொன் றுக்கி நெய்படிநாலதிலிட்டுநெறிப்பின்கேளே. 219

நெரிவெள்ளூசனிக்காய் தண்ணீர்தானும் நெய்க்குநேர்பால் நேராய்க்கலந்துகொண்டு, தறித்தான்றிப்பத்தியுமிளகுசெவ்வியஞ்

சமனுகமும் மூன்றுகழஞ்சுதூக்கு, திறியேலமிலவங்கப்பத்திரிபட்டைதிப்பிலியுமிலாமிச்சஞ் சிறுநாகப்பூ, மறமாஞ்சில்கர்க்கடகச்சிங்கியிவையெல்லாம் வகையொன்றுக்கீரண்டுகழஞ்சுதூக்கே. 220

தூக்கியேயாவின்பாலிலாட்டிவாங்கிச் சேர்வறவேகலக்கிரீயடுப்பில்வைத்து, போக்கியேகணேசன்வைத்துத்தீபதூபம் புட்பத்தாலர்ச்சனைசெய்கைவேத்தியஞ்செய்து, தாக்கியேசொர்னபுஷ்பஞ்சாத்தியங்கே தணல்மூட்டிப்பதமாகவைத்துக்கொண்டு, தேக்கியேதிப்பிலியும்பேரீச்சம்பழமும் சேரடாமும்மூன்றுகழஞ்சுதானே. 221

கியாழவகை.

சேர்த்ததனேத்தினமூன்றுகழஞ்சிநெய்தான் தின்றிடவேயுள மாந்தைசுவாசகாசம், பார்த்தவுடன் கொன்றுவிடுஞ் சுணங்குமாந்தை பரிவானசையுறுசலத்தானுமிக்க, மாற்றமுறுஞ்சலேந்திரனுமாறிப்போகு மைந்தனேராத்திரிக்குக்கியாழஞ்சொல்வேன், போர்த்தபுகழ்பொற்கடுக்காய் கண்டங்காலி புகழ்நெல்லி சிறுதேக்கு மிளகுநேரே. 222

நேராகக்கழஞ்சிரண்டு சட்டிக்குள்ளிட்டு நீர்படிதான்ரண்டுவிட்டுவுழக்காய்க்காச்சி, வாரமுடனுண்டிடவேசயநோயீடு வறட்சியொடு பீனிசமுமாரணமுமாகும், பேராகவின்னமொருகியாழங்கேளு பெருந்திராய்சுழலாவாரையின்மூலம், சேராய்நீசிறுதேக்குசுக்குநல்லதிப்பிலியும்சிறப்புடனேவகையொன்றுகழஞ்சுமூன்றே. 223

மூன்றுகத்தூக்கியப்பாலொன்றுக்கிவாங்கி மூதிரவேரண்டுபடிசலத்திலிட்டு, ஊன்றியேதீயெரித்துவுழக்காய்க்காச்சியுண்டிடவேதேன்விட்டுவுறவுசெய்து, தான்றியேயின்னமொருகியாழஞ்சொல்வோந்தனிசுக்குப்பொன்முசுண்டைவேரினேடே, தூன்றியேசிறுதேக்குதேவதாரந் தூதுவளைபெருங்குரும்பைசீந்திகாணே. 224

காணப்பாவழுதலைவேர்கண்டங்காரி கழஞ்சிரண்டொவ்வொன்றுகியாழமுன்போல், தோணப்பாதிப்பாதிப்பிலிமேற் பொடியதாகத் தான் தூவியேசுகமாகக்கொள்ளச்சொல்லு, நீணப்பாபத்தியந்தானெய்யும்பாலு நோதுவரையண்டமுமாமவரைப்பிஞ்சாம், பூணப்பா பீர்க்கிலாம்புடோலுமாகும் புகழானமுருங்கைமுதல்முசலாம்பாரே. 325

முயலாகுங்கவுதாரியுள்ளானுகு முதுவாரால்நெய்மீனும்சுறுமீனுகும், புயலானகொடுப்பையுமுப்புமாகும் புகழாதுரோய்க்கெல்லாம்

பூட்டுநன்றாய், மயலாகும்வாகடங்கள் பார்க்கவேண்டா மாந்தவகை விபரத்தைவகையாய்க்கேளு, அயல்காணுமூலொன்றுபிடித்துவந்து அப்பனேகால்தலையுங்குடலும்போக்கே. 226

மாந்தவலிக்குச்சிநெய் மாந்தவலிவகை தொண்ணூற்றுறுக்கும்.

குடல்போக்கிநாலுபத்துப்பலந்தான்றாக்கிக் குமுறவேயிடித்தொருபாண்டத்திட்டு, அடலமுடனறுகுறுணிச்சலமும்விட்டு அப்பனேநாலொன்றாய்க்குறுக்கிநீயும், விடமுயர்தாடைச்சாறுகுருணிவிட்டு வெள்ளாவின்பாலுறுமிநாழிவிட்டு, நலநறுநெய்யங்கேயிழநாழிவிட்டு நாடிடவேமேல்மருந்தைச்சொல்லுறேனே. 227

சொல்லுகிறேன்திப்பிலியுமதனின்மூலஞ்சுக்குடனேகடகசிங்கிசித்திரமூலம், செல்லுமாஞ்சிறுதேக்குகுருசானியோமஞ் செவ்வியமிருசீரகமுங்கிராம்பதானும், வெல்லுமேசடாமாஞ்சில்கடுகுரோகணிமிளகு கோட்டமிந்துப்புவாலுழவையரிசி, அல்லுறவேமுந்திரிகையேலமிலவங்க மதிவிடையமரத்தையத்திதிப்பிலியுந்தூக்கே.

தூக்கடாகழஞ்சிரண்டுபாகிலாட்டு சொல்லுவேன்பெருவாலிபெருங்குமிழுமுன்னே, ஆக்கமுறுபாதிரியுங்கண்டங்காரி யப்பனேசித்தாமல்லிபேராமல்லி, தேக்கடாகூவிளமுநெருஞ்சிதானுஞ் சிறுவழுதலையிவைகள் முதல்சமூலங்கூட, தாக்கடாதூதுவளை யமுக்கரூவேர் சங்கம்வேர்திப்பிலியுமிளகும்பாரே. 229

பாரப்பாமரமஞ்சள் தேவதாரம் பருவரத்தை வகைக்கங்கே பலந்தான்மூன்று, சேரப்பாதூளாக்கிதூணிநீரிற்தீயிட்டுநாலொன்றாய்க்குறுக்கிவாங்கி, ஆரப்பாயிவையெல்லா மொன்றாய்ச்சேர்த்து அடுப்பேற்றிப்பூசைசெய்துவனலூட்டி, பேரப்பாமூன்றுநாளூறவைத்துப் புகழாகநாலாநாள்வடித்திடாயே. 230

கதலிக்கந்தகிருதம்.

வடித்துவைத்தநெய்யிலேகழஞ்சிதூக்கி மைந்தனேயரைக்கழஞ்சுதேனும்விட்டு, படித்தரமாயத்திப்பிலிதான் மேற்பொடியுந்தூவிபபாங்காகவுடம்பறிந்து விருந்தோமுண்ணு, நொடிக்குமுன்னூப்களறும்வச்சிசதேகம், துணுக்கமாந்தொண்ணூற்றுருசயமுந்தீரும், கடித்தவாய்துடைத்தாப்போல்பிணிவிண்ணேகும் கதலிகந்தக்கிருதங்கள்கழல்கின்றேனே. 231

கதலிகந்தக்கிருதங்கேள்பெரும்பாட்டுக்கு காசங்கள்சயரோகமெல்லாந்தீரும், கதலிக்கந்தமூலம்பூவிரண்டு நேராய்கனக்கவொருதுலாமிடித்துப்பதக்குநீரில், கதலிக்கந்தம்நாலொன்றாய்க்குறுக்கக்

காய்ச்சி கலந்ததற்குள்பசுவினெய்படிதானொன்று, கதலிக்கந்தமா
வின்பால்படிதானொன்று கரும்புநீர்நெல்லிக்காய்காணுந்தானே.

தானென்றநிலப்பனைவேர்தண்ணீர்மிட்டான் றன்னீர்தான்வகை
நாலுபடிதானாலு, காலனென்றுகலந்துவைத்துகடைமருந்தைக்கேளு
கழரேலமிலவங்கம்நேர்வாளகெந்த, மானென்றசடாமாஞ்சிதிரியால்
விழுது மைந்தனேயல்லியுடன்செங்கழுநீர்க்கிழங்கும், தேனென்ற
நெய்தலொடுகழஞ்சுமூன்று திறமாகவூட்டியதைநெய்யிற்சேரே.

நெய்யையடுப்பேற்றியேயினல்மூட்டி நேராகநாலுதினஞ்சிறு
கொதிப்பாய்வைத்து, மெய்யாகவைந்தாளச்சிவக்கக்காச்சி வெண்
மையுடன்மூன்றுகாலந்றவைத்து, எய்யாமலிருநேரமிடைதான்கே
ளுவென்மகனேலிருகழஞ்சுவியல்பாய்த்தூக்கு, அய்யாகேள்கொண்
டிடவேயொழியுங்கோர்வை யறைகிறேனுள்ளபடியறைகிறேனே.

பெரும்பாட்டுக்கு நிலப்பனைநெய்.

அறைகிறேனெனலும்புருக்கிமேகவெட்டையடர்ந்தொழுகும்பே
ரும்பாடுமேகநீரிழி, நிறைநிற்கும்பெரும்பாட்டுக்கின்னஞ்சொல்வே
ன் நெய்யடானிலப்பனைவேரொதியம்பட்டை, மறையாதக்கருங்கா
லிப்பட்டைதானும் வாய்க்கடங்காக்கரு நாவற்பட்டைதானும், கு
றையாமல்வகைநாலுபலமூறாகுருகவிடித்திருதூணிநீரிறாட்டே.

ஊட்டியேயெட்டொன்றுய்காய்ச்சிவைத்து வுறவாகவிருநாழி
பசுவினெய்யை, நீட்டியேயிருநாழிப்பாலும்வாரு நிணவாகப்புளி
யாரைச்சாறவ்வண்ணம், நாட்டியேநீர்வள்ளிக்கிழங்குசாறு நயமா
கவிருநாழிகூடவிட்டு, வீட்டுவாய்பொன்முசுட்டைசிறுகாஞ்சோறி
விளாம்பழமுந்திரிபலியுங்கொத்தமல்லியாமே. 236

கொத்தமல்லிமாங்கொட்டைபேரீச்சம்பழமுங் கூரானமுந்திரி
கைபெருங்குமிழின்பழமும், லித்தமல்லியரத்தைசுக்கு வெரிமலர்த்
தாதுமென்னிலவம்பிசின்கொத்தான்காட்டாத்திப்பூவும், மத்தமல்
லிக்கீழ்க்காயுமொதியம்பட்டை, மாதளம்பழத்தோலிலவப் பிஞ்சு
தானும், சுத்தமல்லியதிமதுரம்விளாமரத்தின்பிசினுந் தூய்யவெள்
ளிலோத்திரமுத்தக்காசே. 237

முத்தக்காசஞ்சனச்சாத்திரபேதி மூலமாமமுக்குறுநன்னரிகல்
நார், மத்தகாலாமிச்சமத்திதிப்பிலி மைந்தனே சிறுநாகம்பிளிய
விரைத்தோடு, உத்தக்காயிலிலவங்கப்பட்டைபத்திரி யோதுபஞ்ச
முக்கருங்கிலியமேலம், கத்தக்காவகையொன்று கழஞ்சிரண்டு
கூட்டிநீயாட்டுவாயாவின்பாலே. 138

பாலினுலாட்டியப்பா நெய்க்குளிட்டுப் பதமாகவடித்திறுத்துப் பாணிசேர்த்து, சாலவேகழுஞ்சிரண்டுகாலத்திலூட்டு சாயரட்சைவே ளைக்குக் கியாழஞ்சொல்வேன், நீலவேபருத்திவிதை நிலப்பனையின் கிழங்கு நீர்வள்ளிமுசுமுசுக்கை வேருங்கூட, நாலப்பாபேரீச்சம்பழமு மொக்க ரண்டுகாசிடைநாழி பாலிற்போடே. 239

அசுவகெந்திநெய்.

போட்டப்பா வழக்காக்கி வடித்துக்கொண்டு புரட்டக்கேள் நெய் தனிலேகாலாழாக்கை, நீட்டப்பாசர்க்கரைதான்வாகனிரண்டு நீயிட் டுக்கொடுத்திடவுந்தீருநோய்கேள், பூட்டப்பாபெரும்பாடுவெலும்புருக் கிப் பொருமலுடன்தாகமுடன்சோபகாசம், பாட்டப்பாபிரமியமுஞ் சுவாசகாசம் பாண்டுரத்தமேகமெல்லாம்பாருந்தானே. 240

பாருமேசயங்கடப்பா திருப்பதற்குப் பாடுகிறேனசுவகெந்தாதி நெய்யை, வீறுடையவமுக்குரு துலாந்தானென்று மேனிச்சாரத்தினை யும்வேரும்யக்கொண்டு, மீரூமற்சாறுவகைக்காற்றுடாமல் மிஞ்சாமல் பலம்பத்துநிறுத்துக்கொண்டு, வாறுடையபெருங்குமிழும்பெருவாகை மூன்னி மகத்தானகூவிளம்பாதிரியுங்கேளே. 241

பாதிரியுஞ்சித்தமல்லிபோமல்லி பண்பானநெல்லியொடுகண்டங் காரி, நீதிசிறுவழுதலைவேர்பலந்தான்மூன்று நிறுத்தங்கேயிவையெல் லாமிடித்துமைந்தா, ஆதிபெரும்பாண்டத்திலிட்டுப்பின்பு அளந்துவிடு பிருதுணிசலந்தானப்பா, போதிலேயெட்டொன்றுய்க் குறுக்கிவரங் கிப் புகட்டடாஆவிநெய்யிற் படிதானென்றே. 242

நெய்விட்டு மதுரமொடு சூரியபத்திரி நேரான தேட்கடையுந்திரி கடுகு, ஐயுற்றதிரிபலையுந்தேவதார மரத்தைமஞ்சள்மரமஞ்சள் திப்பிலி யின்மூலம், பையுற்றகொடிவேலிபடமடக்கிப் பருந்தகரம்வெட்பாலை கடுகுரோணி, நொய்யுற்றவரேணுசமுபட்டசந்தம் நோக்கவேயின்ன மொன்று நுணுக்கந்தானே. 243

தானென்றயெவாச்சாரஞ்சத்தியட்சாரம் சகாயமருள்ரசகாசலவ ணந்தானும், தானென்றவகையொன்றுவாகனுலுதனித்தனியேதூக்கி நீயாட்டிமைந்தா, தானென்று கலக்கியே நாலுநாள்தான் சயிக்கினை யாய்த்தியிட்டு வைந்தாளில், தானென்றுவடித்தெடுத்து மேல்மருந் தைசாற்றுகிறேன் தாம்பரபற்பங்காணுந்தானே. 244

அட்டசந்திநெய்.

காணப்பாதாம்பிரபற்பம் பலந்தானிரண்டு கனத்தமணித்திப்பிலி யும்பலந்தானெட்டு, தோணப்பாதூளாக்கிநெய்யிலிட்டுதுஞ்சாததேன்

படிதானிரண்டுவிட்டு, பூணப்பாதானியபுடந்திங்களொன்று புகட்டி வைத்துப்பின்னருந்த போம்நோய்கேளு, வீணப்பாசயரோகஞ்சுவாச காசம் வீரூனபீலிகையுமரோசிபோமே. 245

அரோசிபோஞ்சுரம்போகு குன்மம்போகு மப்பனே யறுசூலை பிரத்தபித்தம், அரோசிதருமெலும்புருக்கிவெப்புப்பாவை யனேகமாம் ரோகங்கடீருந்தீரும், அரோசியறுமட்டசந்த விபரங்கேளு அகிற் கட்டைமலர்க்காயிலவங்கப்பட்டை, அரோசிபோங் கோஷ்டமுடன் கஸ்தூரிமஞ்சள் அப்பனேகுங்குமப்புகர்ப்பூரந்தானே. 246

நீர்வள்ளிநெய்.

கர்ப்பூரஞ்சமூத்திரபச்சையோடு காணப்பா வட்டசந்தங்கருதிப் பாரு, கர்ப்பூரநீர்வள்ளிநெய்யைக்கேளு கருதியதின்கிழங்குச்சார்படி தானலு, கர்ப்பூரவாவின்பால்படியுநாலு கட்டதற்குளிருநாழிநெய்யை நீயும், கர்ப்பூரநற்பாலேவேரினேடே காணதுத்திமாகாளிக்கிழங்கும் வாங்கே. 247

கிழங்கப்பாநன்னரி பிருவேலிவேருங் கேளடாமுசுமுசுக்கை வேருங்கூட, களங்கமில்லாவிலுப்பைப்புபூமிசர்க்கரையும் கருமதூரஞ் சந்தனமும்பேரீச்சம்பழமும், முழங்கவேபற்பாடகம்யாவாரப்பட்டை மூந்திரிகைசீந்தியுட னத்திப்பட்டை, விளங்கவேநாலினிட விழுதுங் கூட வெள்ளீச்சங்கொழுந்துடனேவிபரங்கேளே. 248

விபரங்கேள்வகையொன்று மிருமற்பாலில் மிக்கவேநாலுசாம மாட்டிவாங்கி, விபரமாய்நெய்யுடனே கலந்துவைத்து மெதுவாகத் தீயெரிப்பாய்தினந்தான்மூன்று, விபரமாய்நாலாநாள்வடித்துகொண்டு மேன்மைபொடிதேனுக்குச் சமனுய்சேர்த்து, விபரமாய்சர்க்கரையும் பலந்தானுறு மீருமல்திப்பிலியும்பலந்தானென்றே. 249

கிறுச்சினம் ஆறுக்கும் இளநீர்.

ஒன்றுகப்பொடித்துநீ நெய்யிற்போட்டு வண்டுவரக்கழஞ்சொன் றுகாலத்தாலே, நின்றுயும்பெரும்பாடு கட்டிச்சோரை நிலையாத வெலும்புருக்கிச்சயமுமீளை, பொன்றுகக்காலெரிவு மூர்ச்சைதாகம் பொன்றிவிடும்பஞ்சதனிற் புறப்பட்டாப்போல், குன்றுதவிளநீர்நெய் கிரிச்சினங்களாறுங் கூட்டோடேதிறந்திடவுங்கூறினேனே. 250

திறந்துவிடுமிளநீர்தான் படிதானலு செப்புகிறேன்பூசனிக்காய் தண்ணீர்நாலு, துறந்துவரும்வாழையுடக் கிழங்கின்சாறு சொரிதண்

ணீர்மிட்டான்றன் கிழங்கின்சாறு, மறந்திடாதொவ்வொன்றும் படி தான்ஞலு மைந்தனேயாவின்பால் படியும்நாலு, கறந்துவிடுகருப்பஞ் சாறுபொன்ஞங்காணி களங்கமதுநீர்முள்ளிச் சாறும்வாங்கே. 251

வாங்கடா யிச்சாறுபடிதான்ரண்டு வகையானசீந்தியுடகியாழங் கேளு, பாங்காக நாலுபடிநெருஞ்சிச்சாறு பார்புகழுமோரிலைத் தாம ரையின்சாறு, நீங்காமலெண்ணைன்கு படியுமொன்ரூய் நீபெரியபாண் டத்தில்விட்டுப்பின்பு, ஆங்கமுறுமரனெய்யும் படியிரண்டு வப்பனே சலாசத்துகல்நார்காணே. 252

கல்நாருங் கல்மதமுஞ் சிறுபூனைவேருங் கருவத்தி திப்பிலியும் பொன்ஞங்காணி, செங்நாயுருவிவேர்கூகைநீருஞ் சிறுமுள்ளியின்விரை யுமேலமெள்ளு, மன்ஞகுந்தேத்தின்விதை பொன்மத்தன்வித்து மைந் தனே வகையொன்று வராகன்மூன்று, மின்ஞர்தன்பாலிலே யாட்டு வாங்கி விரவியேயடுப்பேற்றி வடித்துக்கொள்ளே. 253

வடிக்குமுன்னேயாவின்பால்படிதானலு மாட்டியேகிறுத்ததனை நீர்வாங்கிவைத்து,குடித்திடவேசீனியதிற்படிதானென்று கொள்கியே தேன்படியுமுக்கால்சேர்த்து, முடித்திருக்குநோய்க்கெல்லாங் கழஞ்சு மூன்று மொண்டுண்ணக்கிரிச்சனங்கள்சுக்கிலமேகம், கடித்திருக்குங் காலெரிவுதாகமுஷ்ணங் காட்டகத்தில்வீழ்ந்திப்போற் கரித்துபோமே.

கூழ்ப்பாண்டகிருதம்.

போகாதசயமுதலாய் மேகமெல்லாம் போவதற்கு பூசனிக்காய் நெய்யைக்கேளு, வாகானபூசனிக்காய்ச் சாறுபடியெட்டு மைந்தனே நீர்வள்ளிக்கிழங்கின்சாறு, பாங்காகப்படியெட்டு கருப்பன்சாறு படி யான ரண்டுபால் பசுவினெய்கேள், ஆகமுடன் படியான ரண்டுசேர் வொன்ரு யளந்துவிடுபாண்டத்தி லறையக்கேளே. 255

அறைகிறேன்நிலவங்கமேலமிந்து வப்பனேவியாழவரிசியசமதா கம், நிறைகிறேன்சாதிக்காய்சீரகமுங்கேளு நேரானசதகுப்பைகூகை நீறு, மறையாதமுந்திரிகைபேரீச்சம்பழமும் மகத்தானகோட்டமதி மதுரந்தானும், நிறைப்பாகத்தூக்கியே பாலிலாட்டி நெய்யிலிடுபேய் வாழைப்பழந்தான்பத்தே. 256

பழம்போட்டுவடித்துடனேகண்டுகொண்டு பாய்க்கவாயதிலுழக்குப்பஞ்சதாரை, களங்கமின்றிப்பராபரை நினைந்துகொண்டு கழஞ்சிரண்டுவிருதேரமுண்டபோது, உளமாந்தைசுரமாந்தைநெஞ்சினோவு உத்தமனே மேகத்திற் கிரிச்சனங்களாறு, முளம்போட்டு மூத்திரப்பாலேரத்த முற்றுநின்றரத்தகாசமெல்லாம்போமே. 257

வெள்ளுள்ளிக்கிருதம்.

போவதற்குக்குடல்வாதம்சூலைவாதம் பொன்றிவிழவெள்ளுள்ளி நெய்யைக்கேளு, போனதற்குத் துலாமொன்று வெள்ளுள்ளிப்பருப்பு புகழாகவிடித்ததனே பாண்டத்திட்டு, போவதற்குள்பதினலுமாக்கால் தண்ணீர்புகட்டிநீமுக்குறுணியாகவாங்கி, போவதற்குவகைவிபரம்படிதான்மூட்டி பூட்டுதற்குவறைகிறேன்புகழ்ந்துகேளே. 258

கேளப்பாபெருங்குறும்பைவில்வம் பாதிரிகையுறப்பெருங்குமிழுமிவைதேராக, ஏளப்பாபலமறைதானெவ்வொன்றுகூட்டமிடித்துமேகாற்குறுணிசலத்திலிட்டு, நீளப்பாரண்டுபடிநெடுநாளைக்காடி நீர்விட்டு நேர்மாதுளம்பழச்சார்தானும், தாளப்பாரண்டுபடிதிறமாய்ச்சேர்த்து சாரப்பாதிரிகடுகுதிரிபலியுங்காணே. 259

காணப்பாவோமமிந்துவிருசீரகமும் கடையில்வாழ்செவ்வியமூந்தேவதாரம், பூணவேபுளிகடலைகரணைமூலம் பொருந்துநீவைக்கங்கைகழஞ்சுநாலு, தோணவேவெள்ளாட்டுப்பாலிலாட்டி துகையாகரண்டுபடிநெய்யுஞ்சேர்த்து, ஊணவேவடித்திறுத்துக்கழஞ்சிரண்டு உண்டிடவுங்குடல்வாதமாறும்போச்சே. 260

வல்லாரைநெய்.

போச்சென்ற தோயாதவாதங்காசம் புனைந்தெழும்பும் வட்டைமுதற்றுடசோமம், மாச்சென்றதரசூல யஸ்திவைப்பும் படருகின்றபாண்டுபீலிகையும்போக, வாச்சென்ற வல்லாரை நெய்யைச்சொல்லமைந்தனேயருந்திடவோராசைகேளு, நீச்சென்றவல்லாரைப் பசுவின்பாலும் நேரானசீதேவிசெங்கழுநீர்ச்சாறே. 261

சாறுபடிமூன்னூன்கு விளநீர்த்தண்ணீர் தானிரண்டுபடிநெய்யையைங்கால்கூட்டி, மீறுமற்குன்றிவேர்செங்கழுநீர்மூல மேலானமதுரங்கோரோசினைதான்கூட்டம், கூறுனவத்தியிலே பச்சைகற்பூரம் குறை

யாகற்கழஞ்சொன்று பாலிலாட்டி, ஆறுமற்கொதிப்பிட்டு மூன்று நாள்தான் அப்பனேநாலாநாள் வடித்துக்கொள்ளே. 262

கொள்ளவே காசிடைதான் விஷங்களுரும் கூரான நாபிநஞ்சு கழுதைநஞ்சு, விள்ளவே பாலியெட்டி நஞ்சுதீரும் மேல்வற்றுக் கால் வற்றுக் காந்தல்நீரும், துள்ளுமே யஸ்திதார மேலும்புருக்கு குன்ம மும் வயிற்றெரிவு வாயிலெச்சில், அள்ளவே குறைந்தாற்போ லுடனே தீரு மனேகசுக முண்டாகு மப்பாபாரே. 263

புளியாரைநெய்.

பாரப்பா புளியாரை நெய்யைச்சொல்வேன் படரான கிராணி வகை யாறும்போக, நேரப்பா புளியாரைக் குறுணிச்சாறு நெய்தானு மிரண்டுபடி யாகனுழி, பேரப்பா திரிகடு கிந்துபெருங்காயம் பேரான யெவாச்சாரம் சாதிக்காயும், காரப்பா வெட்பாலை திப்பிலியுமூலம் கிராம்புமா துளம்பூவு மஞ்சள்காணே. 264

பலாதிநெய்.

காணவே யிலவங்க மிவைகளெல்லாம் கழஞ்சியங்கே வகைக் காறு தூக்கியாட்டி, ஊணவே காய்ச்சிநீ கொடுக்கும்போது வுத்த மனே யாறுவகைக் கிராணிதீரும், மாணவே பலாதிநெய்யைச் செப் பக்கேளு வடிப்பட்டை பலாசம்பால் நாலெட்டாகும், தோணவே கலந்தூக்கி யிடித்துமைந்தா சொல்லுகிறே னிருகுறுணி நீரிலூட்டே.

தயிர்நெய்.

ஊட்டியே படியொன்றுய்க் குறுக்கிவாங்கி யுறவைப்பா யிலித் தண்டு கழஞ்சுதானும், ஆட்டவே படிநெய்யை யதனிற்சேர்த்து வனலிலிட்டுப் பதமாக வடித்துநீயும், மூட்டவே கிராணிகுன்மம் கழிச்சல்விக்கல் முறையெல்லாங் குறைதீரு மோசமில்லை, நாட்டவே தயிர்நெய்யை மைந்தாகேளு நலமான தயிர்குறுணி நெய்நாழிதானே.

தானென்ற பெருங்காய மோமத்தோடும் சாற்றுவாய் திப்பிலியுங் கடுக்காய்கூட, மானென்ற வட்டதிருப்பி கருஞ்சீரகமு மைந்தனே புங்கம்வேர் வகைக்கோர்பத்து, தேனென்ற லோககொம்பு மூப்பதா கும் சேரவே கழஞ்சுநீர் தூக்கியாட்டி, நானென்ற வெண்குறுணி நீரிலிட்டுக் காய்ச்சியே நாலொன்றுய் நெய்யிற்சேரே. 267

நெய்யிற்சேர் திப்பிலியின் மூலந்தானும் நோரன காட்டுதிப் பிலி யுங்கூட, உய்யவிரு சீரகமுமத்தி திப்பிலியு முற்பனஞ் சேர்வில்வக் காய் வட்டத்திருப்பி, அய்யமில்லா மாமஞ்சள் வெட்பாலையரிசி யதி

மதுர மரத்தையிவை வராகனூறுசேர்த்து, கையோடே வடித்திறுத்து வருந்தும்போது கிராணிகுன்ம மதிசாரஞ் சூலைபோமே. 268

சுக்குநெய்.

சூலைபோஞ் சுக்குநெய்யைச் சூட்டக்கேளு சுக்குநீ யிரண்டு பத்து பலமுந்தூக்கி, சீலமூறு மாயிலுட பட்டைதன்னே சேரடா சுக்குக்குச் சமனுயப்பா, சாலநீ யிடித்ததனே முக்குறுணிநீரிற் ருக்கியே நாள்ஒன்றுய்க் குறுக்கிவாங்கி, பாலுரையுந் தயிர்தண்ணீர் படிதான் ரண்டு பண்பான நெய்யதற்குள் ரண்டரைதானூற்றே. 269

ஊற்றிடுவாய் பெருங்காயந் திரிகடுகு செவ்வியமோமத்தி திப்பிலியுங் கொடிவேலிவேரும், ஊற்றிடவே திப்பிலியின் மூலத்தானுமோங்கிவள ரெவச்சார மொவ்வொன்றைக்கேள், ஊற்றிடவே கழஞ்சி ரண்டு சேர்த்துக்காய்ச்சி யொருநே முக்கழஞ் சுண்டபோது, ஊற்றிருந்த வதிசாரம் பாண்டுசோகை யோடிப்போ மண்டலந்தர னுண்ணச்சொல்லே. 270

பொன்மூசுட்டைநெய்.

உண்ணையிலே முறுக்குவலி வயிற்றுநோய்வு உடல்நோய்வு காந்தலிவை யுடனேநிற்கும், உண்ணவே பொன்மூசுட்டை சித்திரமூலமோங்கிநின்ற மாதளம்வேர்த் தொலிகடானும், உண்ணவே மாதளந்தோ டதிவிடையங் கோஷ்டமுற் பனஞ்சேர்த் திப்பிலியுமூலங் காணே. 271

மூலமுடன் சுக்குதிப் பிலியுமஞ்ச ளூறுதேவதார மரமஞ்சள் தானும், ஆலமுறும் வாலுழுவை யிலத்தைபட்டை யப்பனே வெட்பாலே வசம்பரத்தை, ஏலமுடன் சிற்றேலங் கடுகுரோணி யிலவங்கப் பட்டையுடன் பத்திரியுமோமம், பாலிதற்கு ரண்டுபடி நெய்யுநாழி பாய்ச்சிநீ வடித்திறுத்துப் பாணிசேரே. 272

பஞ்சகௌவியக்கிருதம்.

சேர்த்தங்கே பாலருக்குக் கிராணிமாந்தஞ் செப்பரிய கணமிரளி காமாலைசோகை பார்த்தங்கே மனமுரைத்துக் கொடுக்கத்தீரும் பஞ்சகௌ வியநெய்யைப் பகரக்கேளு, வார்த்தங்கே பால்தயிர்நெய் கோமயமூநீரு மைந்தனே பிழிந்துகொண்டு மார்க்கங்கேளு, ஊர்த்தப்பா வைந்துவகை நீருங்கேளு ஒருபத்துப் படியாக வளந்துகொள்ளே.

அளந்ததார்க்குக் கார்க்கவகை சொல்லக்கேளு அதிமதுஞ் சிறுதேக்கு கோட்டமிந்து, விளந்தணியும் வாய்விளங்கக் கொத்தமல்லி விழாவரிசி வாலுழுவை வெட்பாலையரிசி, வளந்தளகல் வசம்புள்ளி தேவதார மகத்தான சதகுப்பை யரத்தைகெந்தம், உளங்குகருஞ் சீரகமும் பூலாப்பட்டை யுற்றபூலா விருட்சமரப் பொடிநன்னீர். 274

நன்னரி பொன்முசுட்டை நெல்லிவேரும் நலமான சாரணைவேர் கீழ்க்காய்நெல்லி, பொன்னகு மிலப்பணையுந் துத்திவேரும் புகழ்ந்திடு குரோசணியும் பெருங்குரும்பை, மின்னரு மதிவிடையஞ் சாதிக்காய் காந்தமிக்க பத்திரிகடுகு வில்வவேர்சாம்பல், முன்னைய திரிபலையுங் கழஞ்சாய்தூக்கி மூக்கியமாய் வரைத்தந்த நெய்யிற்சேரே. 275

அரைத்திட்ட மருந்தோடே மூன்றுநாள்தா னடுப்பேற்றிக் கொதிப்பிட்டு நாலாநாள்தான். விரைந்துநீ வடித்தேதான் றினந்தா னெட்டு விபரமுட னெற்குழியில் வைத்துப்பின்பு, வரைந்ததினங் காலையில் கழஞ்சிகொள்ள வற்றுத பெரும்பாடு குன்மந்தீரும், கரைந் திழியும் பீனிசமும் பித்தப்பாண்டுங் காமாலை பெருவயிறுந் தீருங் காணே. 276

பவுத்திரத்திற்கு குக்கல்நெய்.

காணவே சொல்லிலிந்தப் பிரயோகத்தைக் கறைந்தபடி யறைந் திட்டேன் களங்கமின்றி, தோணவே பிணியுள்ளோ ருண்டாராகில் துயர்தீருஞ் சுகமாகுந் தேகந்தானும், கோதைக்குக் குல்நெய்தான் பஞ்சகோலங் கூறுகிறேன் திப்பிலிதிப் பிலியின்மூலம், பூணவே செவ் வியமுஞ் சித்திரமூலம் பொன்முசுட்டை சீந்தியுடன் சுண்டைவேறே.

வோரான வில்வவே ராடாதோடை வேர்க்கொம்பு பேய்ப்புட லுங் கண்டங்காரி, ஆயுமுறு நிம்பத்தோல் கருவேர்ப்பட்டை ஆயிலி யத்தோல் புங்கந்தோல் கொன்றைத்தோலும், சீரான முத்தக்கா சாடு தின்னைப் பாலைசெங்கடுக்காய் கொத்தமல்லி தேவதாரம், வாரமுறும் வசம்புமுட் காவலியின்வேரும் வகையொன்று கழஞ்சங்கே யறுப தாமே. 278

ஆமப்பா வகைவகையே நிறுத்துவாங்கி ஆட்டியே தூளாக்கித் தூணிநீரில், வேமப்பா யெட்டொன்றாய்க் குறுக்குவாங்கி விடுநெய்யு மொருபடியா மேல்மருந்தை, நாமப்பா சொல்லுகிறேன் சீனக்காரம் நாகப்பூ திரிகடுகு தேவதாரம், ஓமப்பா திரிபலையுஞ் சவாக்காரமேலம் உசித்தசத்தி சாரநறுங் கோட்டந்தானே. 279

கோட்டமொடு வசம்புயி லவங்கப்பத்திரி கொடிவேலி வேர்ப் பட்டை திப்பிலியின்மூலம், வாட்டமுறுங் கரிப்பானுங் கடுகுரோணி மைந்தனே சாரணையுந் தேவதாரம், மூட்டவே யதிவிடையம் பொன் முசுட்டைவேரு முத்தமனே வெண்கடுகு கடுக்காய்மாஞ்சில், ஆட்ட மிடும் பெருங்குரும்பை யத்திதிப்பிலி யழகான பெருங்காய மோமம் பாரே. 280

ஓமமோ டிந்துப்பு வழையுப்பு வுறக்காய்ச்ச லவணமொடு பொட்டியுப்பு, ஆமமொடு கல்லுப்பு பெருமரத்தின்பட்டை யடவான வுவர்வேரும் வாகனென்று, சோமமுறுஞ் சுத்திசெய்த குக்கிலப்பா

தூக்கடா வைத்துபலக் தூளாயாட்டி, ஏமமுறு மருந்தெல்லா மொன்
றாய்ச்சேர்த்து என்மகனே யாவின்பா லாட்டிடாயே. 281

குக்கில்நெய்.

ஆட்டியந்த நெய்தனிலே கலந்துகொண்டு ஐந்துநாள் கொதிப்
பிட்டு வாருநாளில், மூட்டியே வடித்திருத்துப் பக்கமொன்று முன்
போல நெற்குழியில் வைத்தெடுத்து, ஊட்டுவாய் வாகனெடை வார
மாறு உண்டிடவே பவுத்திரமும் பிளவைசூலை, நாட்டியதோ ரட்ட
குன்மம் விப்புருதிவருத்தம் நாவிற்புண் முலைக்குத்து நாசமாமே. 282

நாசமப்பா பலபுண்ணும் யோனிச்சூலை நலங்கெடுக்கும் பலவிர
ணங் கண்டமாலை, நேசமாய்த் தனிக்குக்கில் நெய்யைச்சொல்ல நீ
கேளு புலத்தியனே நினைவுகொண்டு, வாசமுறும் வேப்பந்தோல்
கண்டங்காரி மைந்தனே பேய்ப்புடலு மாடாதோடை, நேசமெனுஞ்
சிந்திசிறு வழுதலையின்வேரும் நிறையாகப் பத்துப் பலந்தானுட்டே.

ஆட்டியே யெண்குறுணி நீரிற்சேர்த்து அக்கினியில் மாட்டி
யதைக் குறுணியாக்கி, ஊட்டுவாய் நெய்யங்கே யறுகாலப்பா வுறச்
சேரு பொன்முசுட்டை வாய்விளங்கம், தீட்டியதோர் செவ்வியமுந்
தேவதாரம் திப்பிலியு மெவாச்சாரஞ் சத்தியட்சாரம், சூட்டுவா
யேல மஞ்சள் வீழிவேர்த்தோல் சுகமான வெட்பாலை மிளகுதானே. 284

மிளகோமங் கொடிவேலி கடுகுரோணி மூசமாமஞ்சிட்டி யதி
விடையமாஞ்சில், இளஞாகக் கடுக்காயும் வசம்புநல்ல வியல்பான சீர
கமு மிடைதான்கேளு, வளமாகக் காசெடைதா னிரண்டுதூக்கி மைந்
தனே குக்கிலப்பா பல்முமொன்று, களவாகத் தனித்தண்ணிநீர்
விட்டுஆட்டி காய்ச்சடா வாருநாள் வடித்துக்கொள்ளே. 285

வடித்ததொரு நெய்யிலே வாகன்றாக்கி வாருவு கண்டிடவே
மைந்தாகேளு, குடிக்குமுன்னே நசியமிடு வுடம்பிற்பூசு கொடுங்கள்
ராச பவுத்திரங்கள் வீக்கம்போகும், கடித்திரு விற்புருதி கண்டமாலைக்
கிராணிமுதற் கழல்வாதம் பேய்முசுட்டை, துடித்துவிழும் பீனிசமுஞ்
சூலையீளை சுகமாகும் ஆறுப்புண் வாந்திபோமே. 286

புடோல்நெய்.

வாந்திபோம் புடோல்நெய்யை மைந்தாகேளு வாங்கடா சமூல
மூன்றான் பேய்புடோலை, காந்திதரும் வேப்பந்தோ லாயில்பட்டை
கருவேம்பு நாவல்நன் னிரிவேரும், சாந்தியா மத்தியா லாசியித்தி தய
வான திப்பிலி முகிழிலந்தைப்பட்டைவேம்பு, ஆந்தியாங் கரிப்பாலை
வாழைமூல மதிமதுர முத்தக்கா சன்பாய்க்கேளே. 287

அன்பான தாமரையின் றண்டுமூலம் அருளான சிவதைவேரினைத் தும்வாங்கி, இன்பரசவகையொன் றுபலந்தான்பத்து இடித்துநீ பதின் குறுணிநீரிலிட்டு, முன்போலேநாலொன்றுக்குறுக்கிவாங்கி மூட்டு வாய்நெய்யதற்குளறுகாலப்பா, வன்பாகவாவின்பால் குறுணிவிட்டு மைந்தனேமருந்துவகைமாட்டக்கேளே. 288

மாட்டியேயதிமதுர மூமத்தூரான் வாகானஇந்துடனே வெள் ளிலோத்திரம், காட்டவேதிப்பிலியுந்தேவதாரங் கிராம்புமரமஞ்சள் வெருகுதாது, மூட்டவேயதினுடையவளையந்தானு முகிழிலந்தைதன் னரிசந்திவேரும், வாட்டவேதிரிபலையுஞ்செங்கழுநீர்க்கிழங்கு மஞ் சிட்டம்பெருங்கிழங்குவரிசைகேளே. 289

வரிசைபெறும்வெந்தயம் வேப்பலகுகூட வகைக்கங்கேமும் மூன்றுவராகன்றாக்கி, வரிசைபெறுகுக்கிலப்பாமூன்றுபத்துவராகன டரபாலிலேமையக்கபாக்கி, வரிசைபெறக்கலக்கியேநாலுநாள் தீமந்தாக் கினியாகவேவடித்துவாங்கி, வரிசைபெறக் கழஞ்சியுண்ணக்கொடுத் தப்பூசு மயங்காமல்நசியம்நீவார்த்திடாயே. 290

வார்த்திடவும்புண்தீரும் வீக்கந்தீரு மகத்தானசிலேற்பனமும் பிளவைதீரும், சீற்றமுறும்பவுத்திராமும்பருவுந்தீரும் சில்லரையாம் வீக்கமொடுகிரந்திதீரும், ஊற்றமுடன் மண்டலந்தானுண்டபேர்க்கு வொழியாதவிரணங்களொழிந்துபோகும், காய்த்திருந்தகாயாசுவா சம்போகக் கழறுகிறேன்றிசைமூலநெய்யைத்தானே. 291

திசைமூலநெய்.

திசைமூலம்பெருவாகைமுன்னேவில்வம் திறமானபாதிரியுங்கண் டங்காரி, பிசகாதபெருங்குமிழும்வழுதலையும்நெரிஞ்சி பேரானவேரப் பாபலந்தானுறு, வசமாகுஞ்சிற்றாமல்லிபேராமல்லிவகையொன்றுபல மாறுபத்துங்கூட்டி, தசமற்வந்தூளாக்கிப்பாண்டத்திட்டு தண்ணீர தற்கறுகுறுணிதளரவாரே. 292

தளரவிட்டசலமங்கே யெட்டொன்றுக்கித் தனிசெய்யுமிரண்டு படிதானேசேர்த்து, தளரவிடுதிரிகடுகுதிரிபலையிந்துப்பு தனியேலங் கோஷ்டம்விழாவரிசிதானும், தளரவிடாவாலுழுவைசவைச்சலுப்பு தானேமஞ்சமஞ்சுகவராகன்கூட்டி, வளரவரைமூன்றுநாள்சிறுகக்காய்ச் சித் தப்பாமல்நாலாநாள்வடித்துக்கொள்ளே. 293

செந்நாயுருவிநெய்.

நாலாநாள்வடித்ததிலேகழஞ்சுதூக்கி நாளொன்றுக்கிருநேரங் கச்சொல்லு, காலனில்லாசம்போகம்நெஞ்சுரோவும் கிராணிபோம்

நெஞ்சினுள்ளேகட்டுப்போக்கும், ஆலமுறுமானந்த வயிரவனீச்சேர்த்து அப்படியேமண்டலந்தானருந்தினுக்கால், வாலீசீவகனுகும்வச்சிரதேகம் வசிகரஞ்சேர்காயுருவினெய்யைக்கேளே. 294

காயுருவிச்சிவந்ததாய்ச்சமூலம்வாங்கி நறுக்கடாதுலாமொன்று நிறுத்துரீயும், நேயமுன்றாளாக்கியெண்குறுணிநீரில் நிலைக்கவேய வித்துப்பின்னெட்டொன்றாக்கி, ஆயமூடனவி னெய்தானறுகால் விட்டு அதற்குவகைகொடிவேலிவேரின்பட்டை, மாயமறுங்கருஞ் சூரைவேர்வெட்டிமுன்னே மைந்தனேமுசுட்டைவேர்சிவதைவேரே.

மூலமாறுக்குங்கியாழம்.

சிவதைதிரிகடுகிந்துதிரிபலி நேர்வாளஞ் சேங்கொட்டைதான் றியுமரப்பட்டைதானும், சிவதையெனுமாபிலுடன் புங்கம்பட்டை கிறமானகொல்லிமல்லிகூடவேதான், சிவதையெனுங் கஸ்தூரிமஞ் சள்தானுஞ்சிறுபிரண்டைக்கிழங்குடனே காட்டுச்சேனை, சிவதையெனுமரக்கிழங்கு இவைகளெல்லாஞ் சேரடாவகையொன்றுகழஞ்சு மூன்றே. 296

மூன்றுகத்தூக்கியேபாலிலாட்டி முலாவிடு ஆவின்பால்படியும் நாலு, மூன்றொன்றுநான்குநாள்கொதிக்கவைத்து முறையோடேயைந்தாநாள் வடித்துவாங்கி, மூன்றுகுங்கழஞ்சுநெய்யைக்காலத்தி லுண்ணமூலமுகிழ்மூல ரத்தமூலமாறும், மூன்றுகுந்தாதுவிலேபிறந்தமூல முளைசெறியுமாறுவகைமூலம்போமே. 397

மூலமென்றவுள்மூல மிரத்தமூலம் முழங்கியேசலம்விழுகுமூட்சைக்கெல்லாம், சாலவேகுடிநீரைச்சாற்றக்கேளு சுன்ன இலவங்கமொடு இலாமிச்சம்வேர், சிலமுடனேங்கழஞ்சு இடித்துரீயுஞ் சிலமங்கேபடியொன்று ஆழாக்காக்கி, காலமேகொண்டுவரத்தினந்தானஞ்சு காணுதமூளைகரையுங்களிம்புகேளே. 298

மூலமூளைகரையக்களிம்பு.

களிம்பேதுமுகிழ்மஞ்சள் கள்ளிப்பாலால் கரையவேமையனம் போலாட்டிவாங்கி, களிம்பதனேப்பூசிடவுங்கரைந்துபோகுங் கள்ளியிலையெருக்கிலையு மகிலிங்கிலையும், களிம்பறவுமிடித்ததனேப் புகைபிடிக்கக் கரைகிடாதின்னமொரு கியாழஞ்சொல்வோம், களிம்பன்றிவேர்க்கொம்புவெட்பாலிப்பட்டை கடுக்காய்தான் மூன்றிட்டுக்கியாழம்வையே. 299

கியாழம்.

வைத்தகொருகியாழமுண்ணில்மூலம்போகு மைந்தனேயின்னமுண்டு வரிசைசொல்வோம், வைத்திடுவாய் கியாழம்நீ மதுரங்கெள்

T. 15584

தம்மகத்தான நிலவேம்புசிறுகாஞ்சோரிமுல்லை, வைத்தங்கேயெட்டொன்றுய்க்குறுக்கியூட்ட வறள்மூலமுள் மூலம்வாதைதீரும், வைத்திடுவாய்வெட்பாலையரிசிபட்டை மைந்தனேகெருடபச்சைசமபாகந்தூக்கே. 300

மூலக்கிராணிக்குத் துறுவாதிக்கிருதம்.

சமபாகமாகநீயெடுத்துக்கொண்டு சாந்துபோல் பச்சரிசிக்கழுநீர்தன்னில், சமபாகமாட்டியேதேனில்சேர்த்துத் தானுண்ணத்தீருமடாயின்னங்கேளு, சமபாகஞ்சந்தனமுஞ் செங்கழுநீர்க்கிழங்குந்தனியிலவம்பிசினுமிடைசரியாய்ச்சேர்த்து, சமபாகமேடத்திலிட்டுப்பாலில் தாக்கவேகிராணிவகைச்சளங்கள்போமே. 301

களஞ்செய்யும்வசூரிப்புண்ணுறுப்புண்ணுஞ் சரீரத்திலுண்டான சார்புக்கெல்லாம், மூளங்குளிரத்துறுவாதிக்கிருதங்கேளு முறையேது வெள்ளறுகுநெய்யென்பார்கள், பளந்திண்ணிப்பாலியிடபட்டைதானும் பாங்காகநாலெட்டுப்பலமுந்தூக்கி, விளந்தணிக்கும்வெள்ளறுகு சாரணைநாழிவிட்டிடுவாய்நெய்யதற்குளஞ்சுழக்குதானே. 302

நெய்யிட்டுப்பட்டையைநீ யிடித்துத்தானும் நீர்விடுவாயெண்ணுழிநேர்ப்பாய்க்காய்ச்சி, ஐயனேரண்டுபடியாக்கிக்கொண்டு அப்பனேநெய்யுடனேயாற்றியங்கே, மெய்யிட்டவாவின்பால்படியுமொன்றுமேன்மதுரம்பாலேமுகிழிலந்தைபீலாமிச்சு, வையிட்டகன்ஞரி கொம்பாக்கு மருவுறையுங்குங்கிலியமலர்க்காய்காரணே. 303

மலர்க்காயு முந்திரிகைச்சோமடவி மைந்தனேவெள்ளறுகுகொட்டிமூலம், மலர்க்காயுமுத்தக்காய்சல்லிமூலம் வரிசைபெறுமுளரியிடவீளையந்தானும், மலர்க்காயும் வகைக்கங்கேகழஞ்சுமூன்று வரைந்தாட்டிப்புகட்டிநீ மூன்றுநாள்தான், மலர்க்காவி நாலாநாள்வடித்துவைத்து மனேன்மணியைச்சதாசிவனீவணக்கஞ்செய்யே. 304

வயித்தியமுறை.

வணங்கடாகணபதியைச் சித்தாமுத்தர் மகத்தானரிஷிதேவர் ஞானத்தோரை, பிணங்காமலடிபணிந்துகருவம்விட்டுப் போற்றிநீ வயித்தியஞ் செய்யுநிதமெய்தும், இணங்காதபேருட யிணங்கவேண்டாம் இனமறிந்தவுண்மைசொல்லுயில்லாவிட்டால், உணங்காதசமாதியிலேநின்றுகொண்டு வொப்பாதவதிதியெனவொடுங்கியாடே. 305

ஓடுங்காதநெய்ப்பாகக்கழஞ்சுரண்டு உண்டுவாருச் சூரியப்புண்ணுப்புண்ணும், ஓடுங்காதவீக்கங்கள் ரத்தபித்த மூளக்கிரந்திபிறக்

இரத்தி ஓடுக்கள்சூலை, ஓடுங்காததீச்சுடு புண்வீக்கந்தூக்கம் ஓடிப்போ
ம்நெய்கொண்டவுடனேயப்பா, ஓடுங்காதபேய்ச் சொறிக்குச்சீந்தி
னெய்யை யுரைக்கிறேன்சீதபித்தமென்றும்பேரே. 306

பேய்ச்சொறிக்குச் சீந்தில்நெய்.

பேரானசீந்திலுடன்வேப்பம்பட்டை பேய்ப்புடலும்வகைக்கங்
கேபலம்பத்தாக, சீராகவிடித்ததனைக்குறுணிநீரில் செலுத்திநீ யிட்டு
நாலொன்றுக்கி, வாராகநெய்த்தாளிக்குள்ளேமைந்தா வாரடா நெய்
படிதான்மருந்துசொல்வோம், பேரானபேய்ப்புடலு மிலாமிச்சம்வே
ரும் புகழ்மஞ்சள்மரமஞ்சள் அகில்கெந்தங்கேளே. 307

கெந்தமொடுகச்சோலந்தேவதாரங் கிளர்கோட்டஞ்செஞ்சந்தங்
கிளரேலத்துடனே, அந்தந்தவகைக்கப்பாகழஞ்சுரண்டு ஆட்டியங்கே
கொதிப்பித்துத்தினந்தான்மூன்று, பந்தமுடனலாநாள்வடித்துவாங்
கிப் பாங்காகவிருகழஞ்சுவுண்ணச்சொல்லு, வந்தசொறி சிரங்குப்புண்
கட்டைவாங்கு மாறுகக்கருங்குட்டம்வாங்கிப்போமே. 308

மூச்சிலுய்வாயிலும்விழுகிற இரத்தவெள்ளுடைப்புக்கு.

வாங்குமடா நசியத்தாலனேகந்துன்ப மருந்தைநான் சொல்லு
கிறேன்மயக்கம்நீக்கி, பாங்கானவேப்பந்தோல் கடுகுரோணி பருங்
கோட்டை முந்திரிகை பேரீச்சம்பழமும், பாங்காகமுருக்கம்பூ நெல்
லிப்பூவும் பருத்திதிப்பிலியரத்தையனைத்துமைந்தா, ஈங்காமல்நசிய
மிடத்தீருங்கண்டா யிரத்தவெள்ளுடைப்புக்குமியம்பக்கேளே. 309

கேளப்பாசிற்றாமல்லிகீழ்க்காய்நெல்லி கிளர்கண்டங்கத்திரிவேர்
வேப்பம்பட்டை, நாளப்பாகோட்டமுடன் கடுகுரோணிநலமூந்திரி
பேரீந்து அத்திதிப்பிலி, தாளப்பா முருக்கம்பூ நெல்லிமுள்ளி தய
வானசிறுதேக்கு இலாமிச்சம்வேர், ஆளப்பா அதிவிடையமிவையோ
ரொன்று அப்பனேமும்மூன்று விராகன்தூக்கே. 310

பறங்கிப்புண் குட்டரோகம் சூலை இதற்குச் சடைச்சிநெய்.

தூக்கிநன்றாயாட்டியே நாழிநெய்யில் சுவறவே கலக்கிநன்றாய்
வடித்துக்கொண்டு, தாக்குவாய் காசெடைதா னுண்ணச்சொல்லில்
சாதகத்தைக்கேள்மகனேசாற்றுறோம்நாம், வீக்குமேவெள்ளுடைப்பு
மூக்குவாயில்விழுகிறதோரத்தமெல்லாம்வீழொட்டாது, பாக்கியங்கள்
செய்தவர்க்கேயிந்தால்தான் பண்பாகச்சிக்குமடாபற்றிப்பாரே. 311

பாரப்பாபறங்கிப்புண் சூட்டஞ்சாத்தியம் பரிவானவிசம்படாதா
மரைகட்கெல்லாம், சாரப்பாசடைசிநெய்யைச்சாற்றுரோகாம் சடைச்
சியுடபட்டையங்கேதுலாமுமொன்று, சேரப்பாயெண்குறுனி சலத்
துக்குள்ளே தெரித்திட்டுஎட்டொன்றுய்க் குறுக்கிப்பின்பு, வாரப்பா
யிருநாழியாவிநெய்யை மைந்தனேபடிஒன்றுநிம்பநெய்யே. 312

நிம்பநெய்யுங்கச் சந்திராய்சாறும் நாழிநீவிட்டு அதிமதுரம்பேய்
புடோலு, மின்பமுறும்பொற்கொன்றை மூலந்தானு மியலானபேய்
பிரட்டிவெட்பாலையரிசி, அன்புபெறுமதிவிடையம்பற்படாகம் அத்தி
திப்பிலிவிழாவரிசி வேப்பம்பட்டை, உம்பர்புகழ்கொடிவேலி கடுகு
ரோணி யுற்றதோர்நிலவேம்பு பெருங்குறும்பைவேரே. 313

வேருடனேவகையொன்று விராகன்மூன்று மீருமலாட்டியந்த
நெய்யிற்போடு, வாருமுடன்வடித்தாறி வைத்துக்கொண்டு மாட்டாச
கெந்திமனோசிலையிம்மூன்றும், சீருடனேமும்மூன்றுகழஞ்சிதூக்கிசித
ருமற்சாமமொன்றுதூளாயாட்டி, நேருடனேநெய்யிலிட்டு ஆறவைத்
துநீனவாகஆளறிந்துசெய்வாயே. 314

ஆள்பிலமு நோய்பிலமு மறிந்துகொண்டு அப்பனே மூக்கழஞ்சு
பிருகழஞ்சுதானும், நாள்பெறநீயுள்ளுக்குமேலும்பூசு நலமாகமூன்று
நாளைப்பைப்பூசி, கோள்படவேகுளித்துவரச்சொன்னுயானுல்குற்ற
மறும்பறங்கியிடகுதங்களத்து, வாள்படுபுண்போலரிக்குங்கிரந்திசூலை
வாங்காதசிறுசொறிசெம்புண்கள்போமே. 315

பறங்கிபுண் சூலைப்புண் முடங்கல் இதற்கு நிம்பம்.

புண்போகுமிவையெல்லாம்பறங்கிரோகம் புகழ்ந்துசெய்யும்வாக
டந்தான்பொய்தானில்லை, புண்போகுஞ்சூலைபோமுடங்கல்தீரும் பேர்
பிருகசஞ்சீவி நெய்யைச்சொல்வோம், புண்போகுநெடுகாலே வேப்பம்
பட்டை புரைதீரஐயைந்து பலந்தான்றாக்கி, புண்போகஉறுக்கிநீபஞ்சி
போலே போட்டிடித்துப்பாண்டத்தில் பொருந்தவையே. 316

பொருந்தவைத்துநீர்படியு மிருபத்தெட்டு புரட்டிநீ யஞ்சுதினம்
ரவியிலாட்டு, வருத்தியவுதப்பிசைந்துமேவடிகட்டிமைந்தா மாட்டடா
நாலொன்றுய்வற்றக்காச்சி, விருந்தாகுநெய்படிதானிரண்டுவிட்டுவேப்
பெண்ணெபடிரண்டுவெற்றிலைச்சார், மருந்தாகும்வேளைச்சார்மணத்தக்
காளி மைந்தனேகொச்சிச்சா றுத்தாமணிச்சாறே. 317

மணிச்சாறுமுடக்கொத்தான்குப்பைமேனி வகையாறுசாறுபடி
மூன்றேமூக்கால், கணிப்பானசிறுகுறிஞ்சிவனூர்வேம்பு காட்டுமல்லி

பெருமருக்துளசிகொச்சி, தணிப்பில்லாத்தூதுவளையழிஞ்சிவேளை தய
வானகாரத்தைசெங்கத்தாரி, பனிப்பானமூடக்கொத்தா னுத்தமதாளி
பண்பானமேனிசெருப்படிதானுமே. 318

ஆரப்பாயிவைமூலங்கழஞ்சுமூன்று ஆனபாலிலாட்டிநீயின்னங்
கேளு, ஓமப்பா வெண்காரஞ்சீனக்கார மூற்றயிருசீரகமூ மோமந்தா
னும், வேமப்பாசதகுப்பைகுடசப்பாலிலெள்ளுள்ளியுடன்பூலாவிருட்
சந்தானும், காமப்பாகுங்கிலியங்காசுக்கட்டி நலமானசண்பகப்பூகாட்
டக்கேளே. 319

நாட்டடாகழஞ்சியொன்றுவகையொன்றப்பா நல்லபழச்சாற்றி
லாட்டிவாங்கி, ஊட்டடாகளிப்பாக்கு பத்துசேர்த்து வுறப்புகட்டு
நெய்யிலேகலாச்சேர்த்து, மூட்டடாவடித்திறக்கி வைத்துக்கொண்டு
மூன்போலச்சூதம்மண்டுகெந்திகொண்டு, தீட்டடாகுக்கிலஞ்சுகெவுரி
கால்தான் திறமானதூரிசியரைக்கழஞ்சுகூட்டே. 320

கூட்டியேபழச்சாற்றிலாட்டிவாங்கிக் கொடுநெய்பிற்புகட்டிமைந்
தாவைத்துக்கொண்டு, ஊட்டுவாய்நாள்மூன்றுசென்றபின்பு வுண்டுவா
மூன்போலயுண்மைகேளு, வாட்டியதோர்மூன்றுவகைசூலப்புண்கள்
மாறுதகளர்வாதஞ் சூலிபோகும், நாட்டில்வளர்பதினெட்டுப் பறங்கி
தீரும் நலமாகப்பத்தியமாய்க்கொள்ளச்சொல்லே. 321

புண்ணுக்குக்களிம்பு.

சொல்லுகிறேன் புண்களுக்குக் களிம்புதன்னை சூதமடாவராகன்
ரண்டுலிங்கம்காலு, வெல்லுகிறேன்கெந்திகாலரையதாகும்வீரகவிவை
மூன்றுசரக்குமாட்டி, கொல்கிறதோராவினிடவெண்ணைவாங்கி குறை
யுமட்டுந்தினந்தோறுமாட்டிவாங்கி, செல்லுமடாதிசைக்கெல்லாமிகக்
களிம்பு தீராதபுண்ணெல்லாந்தீரும்பாரே. 322

திரிகடுகுபலாதிநெய்.

தீருமடாகுரைநோயுங்குட்டம்புண்ணுந் திறமாகவுடம்பெல்லாங்
களிம்புபூசி, வாரமூடனந்திக் குளிகைசொல்லு மைந்தனேபுண்ணுறு
மட்டுஞ்செய்வாய், நேரமூடன்வீரணத்தில்பூசினீயும் நெருப்பிலேகசி
வெடுக்க வாட்டச்சொல்லு, பாரமூடன்திரிபலாதி நெய்யைமைந்தா
பாடுகிறேன்திரிகடுகுதிரிபலையோடாறே. 323

ஆறுடனேகொடிவேலி வேரின்பட்டை ஆறியசிவதைநில வாம
ணக்கன்வேறு, வீறுடையமரமஞ்சள் பொற்கொன்றைக்காயும் வெற்
றிபுரியதிவிடையங் கடுகுரோணி, வாறுகேள்மஞ்சள் மாமஞ்சள்பின்

னும் வட்டத்திருப்பிமலிதாங்கி வகைக்குமைந்தா, மீரமல்லிராகன் மூன்றரையாத்துக்கி விரைந்தாட்டிநாழிநெய்யிற் கலக்கிக்காய்ச்சே.

தூதுவளைநெய்.

காய்ச்சுமுன்னேகள்ளிப்பாலுழக்குவிட்டுக் கருத்தாகவடித்துநீ மடிக்கச்சொல்லு, வீச்சானகுன்மமுதல்குட்டம்தீரும் வெண்குட்டம் பாண்டுவிஷக்கடியுந்தீரும், வாச்சிருந்தசூலிபோமூன் மத்தம்போகு மைந்தனேதூதுவளை நெய்யைச்சொல்வோம், மாச்சலுலகத் தூதுவளை வேப்பம்பட்டை மகத்தானசீந்தியிலைக்கொடியுங்கூட்டே. 325

கூட்டடாபேய்ச்சுண்டைப்பழமூதான் கொடுங்கண்டங்கத்திரி பின்வேருந்தோலும், நாட்டடா வகைக்கங்கேகழஞ்சுநாலு நலமாக வாட்டியேநாழிநெய்யில், ஊட்டடாவடித்திறுத்து வைத்துக்கொண்டு வொருபோதைக்கிருகழஞ்சுவுண்ணச்சொல்லு, பூட்டடாவியாதியெல் லாம்நடுங்கிப்போகும் புகலுவோங்கலியாணகிருதம்பாரே. 326

கலியாணக்கிருதம்.

பாரப்பாமேகங்க ளிரண்டுபத்தும் படுமவத்தைவிப்புருதி பாண்டு பாகம், தீரப்பாகலியாணக் கிருதங்கொண்டு செப்புகிறேன் மருந்து வகைதிறமாய்க்கேளு, நேரப்பாநிலப்பனைவேர்தண்ணீர்மிட்டான் நெ ருஞ்சியொடுகொடிவேலிநன்னரிவேரும், சேரப்பாவழுதலைவேர்சிற்ற மல்லி தும்மட்டிசித்தமட்டிசாரணைவேர்த்திராயே. 327

திராயொடுவழுக்குரு பாதிரிவேர்வில்வஞ் செப்பரியமுத்தக்காசு தாமரையின்றண்டு, திராயிவைகள்வகைக்கங்கே பலத்தைக்கேளு சேர டாமூன்றரைதான்தறித்திடித்து, துராய்தூணிநீரிலிட்டுக்குறுணியாக் கிச் சொல்லுகிறேனிச்சாற்றைத்துடர்ச்சிவிட்டு, நிராய்கரும்புவெள்ள ரிக்காய் பொன்னுங்காணி நெல்லிக்காய் பூசனிக்காய் மூள்ளிலவங் தோலே. 328

இலவந்தோலிலுப்பையிலைச்சாறெல்லா மென்மகனே வகையொ ன்றுபடியுமொன்று, நலமானவாவின்பால்படிதானலு நறுநெய்யும்படி ரண்டுகற்கங்கேளு, பிலமானதோடைவேர்சித்தமல்லி பேரானநன்னரி யமூக்குருவேர், மலமாற்றுஞ்சாரணைவேர்நெய்தல்மூலமலர்ந்தாமரை வளையமூந்திரிகைப்பழமே 329

மூந்திரிகைபேரீந்துகடுகுரோணி முதுவுறையும்வெட்டிவேர்மது ரங்கோட்டம், மந்தமுறுமிலுப்பைப்பூமலர்க்காய்கந்தம்மாகாளிக்கிழங் குடனேதேவதாரம், மந்தாரமாஞ்சடா மாஞ்சில்வெட்பாலையரிசி மஞ் சிட்டியதிவிடையமஞ்சள்தானும், பந்தமுறுங்கார்கோலமிருசீரகமும் பண்பானசெவ்வியமும்பரிந்துதூக்கே. 330

பரிந்தெடுத்துவகையொன்று கழஞ்சியொன்று பண்பாகவாட்டி யேநெய்யிலிட்டு, எரிந்துநீவடித்திறக்கிவிராகனென்று இயலாகவுண் டிடவேயிடுக்கமில்லை, கரிந்ததொருமேகங்க ளிரண்டுபத்துங் காட்டு முன்னேகரியுண்டகனிபோலாகும், விரிந்தபிரமேகங்களிரண்டுபத்தும் விப்புருதிவிஷபாகம்பாண்டுபோமே. 331

கலியாணக்குழம்பு சகலவியாதிக்கும்.

பாண்டுபோங்கலியாண மயனஞ்சொல்லப் பார்மகனேயிம்மாலி னின்மையாகும், வேண்டியதோர்நெல்லிக்காய் தனிநீராக விரனன்று யிடித்திறுத்துப்படியும்நாலு, தாண்டுபுகழ்வெள்ளோவெல்லம் பலத்தைக் கேளு தயவாககாற்றுலாம் நிறுத்துச்சேர்த்துத், தூண்டுகாரெண்ணெ யுழக்குசேர்த்து சிருவதைக்குழம்புபோல் சுண்டச்காய்ச்சே. 332

காச்சிவைத்தகுழம்பதற்குமருந்துசூட்டக் காண்மகனேதிரிபலை யும்வெட்பாலையரிசி, வாச்சுபுகழ்திப்பிலியுங் கொடிவேலிவேரும் மகத் தானவோமமொடுகடுரோணி, வீச்சுயர்ந்தகொத்தமல்லிகாட்டுத்திப் பிலி விழாவரிசிமிளகுசீரகமஞ்சிட்டி, பாச்சடாவகையொன்றுபலந்தா னென்று பண்டானகிரிகோபம்பலந்தானெட்டே. 333

எட்டுடனேமுன்மருந்தை சேர்த்துக்கொண்டு இடித்துநீதூளாக் கிவடியுங்கட்டி, விட்டிடுவாயுழக்கெண்ணெய்பாகிலப்பாவிரவியதுரண்டு கொதிப்பிட்டபின்பு, கட்டுடனே சூரணத்தைத் தூவித்தூவிக் காய்ச் சடாமயனம்போற்களறிவாங்கி, மட்டுடையபழங்கலத்திட்டுவைத்து மைந்தனேகழஞ்சுண்ணவாறுகேளே. 334

வாறுகேள்பிரமேகங்காமாலைபாண்டு வளர்குட்டமறுமூலங்கிரிச் சனமுங்குன்மம், வீறுகவிழுந்துமுறிந் தெலும்புமூறும் விட்டசந்து காலுறுப்புமேவிப்போகும், தேறுதஅரிசூலமிடறுகொன்றை தெளி ந்துசுயம்பாடுவான்சித்திபுத்தி, கூறுகவுண்டாகும்வெகுபிலமுமெய்துங் குறையின்றித்திரைபோகும்நரையும்போமே. 335

நாட்பட்ட சுரத்துக்கு முந்திரிகைநெய்.

பேர்ப்பாநாட்பட்ட சுரத்துக்கெல்லாம் புகழானமுந்திரிகை நெய் யையுண்ணில், ஆம்ப்பாமுந்திரிகை வெட்பாலையரிசி யத்திதிப்பிலிகெந் தம் அதிவிடையம்நெல்லி, வேமப்பா நிலவேம்பு விலாமிச்சம்வேரும் வில்வவேர்வகைக்கங்கேகழஞ்சுதூக்கி, தாமப்பாதனிநீராலாட்டிவாங் கித் தாக்கடாவாவினெய்யிற்படிதாஞென்றே. 336

படிவிட்ட நெய்க்குள்ளே தண்ணீர்காழி பாய்ச்சிநீ மந்தாக்கினி யில் வைத்துநீயும், அட்டிவிட்ட நீர்வற்றில் பதத்தைநோக்கி யப்

பனைவடித்திறுத்துக்கழஞ்சுமூன்று, குடிகொண்டசுரம்போகுங்காந்தல்போகுங்கூரானவயிறெரிவுமிருமல்போகு, முடியற்றகெண்டைபோஞ்சொரியும்போகு முதுசொல்லாந்திரிகோபவிபரங்கேளே.

விபரங்கேள்சந்தனமுஞ்சிவதைதானும் வெள்ளைக்குங்குலியமிவைதிரிகோபமாச்சு,விபரமாய்த்தெரியாதமருந்தையெல்லாம்மேன்மக்கள் சொலக்கேட்டு விளம்பிக்கொள்வாய், விபரமறியாதவர்களாகாசகெருடன் வீரூனபழுபாகல்கொல்லன்கோவையென்பார், விபரமாய்த்திப்பிலிநெய்யதனைக்கேளுவிடாதசுரம்போவதற்கு விள்ளுறேனே. 338

திப்பிலிநெய்.

விள்ளுறேன்திப்பிலியுங்கடுகுரோணி வெட்பாலையரிசியுடன் கீழ்க்காய்நெல்லி, கள்ளமறும்வில்வவேர்வேப்பம்பட்டை கடுதான்றிக்கெந்தமடாகோடைதானும், தெள்ளுபுகழிலாமிச்சமுந்திரிகைப்பழமுஞ் சிறியதொருசண்பகமுமதிவிடையந்தானும், துள்ளுநீவகைக்கங்கேகாசுதூக்கிச் சுகமாகத்தண்ணீரிலாட்டிவாங்கே. 339

வாங்கினதேர்மருந்துக்குத்தண்ணீர்நாழி வாக்காகறுநெய்தானுழிவார்த்து, பாங்காகமந்தாக்கினியைமூட்டிப் பதமாகவடித்திறுத்துக்கழஞ்சிரண்டு, தேங்காததேன்குத்திநெய்யுஞ்சேர்த்து தின்றிடவேசுரம்போகும்விக்கல்போகும், தாங்காதவழலைபோம் அரோசிகம்போந் தலைநோய்யும்பிரமேகந்தணியுந்தானே. 340

சன்னிசுரத்துக்குச் சீதேவிநெய்.

தணிந்திடவேசன்னிமுதல்சுரத்துக்கெல்லாஞ் சாற்றுகிறேன் சீதேவிசெங்கழுநீர்நெய்யை, துணிந்தெடுப்பாய்நீதேவி சாறுபடிநாலுசொல்லுகிறேன்மஞ்சிட்டிதாமரையின்பத்திரி, கணிந்தேதலமிலவங்கங்கடுகுரோணி கனத்தகோட்டம்நன்னரிமதுரங்கெந்தம், மணிந்தசாக்கோரென்றுவிராகன்தூக்கி மைந்தனேயாட்டியதைவடித்துக்கொள்ளே. 341

வடித்தகொருநெய்யதனைக்கழஞ்சியுண்டு மைந்தனேமேலுமந்தநெய்யைப்பூசில், கடித்தசுரமெண்பத்துநாலுந்தீருங் கண்குளிரும்புண்தீருங்கலருஞ்சித்தி, படித்தினியாமின்னமொரு நெய்யைசொல்வோம் பண்பாகச்செங்கழுநீர்சாறெண்ணழி, விடித்தேதலமிலவங்கமதிமதுரங்கோட்டமிக்கசிட்டிசண்பகப்பூகடுகுரோணியே. 342

ரோகணியுஞ்சந்தனமும்வெட்டிவேரும் நுணுக்கழுறுநன்னரிநீர்வள்ளிக்கிழங்கும், நாகமுறுமிலாமிச்சஞ் செங்கழுநீர்க்கிழங்கும்

நரிபிரட்டிமுத்தக்காசுவதைக்கோர்காசு, நேகமுடன்றாக்கியதையா
ட்டிவாங்கி ரேகிப்பாய்மூன்றுபடிநெய்யிற்குள்ளே, ராகமுறக்காய்
ச்சிவீடித்துக்கொள்ளு நலமாகச்சுரங்கள்முதல்சன்னிபோமே. 343

காடாசுவாசத்துக்கு ஆடாதோடைநெய்.

போமப்பா களங்கமெல்லாம் போவதற்குப் பூட்டுகிறே ஞடா
தோடைநெய்யைத்தானே, வேமப்பாகண்டவுட னேய்களெல்லாம்
வெட்டியறுந்தோடைக்காற்படிதான்ரண்டு, நாமப்பாப்சுவின்பால்
படிதான்ரண்டு நறுநெய்தான்படியிரண்டுஅத்திதிப்பிலி, ஆரப்பா
திப்பிலியுங்கொடுவேலிவேரும் அடைவாகயிந்துசுக்கு யெவாச்சார
ங்காணே. 344

எவாச்சாரஞ்சத்தியிடசாரந்தானு மிவையெலலாமோரொன்று
கழஞ்சியொன்று, அவாச்சாரமின்றிநீயுடனேயாட்டி யப்பனேபத்
ததனிலேவடித்துவாங்கி, முவச்சாரமூற்றிரண்டுதேசகால மொவ்
வொருகழஞ்சியாயுண்ணச்சொல்லு, மெவச்சாரமந்திக்குக்கழஞ்சுபா
தி யென்மகனேயுண்மைதனேயியம்புறேனே. 345

இயம்பவேநெஞ்சுவலிகுறுகுறுப்பு யீளைவலிகிறுகிறுப்புகாயா
சுவாசம், இயம்பவேயெரிகுரலும்பித்தப்பாண்டு யெழுமூலமுள்மூல
மகவைவீப்பு, இயம்பவேபழஞ்சுரமும் வெப்புப்பார்வையியல்பான
வசிரண்டுமக்கினிமாந்தம், இயம்பவேபறந்துவிடும்விபரங்கேளு இ
வைகளெல்லாம்நறிக்கியியல்புகூட்டே. 346

நாட்பட்டசுரத்துக்கு முலைப்பால்நெய்க்கிருதம்.

கூட்டடாவேர்க்கொம்புகிபாழம்வைத்துக் கொடுத்திடவேநோய்
களெல்லாஞ்சித்தியாகும், நீட்டடாமுலைப்பால்நெய்சஞ்சீவியப்பாநெ
றியாகமுலைப்பால்தான்படியும்ரண்டு, காட்டடாகொடுப்பைவேர்வெ
ள்ளரியின்விரையும் நல்லதாருபூசனிக்காய்விரையுஞ்சேர, மூட்ட
டாநெல்லிமுள்ளிமதுரமப்பா முறையாகவிருகழஞ்சு வுலாவாட்டே.

ஆட்டியதேர்மருந்துக்குள்நெய்யும்நாழி யடைவாகவிட்டுநீவடி
த்துமைந்தா, ஊட்டுவாய்கழஞ்சிரண்டுமேலும்பூச வுடல்வெக்கைசுர
வெக்கையுடம்புலர்த்தல், வாட்டிவருமெலும்புருக்கிகணைகள்காசவர
ட்சியொடுபிரமேகம்வெட்டையோடு, காட்டியேமறைத்தாபோல்கா
ணுதோடுங் கருத்தாகயின்னமொருநெய்யைக்கேளே. 348

ஆடாதோடைக்கிருதம்.

கேட்டிடவேநாட்பட்டசுரத்துக்கெல்லாம் கிருதமடாதோடை
வேர்கீழ்க்காய்நெல்லி, வேட்டிடவுங்காட்டுமல்லிவேர்நாகுப்பை வெ

லிப்பருத்தியோடுகுப்பைமேனி, நாட்டில்வளர்வழுதலைவேர்நத்தை
ச்சூரிநலமான மருட்கிழங்குஅப்பைமூலம், ஊட்டுவாய்வசம்புள்ளிக்
கஸ்தூரிமஞ்சள் உற்பனஞ்சேர்ந்லபாம்புகண்டந்தானே. 349

கண்டமொடுவிராகனங்கேளூன்றுதூக்கி கலராட்டிநாழிநெய்
யிற்கலந்துகொண்டு, கண்டமெனும்கல்லெண்ணெய்ரண்டெண்ணெ
ய் கலந்திடுவாய்வகைரண்டுபடிதானென்று, கண்டிதமாயிவையெல்
லாங்காயும்போது கருங்குங்கிலியம்ரண்டுகாசுதூக்கி, கண்டிடமாய்
நிம்பபழச்சார்ஊற்றக்கேளு கனிந்தபழமஞ்சங்கேபிழிந்து ஆட்டே.

வெள்வேல்நெய்.

ஊட்டியேவடித்தப்பாவைத்துக்கொண்டு வள்ளுக்குக்காசெ
டைதானுண்ணச்சொல்லு, நாட்டியேமேலுக்குந்துவாலைபோடுநாட்
பட்டசுரந்தணியுமின்னமொன்று, வீட்டியேவேல்நெய்யைச்சாற்றக்
கேளு வெள்வேலம்வேருடனேகளர்ச்சிவேரும், நீட்டியதோர்பூலை
வேர்காயுருவிவேரும் நேரானவிஷ்ணுகிரந்திவேரே. 351

சந்தனாதிநெய்.

வேருடனேவசம்புள்ளிசமனுய்க்கேளு மீறுமற்கழஞ்சியைந்து
ஆட்டிவாங்கி, ஆரவேநாழிநெய்யிற்கலந்துகொண்டு அப்பனேகடித்
திரித்துக்கழஞ்சுகொள்ள, வீரமுள்ளபழஞ்சுரங்களனைத்துந்தீரும்
வெற்றியுள்ளநெய்யாச்சுதயிலங்கேளு, தாருறைந்துவவ்வொழுகுஞ்
சந்தனாதி தனிநெய்யைச்செப்புகிறேன்சார்ந்துகேளே. 352

சார்ந்துகேள்சந்தனமும்வெள்ளிலோத்திரந் தனிமதுரமுந்திரி
கைமுக்கழஞ்சு, சாந்துபேசலிவையெல்லாம்பாலிலாட்டி தண்ணீர்
தான்படியொன்றில்கலக்கிக்கொண்டு, சார்ந்துநின்றுநெய்தானுழியூ
ற்றி தயவாகவடித்திறுத்துதலியிற்றேய்த்து, சாந்தமாயரப்பிட்டு
முழுகச்சொல்லு தாபசுரம்பூதசுரந்தணியும்பாரே. 353

சந்தனாதித்தயிலம்.

பாரப்பாஇன்னமொருசந்தனாதி பகருகிறேனமுக்குருவேர்பொ
டியும்நாழி, சேரப்பாசித்தாமுட்டிப்பொடியும்நாழி சிறப்பானகொம்
பரக்குப்பொடியும்நாழி, நேரப்பாயிம்மூன்றுபதக்குநீரில் நீயிட்டு
நாலொன்றுய்க்குறுக்கிவாங்கி, ஆரப்பாகல்லெண்ணெய்நாழிவிட்டு
அப்பனேகுழம்புமோர்நாழியூற்றே. 354

மோர்விட்டுநன்னரியரத்தைகோட்ட முகிழ்மதுரஞ்சதகுப்பை
கடுகுரோணி, வாரிட்டகச்சோலந்தேவதாரம் மஞ்சளொடுமரமஞ்ச
ள்கஸ்தூரிமஞ்சள், மாரிட்டபெருங்குரும்பையமுக்குருவேர் மஞ்சி

ட்டிகெந்தமொடுகாகப்பூவும், நேரிட்டவகையொன்றுவிராகமொன்று நிறுத்திநீயோட்டியதைக்கலக்கிக்காய்ச்சே. 355

ஆடாதோடைத்தயிலம் மதுக்காளித்தயிலம்.

காச்சப்பாமூன்றுநாள்கொதிக்கச்செய்து களரவேகாலாகாள் வடித்தமைந்தா, தேச்சப்பாவுடம்பெல்லாம்நியம்பண்ணு தீராத சுரந்தணியுமுடம்புந்தேறும், பாச்சப்பாதோடைவேரெண்ணைதன்னைப் பாடுகிறேன்மதுக்காளித்தயிலமென்பார், வீச்சப்பாயதிமதுரம் வேப்பம்பட்டை வியிலித்தோல்வேம்பினிடவித்துவாங்கே. 356

வாங்கடாதிராய்வேருமத்தம்வேருமகத்தான குன்றிவேர்மேனி வேரும், பாங்காகுமிந்துப்புமிவைகளெல்லாம்பரிவுடனேவிராகமொன்றுதூக்கிக்கொண்டு, ஆங்கடாதோடையிலைச்சாறுவிட்டு ஆட்டிநீயச்சாறுநாழிவிட்டு, தேங்காதநல்லெண்ணெய்காழிவிட்டு தீயிட்டுப்பதமாகவடித்துக்கொள்ளே. 357

சீதசுரத்திற்குமோரெண்ணெய்.

வடித்திறுத்ததயிலத்தைமேலுமிட்டு மைந்தனையுள்ளுக்குக் கொள்ளச்சொல்லு, பிடித்ததொருசன்னிபோஞ் சுரமும்போகும் பேர்பெரியமோரெண்ணைசீதம்போகும், தடித்தமோர்நாலுபடியெண்ணெய்காழிசார்பானசித்தாட்டிவேர்த்தோலுங்கூட, படித்தகோட்டம்வேர்க்கொம்புபொன்மெழுகுதானும் பாங்கானமுசுட்டைவேர் மதுரமிந்தே. 358

இந்துப்புமஞ்சளொடுதேவதார மியலானநன்னரிமாகாளிமூலம், சிந்துபுகழ்பெருங்குரும்பைதக்கோலம்புட்டில் சீந்திவேரிலாமிச்சஞ்சிறுகீரைவேரும், சந்தனமுறுந்தகரமொடுகச்சோலமேலஞ் சாதிக்காயிலவங்கப்பத்திரிதானும், பந்தமுறுஞ்சாரணைவேர்திப்பிலியின்மூலம் பாங்காகவகைக்கங்கேகாசுதூக்கே. 359

சீதேவித்தயிலம்.

காசிடைதானிறுத்தங்கேமோரிலாட்டிக் கலக்கிநீகாய்ச்சியேவடித்துமைந்தா, நேசமுடன்கழுத்துக்கீழ்தேய்த்துப்போடு நிமிஷத்திற்குளிர்காய்ச்சல்பித்தருட்சை, பாசமுறுமந்தசுரஞ்சீதருட்சைபலசுரமும்விஷசுரமும்பறக்குங்கண்டாய், தேசமறுஞ்சீதேவித்தயிலங்கேளு தீராதசுரமெல்லாந்தீருங்காணே. 360

காணப்பாசீதேவிச்சாறுநாழி கலசவார்சிந்திச்சாறதுவும்நாழி, ஊணப்பாயெண்ணெயுரிகெய்யவ்வண்ண முத்தவதிமதுரமொடுதேவதாரம், பூணப்பாநாகப்பூகோட்டங்கெந்தம் புகழ்பெறவேமஞ்சிட்டிசதகுப்பைதானும், மூணப்பாவெட்டிவேர்குருக்கத்திப்பூவு மூயர்மாஞ்சில்அகிற்கட்டைகொம்பரக்கே. 361

அரக்குடனேவிலாமிச்சம்தாமரையின்வளையம்அதினரும்புசெஞ் சந்தமேலந்தானும், இரக்கமுறுகன்னிரிகச்சோளக்கிழங்குவலமொடு லவங்கப்பட்டைபத்திரியும், கரக்கமலநெய்தல்வேர்கடுகுரோகணி கானசித்தாமட்டிவேர்பெருங்குப்பை, திரக்கவேயரத்தையுடன் திப் பிலிதானுஞ்சேரவேவகைக்கொவ்வோர்காசுதூக்கே. 362

செங்கழுநீரேண்ணை.

தூக்கியேபால்விட்டுஆட்டிவாங்கி சூட்டிபெரிமந்தாக்கினியைமூ ட்டி, தாக்கியேவடித்திறுத்துவுடம்பிற்போடு சகலசுரமேலெரிப்பு தாகம்போகும், தேக்கியபின்னமொருமார்க்கங்கேளு சீதவிசெங் கழுநீர்சாறுநாழி, நீக்கமில்லாநெய்யுடனே யெண்ணைநாழி நீசேரு மேல்மருந்தைநிரைக்கிறனே. 363

நிரைப்பானவெட்டிவேர்கடுகுரோணி நேர்கெந்தியதிமதுர னி ரைதானென்றுய், அரையப்பாமும்மூன்றுகழஞ்சுதூக்கியப்பனேக லக்கியேவடித்துநீயும், கரையவேயுள்ளுக்குமேலுமூட்டு கடுஞ்சுரம் விஷசுரமுங்காணுதோடும், புரையுடையநெடுஞ்சுரமும் வெட்டை போகும் பூட்டுகிறனின்னமொருமோரெண்ணெய்கேளே. 364

மோரெண்ணெய்.

இன்னமொருமோரெண்ணெய்மோர்படிதானுலு இயலானபழ ங்காடிபடிதானென்று, பின்னமில்லாநல்லெண்ணை படிதானென்று பேர்பெரியசித்தமட்டிவேர்பலந்தானுலு, சன்னமா யிடித்ததற்குள் நாலுபடிசலத்தைதாக்கடாநாலொன்றுய்தனித்திறுத்து, சொன்ன படிஒன்றுய்க்கலக்கிகற்பஞ் சூட்டுகிறன்வகையாகச்சூட்டுறேனே.

சூட்டுகிறன்குறுந்தொட்டிவேர்த்தேவிநன்னரி சுருக்குடை யமுசுட்டைவேர்முத்தக்காசு, தீட்டியதோர்நிலசாரணை விலாமி ச்சுசிறுகீரைவேருடனேயமுக்கரைவேர், மூட்டியதோர்கோட்டமொ டுஇந்துவதிமதுர மோங்குபுகழ்வேர்க்கொம்பு செவ்வள்ளிக்கொடி யும், காட்டியதோர்பொன்மெழுகுகச்சோலமேலம் நல்லமஞ்சளில வம்பத்திரியும்காட்டே. 366

பத்திரியும்சாதிக்காய்சிற்றரத்தைகிராம்பு பழந்தேவதாரமொ டுதிப்பிலியின்மூலம், முத்திரியுங்கடல்நுரையும்வகைக்குமொருகழ ஞ்சு முறையோடேமோர்விட்டுஆட்டிவாங்கி, இத்தனையுந்தாளியி லேகலக்கியப்பா யியல்பாகமூன்றுநாள்கொதியுமிட்டு, வத்தியதுப த ம்பார்த்துவடித்துவாங்கிவளமாகழுத்தின்கீழ் தேய்த்தாற்போமே.

ஆறப்போட்டரைக்கடிகைக்கப்பால்நீயும் அழகானதலைக்கும ந்தயெண்ணையிட்டு, தேறப்பாசியக்காயறப்புதேய்த்து சிந்தையில்

லாவெந்நீரில்முழுகச்சொல்லு, மாறப்பாவொன்றுமில்லை விஷசுரங்கள்மாறல் மகாவாதசுரம்வெட்டைபித்தங்காத்தல், நீரப்பாயத்திசுரங்குளிர்தாபசோபம் நெஞ்சரிப்புஅளிசுரங்கள்பலசுரங்கள்போமே.

அரக்குமோரெண்ணெய்.

பலசுரங்கள்போவதற் கின்னமோரெண்ணெய் பகருகிறேமரக்குமோரெண்ணெய்மைந்தா, சொல்லரியகுறுந்தொட்டிவேர்பலமோரஞ்சுதூளாக்கியஞ்சுபடிசலத்திலிட்டு நில்லாமலொன்றுக்கிகொம்பரக்குநிறத்துவிடுரண்டரைபலத்தையொருகிளியாய்க், கலவரமில்லாசலமூன்றுமரைப்படியாய்காச்சடாவமூக்கறுவேரஞ்சுபலமே. 369

அஞ்சுபலம்வேரிடித்துதூளாயாக்கி யதற்குமொருமூன்றுபடிசலமும்விட்டு, பஞ்சதலையந்தக்கியாழநீரும் பாரடாயரைப்படிதான்பழமோர்சேரு, வஞ்சமில்லாசாறுபடிஎண்ணெய்நாழி மருந்துவகைவர்க்கத்தில்வரிசைசொல்ல, தஞ்சமுள்ளியெட்டியிலாமிச்சஞ்சீந்தில் தனிமுசுட்டைகுறுந்தொட்டிவேருங்கூட்டே. 370

கூட்டடாகன்னரிபுழுதைவேரும் கூறறியசாரணையுஞ்சிறுகீரைவேரும், நாட்டடாகோட்டமதியநிமதுரமிந்துசுக்கு நல்லமஞ்சள்கச்சோலமேலமிலவங்கம், பூட்டடாசிற்றரத்தைதிப்பிலியின்மூலம் புகழ்சாதிக்காய்தகரஞ்சிவ்வள்ளிக்கொடியும், மாட்டடாதேவதாரமிலவங்கப்பத்திரி மகிழ்வாகக்கழஞ்சொன்றுய்மோரிலாட்டே. 371

ஆட்டியேகலக்கியோர்தாளிசேர்த்து அடுப்பேற்றிமூன்றுநாள்கொதிக்கவைத்து, தீட்டியேநாலாகாள்வற்றக்காச்சி சீராகும்பதங்கண்டுவடித்திறுத்து, போட்டியேயில்லாமல் நான்குநாளுக்கொருநாள்பூசியேமுழுகிவரப்போகுநோய்கள், ஊட்டியாய்வந்தபல சுரங்கள்வெட்டைசூடு மோடுமேகடலினுரைத்தயிலங்கேளே. 372

கடல்நுரைத்தயிலம்.

கேளப்பாகடல்நுரையுங்கோட்டமஞ்சள் கெந்தமொடுபொன்மெழுகுவிலாமிச்சம்வேர், வாளப்பா சதகுப்பைமுத்தக்காசு மஞ்சிட்டியிலுப்பைப்பூகடுகுரோணி, வேளப்பாபிசின்கம்பிபெருங்குரும்பைவெட்டிவேரிந்துவுடன்வேர்க்கொம்புதானு, மாளப்பாஓவ்வொன்றுகாசுதூக்கிமாண்பாகநீமோரிலாட்டுஆட்டே. 373

சுரத்துக்குவெருகெண்ணெய்.

ஆட்டியேயெண்ணெபடியொன்றுவிட்டு ஆறுபடிதண்ணீர்விட்டடுப்பிலேற்றி,நீட்டியேவடித்திறுத்துவுடம்பிற்றேய்க்கநிலையானசுரந்

தீருங்காந்தல்தீரும், வாட்டியதோருடல்நோய்கள் பொறுத்துபோகும் வாயினில்ரூறல்காவறட்சிபோகும், நாட்டியேவெருகெண்ணெசுரத்துக்கெல்லாம் நல்லபிரயோகமடாநாடிப்பாரே. 374

நாடினதோரெருக்கம்வேர்சித்தாமுட்டி நல்லசிறுகாஞ்சொறியவுரிவேரும், பீடுபுகழ்சீதேவிதளசிகொச்சி பெருங்கரந்தையிவைவகைக்குப்பலந்தான்பத்து, தீடிதனைத்தூளாக்கிப்பாண்டத்திட்டு நீரதர்க்கு ஆறுகுறுணிநிரம்பவிட்டு, வாடியனலூட்டியேயெட்டொன்றுக்கி வாங்கிநீகோலரக்குக்கியாழங்கேளே. 375

கோலரக்குபலமொன்றுநாளுழிநீரிற் குவித்திட்டுப்படியாகவடித்துக்கொண்டு, காலரக்கெண்ணெய்படியெண்ணெய்விட்டு கலந்தமோரிருகுறுணிகலரவிட்டு,வேலரத்தையதினிடையமுத்தக்காசுவெட்பாலையரிசிகோட்டம்வாய்விளங்கம், வால்மஞ்சள்திரிகடுகுகொடிவேலிபோமம் மரமஞ்சள்கருவேம்புகடுகுரோணிதானே. 376

கடுகுரோகிணியகிலுங்கெந்தஞ்சிட்டிகஸ்தூரிமஞ்சளொடுலவங்கப்பட்டை, அடுகுசதகுப்பைசெவியம்கற்றக்கோலமப்பனேவெள்ளுள்ளிதிப்பிலியின்மூலம், தடுகுபுகையூறல்சிறுதேக்குதானுங்கனித்தனியேகாற்பலமுந்தானேதூக்கி, முடுகவேகொதியிலூட்டிவாங்கி முறையோடேநாலுதினங்கொதிக்கச்செய்யே. 377

கொதிப்பிட்டுவைத்தாள்வடித்துமைந்தா கூசாமலுள்ளுக்குக்கொள்ளச்சொல்லு, கதிகெட்டமாறல்போமுறைக்காய்ச்சல்போங்கடுங்காய்ச்சலதிசாரசுரமும்போகும், விதிகெட்டதேகவீக்கசுரமும்போகு மிக்கவசீரணசுரம்பூதசுரம்போகும், பதிகெட்டவிஷசுரமும்பலசுரமுமிவற்றுலேபறந்துபோமே. 378

பறந்துபோம்சீதசுரமதிலோர்பாகம் பாடுகிறேன்வெருகிலையுந்தண்டுமூலம், சிறந்தவில்லேசாரணைவேர்பேராமட்டி சித்தமட்டியமுக்குறுவிஷ்ணுமூலி, கறந்தபடிபலமொன்றுயிடித்துவாங்கிக் காய்ச்சடா இருகுறுணிசலந்தான்விட்டு, மறந்திடாதெண்ணெய்படியொன்றுவிட்டு மவிற்கநலிவெள்ளோயிடபால்படிதான்ரண்டே. 379

பால்விட்டு ஆவின்மோர்படியும்ரண்டு பாச்சியேமரமஞ்சள்மதுரஞ்சிட்டி, சாலிட்டயிலாமிச்சம்நன்ஞரியரத்தை சந்தனமுங்கூவிளத்தின்சதையுமிக்க, சேலிட்டகோட்டமுடன்திரிகடுகுபலியும்தேவதாரக்கட்டைசோகியும்,கோலிட்டவிராகலொன்றுவகைக்கித்தூக்கிகுழையாட்டிவகைக்குமைந்தாகொள்ளச்சொல்லே. 380

வெள்ளைக்காரன்வெருகெண்ணெய்.

கொள்வதல்லாலருசியம்விடுமேலும்பூசு குளிர்காய்ச்சல்சீதசுரம் குதித்துச்சாடும், விள்வதான்றுவெருகெண்ணே வெள்ளைக்காரன் விதித்தபடிசமூலந்தான்தூலாமூந்தூக்கு, கள்வதன்றிசித்தமட்டிபே ராமட்டி கடுஞ்சீலவில்வவேரமுக்குரூவேர், கள்வதென்னசமூலமப் பாவிஷ்ணுமூலி சாரணைவேர்சீந்திலிடதண்டுகாணே. 381

தண்டுடனேபலமஞ்சுவகைதானென்று தறித்திடித்துத்தூணி நீர்தன்னிற்போட்டு, பண்டிடவேகுறுணியாய்க்குறுக்கிவாங்கிமாட்டு நீருறுணிவெண்ணெயதற்குள்விட்டு, பண்டுவைத்தபழந்தயிர்நீர்படி யும்காலுபாச்சியதில்மேல்மருந்தைபகரக்கேளு, தின்றிடவேவெட்டி வேர்மதுரங்கெந்தந் தேவதாரத்துடனேமுத்தக்காசே. 382

காசுடனேகுங்கிலியந்திராய்வேர்குக்கில் கனத்தசித்தமட்டிவே ர்திரிகடுகுமிவைகள், வீசுபலமோரொன்றுவகையுமொன்று விரைந் தாட்டிமூன்றுநாள்வடித்துக்கொள்ளு, ஆசிடவேமேலுமிடவுள்ளுங் கொள்ள வப்பனேநீகொடுப்பாயத்திரூட்சை, தேசுடையசாதுரக் கந்திரியரூட்சை தேசுரம்பூதசுரஞ்சேரப்போமே. 383

சூன்மத்துக்குக்கொம்மட்டிக்குழம்பு.

சோதகுன்மங்களனைத்தும்போகச் செப்புகிறேன்கொம்மட் டிக்குழம்புதன்னை, ஆரவேகொம்மட்டிக்காய்ச்சாறுநாழியப்பனேசம் பிரச்சாறுநாழி, வாரமுடன்வெள்ளுள்ளிரொச்சியிஞ்சி வகைக்குநீ சாறுபடிநாழிவாங்கி, பார்புகழுமஞ்சுபடியொன்றுப்க்காய்ச்சி பாச்சு தற்குச்சூதமொடுலிங்கந்தானே. 384

லிங்கமொடுபெருங்காயமிந்துப்போமம் நேரானவெண்காரங்கடு குமஞ்சள், லிங்கமொடுவெந்தயமுமிளகுகாந்தம் நேர்வாளமோரொ ன்றுகழஞ்சுமூன்று, லிங்கழுறு ஆட்டிநீபாகிற்சேர்த்து நெருங்கவே விடாமலேகிண்டிக்கிண்டி, லிங்கமுறும்பழம்புளிபோலிறங்குமைந்தா னினைவறிந்துவுடலறிந்து வுண்ணச்சொல்லே. 385

உண்ணுவதுபனைவெல்லம்நல்லவெல்லம் மூட்டிடுவாய்தூதுள ங்காய்ப்பிரமாணத்தில், உண்ணையிலேகுன்மம்போம்பெருவயிறுபோ குமுத்தரத்தில்நீராமைமகோதரமும்போகும், உண்ணையிலேபீலிகை யும்வெப்பும்பார்வையுயர்கோவைவல்லியமுங்கவுகிதானும், உண்ண யிலேவாய்வுவென்றசென்மம்போகு முறைக்கிறேன்கும்மட்டிக்காய் ச்சூரணத்தைக்கேளே. 386

பேய்க்கும்மட்டிக்காய்ச்சூரணம்.

கேளப்பா பேய்க்குமட்டிக் காயில்பத்து கெட்டியாய் வீளுந்ததா
யிடித்துமைந்தா, ஆளப்பாவரைத்ததனமயனமாக்கி யத்துடனேகொ
டிவேலிவேரின்பட்டை, நாளப்பாகாய்ச்சிடுவாய்வீயலுப்பு நலமான
கல்லுப்புசவைச்சலுப்பு, வேளப்பா சாரணைவேர் திரிகடுகு வெற்றிபுரி
செவ்வியமூங் கொல்லிமல்லிதானே. 387

தானென்ற பெருங்காயம் வாய்விளங்குஞ் சத்தியருளோமமடா
சத்திசாரம், தேனென்றயெவாச்சாரம் புளித்தோல்சாம்பல் சேரப்பா
கழஞ்சொன்றுய்ச் செப்பக்கேளு, கானென்றபுளிகடலை மூலந்தானுங்
காட்டிலுள்ளகருணையுட கிழங்குகூட, மானென்ற கழஞ்சுநீமூன்று
வாங்கி மைந்தனே யிவையெல்லா முலர்த்திடாயே. 388

உலர்த்தியெல்லாந்தூளாட்டிவஸ்திரகாய மூட்டியேகரகத்திலிட்
டுக்கொண்டு, சிலத்தையுறுமாளுடை பிலத்தைக்கண்டு செய்வதற்குத்
தேங்காய்ப்பால் படியும்வாங்கி, பலகச்சார் நாரத்தின் பழத்தின்சா று
பாங்காக ஆனீரும் பண்பாய்மைந்தா, நலத்தவிவை படிமூன்று நீருக்
குள்ளே நலமாகச் சூரணத்தைப் புரட்டிவையே. 389

வைத்ததொருமருந்தெல்லாம் வற்றவற்ற மயனம்போல்திரட்டி
நீயுண்டைசெய்து, உய்த்தவேநீரெல்லாமுண்டபின்பு உறவுசெய்வாய்
காணையிடமூலமாட்டி, கைத்திறமாய்மூன்றுவிரல்கனத்தில்நீயுங் கவச
மந்தவுண்டைக்குக்கட்டிகேளு, மொய்த்திடவேயெட்டெருவில் புடத்
தைப்போடு மூதண்டகெசபுடந்தான் மூட்டுமூட்டே. 390

மூட்டிநீயெடுத்ததனே தூளாயாட்டி மூன்றுவிரற் கொண்டள்ளி
யுண்ணச்சொல்லி, தாட்டியெனுமனுபானம்பால்மோராவும்தனிவென்
னீரிவைகளிலேசாப்பிட்டாக்கால், நாட்டியதோரெண்குன்மமாறுசூலை
நலமானநஞ்சுவகை நோயுந்தீரும், வாட்டியதோர்சலகன்ம மகவை
வைப்பு மகோதரமூநீராமை பெருவயிறும்போமே. 391

போமப்பாகுடல்வாதம் வாதகுன்மம்போகப் புகலுவேன்மூலி
கைப்பிரயோகங்கள், ஆமப்பாரண்டுபடி கோசலத்தில் அப்பனேகற்
றழைமடலும்பின்பு, நாமப்பாசத்தியிட சாரணையின்மூலம் நன்மிளகு
சாரணையும்நறுக்கிநீயும், வேமப்பாகாய்ச்சிடவே யுப்பாய்நிற்கு மேல்
மருந்துதிரிகடுகு பெருங்காய்மிஞ்சே. 392

இந்துப்புகல்லுப்புவெள்ளுள்ளிதானு மியலானகாட்டுச்சீரகமுங்
கேளு, மூந்தவற்றுமூப்பதற்குச் சமமாய்சேர்த்து மூட்டுவாய்த்தங்

காய்தஞ்னிற்குள்ளே, பந்தமுறவாறுநா ளூறிநிற்கும் பதத்துடனே
தின்றிடவேவலிகுன்மந்தீரும், விந்தையாய்க்குடல்புரட்டுவாதத்திற்கு
வீழிவேர்பாக்களவு வெங்கீரிலூட்டே. 393

அட்டகுன்மத்துக்குக் குடல்புரட்டுக்குப் பூதவயிரவன்குளிகை.

ஊட்டுவாய் பசும்பயறு மாவின்பாலி லுண்டிடவே பூதவயிரவத்
தைச்சொல்வோம், கீட்டியேபூத வைரவத்தைச்சொல்வோம் நேரமிரு
சூதமுடன்லோகன்தாரம், நாட்டியதோர்கெந்திசிலை சிரோதரஞ்சனம்
கயமாகச் சமபாகம் நிறுத்துக்கொண்டு, ஆட்டுவாய் சிறுநீரிற் சாம
மொன்று அப்பனேகுன்றியிடை குளிகைகட்டே. 394

கட்டியதோர் குளிகைக்குச் சுத்தியான கெந்திரெட்டிகனமாகக்
கல்வத்திட்டு, கட்டியன்றிக்கால்கடிகைவறுத்துவாங்கு கருத்தாக்வஞ்
சுகுன்றி வறுத்தகெந்தி, அட்டியில்லாக் குளிகையொன்று சவைச்ச
லுப்பு அப்பனேதிரிகடுகு பெருங்காயந்தான், சுட்டியாஞ்சிறுநீரிற்றி
னந்தானுட்டிச் சுகமாகநெய்யிலேதின்னச்சொல்லே. 395

சொல்லுவேனின்னமொருகுளிகைதானும் துயர்தீருமுருத்திரவ
பிரவத்தைக்கேளு, வெல்லுமேசூதமுடன்லோகதாம்பிரம் வெண்ணெவி
யிவைசமனுய் விரைந்துதூக்கி, செல்லுமே தாமரைப்பூ கள்ளிக்கஞ்சா
சித்தரிடமூலிச்சாரே ரண்டம்நொச்சி, அல்லுறவே யொவ்வொருநா
ளாட்டிமைந்தா அளவாக ஒருவுண்டை திரட்டிடாயே. 396

திரட்டியே வாலுழுவைத் தயிலம்வாங்கிச் சேர்த்தங்கேசாமமொ
ன்றுதீயைமூட்டி, புரட்டியேமந்தாக்னிதன்னில்வைத்துப்பிரியமுடன்
பக்குவஞ்செய்பின்புகேளு, உருட்டுவாய் கடலெயெடை யுண்டைசேர்
த்துஓருகுளிகைதனையெடுத்துயிஞ்சிச்சாற்றில், மருட்டிநீயீய்ந்திடவே
வலிப்புத்தீகு மறுபடிநீயத்திசமூலங்கியாழம்போடே. 397

திசைமூலக்கியாழத்தில் தூவக்கேளு திப்பிலிதன் பொடியிட்டுத்
தின்னச்சொல்லி, திசைமூலநசியங்களஞ்சாவித்து செய்வெள்ளெவிஷ்
ணுகிரந்திவேரும், திசமூலஞ்சிறுநீரி லாட்டிமைந்தா திறக்கவேநசிய
மிடுயின்னங்கேளு, திசமூலங்கழுதைதலத்தி மகிழம்வித்து சேர்சமமா
யாட்டிநீ நசியம்வாரே. 398

வார்த்தபின்புநசியமிட மருந்துசொல்வோ மகத்தானவில்வவேர்
வெள்ளெயுள்ளி, நாற்றமுறுபெருங்காயம்நாயின்கஷ்டம் நன்றுகச்சிறு
நீரிலுண்டைசேர்த்து, வேற்றுமையொன்றில்லாதவில்வச்சாற்றில்விழு
பிலிடும்புகைமருந்தைவிள்ளக்கேளு, சேர்த்திடுவாயெட்டிவித்துநாயின்
கஷ்டம் திறமானபெருங்காயம்வசம்புகாணே.. 399

வெறிபயித்தியத்துக்குப்புகை.

வசம்புள்ளி சருகுடனே கடுகுதானும் மயிருடனே கபாலோடு
ஆவின்கொம்பு, விஷக்கணியும் நிம்பவிரை தேவதார மீருமற் சமபாகம்
புகையிற்போடு, பசந்திவெறி பத்துடனே வாயிலேத்தல் பயித்திய
மாய்க் கல்லெறிதல் பித்தமார, முசந்துகுதித் தோடுற்று முன்மத்தந்
தானு மொழிந்துபோங் கெண்டைக்கு உற்பனத்தைக்கேளே. 400

கெண்டைக்கும்மேல்நோக்குவாயுவுக்கும்.

கேளப்பாமேல்நோக்குவாய்வுக்கெல்லாம் கிருபையினலனலாதிச்
சூரணந்தான், நாளப்பாபிரண்டைத்தூள்படியும்நாலு நலமானசதுரக்
கள்ளிபூப்பட்டைநாழி, ஆளப்பாபுளித்தோலின்படிதானலு அப்பனே
யரைப்படியாய்முப்புதானும், நீளப்பாவிவையெல்லாம் தூளாயாட்டி
நேரப்பாவடிகட்டிகாகத்தூட்டே. 401

காகத்திற்பொடியங்கேவெருகடிதான்றாக்கி கர்த்தாவைதியானி
த்துவுண்ணச்சொல்லு, வரவத்துத்தின்னுமல் பத்தியமாய்த்தின்னு
மைந்தனேயுப்பன்றிமற்றொன்றுகா, விரதத்தசன்னிமுதலுன்மத்தம்
விகற்பம் விஷங்களொடுகுமரகண்டன்காமாலே, ஒருவலுறவத்தமுசல்
வல்லிபித்தசோகை யுண்ணியிலேபறந்துபோமுண்மைபாரே. 402

விஷத்துக்குக்கலிக்கம்.

உண்மையாமென்றுவிரைந்தோடிப்போகு மூருத்திரமாம்விஷத்
துக்குக்கலிக்கங்கேளு, வெண்மையுறுமேனித்தோல்விராகன்மூன்று
வெந்ததலையோடப்பா கழஞ்சுவொன்று, திண்மையுரிதாம்பிரத்தூள்
விராகனென்று சீர்துஞ்சுகழஞ்சொன்றுதுத்தமொன்று,வண்மைபெற
புளியிலைச்சார்விட்டுஆட்டி மைந்தனேகயிறுபோலுண்டைகட்டே. ()

கட்டியதோர்குளிகைக்குவயணங்கேளு கனசன்னிக்கத்திப்பூப்
பழுப்புச்சாற்றில், மட்டில்லாவிஷத்துக்குச்சாரணையில்தீட்டு மயக்கி
விடும்பேய்க்கெல்லாங்கரிப்பான்சாற்றில், ஒட்டில்லாயுன்மத்தமூலப்
பாலாகு முறைந்துவிலுமுசல்வலிப்புக்குப்பழச்சாறுகும், மட்டியுறுங்
காமாலைக்கிளைநீராகு மப்பனேமருளவத்ததும்பைச்சாறே. 404

சாறுகளிற்சொன்னபடிகண்ணிற்றீட்ட தப்பாமலவ்வண்ணம்
நிவர்த்தியாகும், வேறுமோரஞ்சனத்தின்பெருமைகேளு மென்கால
மிதாகானென்றகாம, மேறுபுகழ்குக்கில்துத்தந்தருசுவல மிலவங்கப்

பட்டையிவைசமன்றூன்றூக்கி, பேருடையபேய்த்தும்பைச் சாற்றி லாட்டிப் பிலக்கவேகெடுங்குளிகைபிடித்திடாயே. 405

விஷம்சன்னிமாந்தத்துக்கு.

பிடித்ததொருகுளிகையைநீக்கண்ணிற்றீற்றப் பேய்ப்பிரமைவலிப் பெல்லாம்பேதமாகும், குடித்திடவேயுள்ளுக்குமருந்துசொல்வோங் குறைதீரும்வெறிதீருங்கூனுந்தீரு, மடித்துடையவெண்புறூவெச்சத் தானு மதுக்காரபழமிவைதான்சமனேசேர்த்து, அடித்துமேலெள் ளாட்டுக்கறுத்தவண்ண மாட்டினிடபாலிலேயரைத்திடாயே. 406

அரைத்ததொருமருந்தெல்லாந்திரட்டிநீயும் அப்பனேகழஞ்சியி டைகுளிகைசேர்த்து, உரைத்திடுவாய்குளிகையொன்றுவெந்நீர்விட்டு உள்ளுக்குக்கொடுத்திடவுமொழியுமப்பா, கரைத்ததனைநியமிட்டுஅறி வுகெட்டால் கண்ணிலேதிங்களொன்றுகலிக்கம்போடு, வரைத்துடைய மூலிப்பாலில்போடுபோடு மைந்தனேமயக்கமறுந்தெளிவுண்டாமே.

அறிவுகெட்டவிஷத்தாலுஞ்சந்நியாலும் ஆங்காரவெறியாலும் விதியினாலும், பிறிவுகெட்டுப்பிணம்போலேசுணையற்றூல் போடுவாய் கண்ணிலுங்காதுமூக்கில், செறியவுநீமூலிப்பாலிலிட்டாயாலே செத்த சவம்பிழைத்தெழுந்துதிரும்பிப்பேச, மறிவேதுமில்லையப்பா சத்திய மாகு மற்றமற்றவாகடங்களிதற்கொவ்வாதே. 408

சூலிபதினெட்டுபுண்ணுக்கும்சகலசூலைக்கும்சூதவித்தை.

ஒவ்வாதசூலைமூவாறும்போக வுரைக்கிறேன்கெந்தகத்தின்றயிலங் கேளு, செவ்வானகெந்தகமோகழஞ்சுபத்து சிவந்தபசுநெய்தனிலே சாமமொன்று, சவ்வாதுபோலாட்டித்திரியிலூட்டி தலைகீழாய்ப்பிடித் திடவேதயிலம்வீழுங், கவ்வாதுதயிலத்தில்சூதமூன்று கழஞ்சிவிட்டுச் சாமமொன்றுஆட்டுஆட்டே. 409

ஆட்டியதோர்தயிலத்தைகுப்பிகூட்டி ஆயிபதம்பூசத்துஅருள்தா வென்று, நீட்டியொருகாசிடைதான்றினமூங்கூட்டு நிணவாகத்தினம் பத்துகொண்டபேர்க்கு, நாட்டில்வளர்சூலையென்றதனைத்தும்போகும் நலமானபத்தியம்பால்தயிர்நெய்யாகும், தீட்டியதோர்நல்லெண்ணெய் முழுகவாகா செப்புகிறேனின்னமொருசூத்தத்தாட்டே. 410

சூதமப்பாகழஞ்சிரண்டுசுத்திசெய்து தூக்கிநீவெற்றிலையின்சாற்றி லிட்டு, ஏதமறமூறித்ததனைவெற்றிலையிற்பொதிந்து இயலானபச்சரிசி குருவையாகும், வாதமறும்வெற்றிலைச்சார்படியுமொன்று வார்த்த திலேபச்சரிசியுழக்கரைதானிட்டு, கேதமறமூன்றுபத்துகடிகையங்கே கிண்டியதைதனையவேவைத்திடாயே. 411

நினைந்ததோரரிசிதன்னைச் சுவரப்போட்டு நலமாக வெடுத்தங்கே பருவங்கேளு, நினைந்தமின்னிமூசுமூசுக்கைவெற்றிலையிம்மூன்று நோகவகையொன்றுபிடிதானென்று, தினைந்ததனித்தனியாகச் செருக்குவாட்டு நகரவைத்துவாங்கியே யரிசிகூட்டி, புனைந்திடினு மாவானுல் சூதம்விட்டு புரளவேதூளாக விடித்திடாயே. 412

இடித்ததோர்பொடியதனைநிழலுலர்த்தியிதமாகப்புதுக்காகத்திட்டுக்கொண்டு, படித்தரமாய்க்கழஞ்சுதீயிரிலூட்டி புரக்கவேமூன்றுகப்பிடித்துவுண்ணில், அடித்திறமாயேழுதினங் கொண்டாலப்பா அலர்சூலைவெடிசூலை புண்ணுபோகும், படித்தரமாய்ப்பத்தியத்தை விள்ளக்கேளு பசுவினிடதயிராகு மூண்ணுவுண்ணே. 413

இரசவேகமீறினுல்.

உண்ணயிலேசூதவெட்டைமீறிற்றூலு லுதிரத்திலினைச்சலுமாய்க்கடுப்புகாணும், திண்ணமுறத்தயிரிலேவெல்லம்போட்டுத் தின்றிடவே பொருந்தியாஞ்செப்பக்கேளு, வண்ணமாயெழுமூன்றுதினந்தானப்பா மறுபத்தியமியாதேனும் வரைந்துதள்ளு, எண்ணெய்கேளாமணக்கின் றயிலமிட்டு இதமாகவீரைந்துமுழுகச்சொல்லே. 414

சொல்லுகிறேனின்னமொன்று பொரிமாவாலே சூத்திரமாயமூதுப்படிபுழுங்கலாகா, சொல்லுவேன் காற்படியை பொரிமாவாக்கிச் சூட்டுவாய்பழச்சாறுனையவார்த்து, சொல்லுவேன்சுவறியபின்கழஞ் சுருதக்தூக்கியேயிடித்தங்கேபழச்சார்விட்டு, சொல்லுவேன்பழச்சாறு விட்டுவிட்டுச் சுகமானவெற்றிலைச்சாற்சுவரவூற்றே. 415

ஊற்றுவா யுத்தமமாந் தாளிச்சாறு உறவுசெய்து தினமொன்று இடித்துமைந்தா, கேத்தியாயிடித்ததனைவாங்கிக்கொண்டு நிழலுலர்த்தி வெறுகடியாய்நேர்ப்புகண்டு, சாற்றுவாய்மூன்றுநாள்நான்குநாள்தான் தயவாகவிருநேரஞ்சாப்பிட்டாக்கால், பார்த்துநீயனுபானஞ்சொல்லக்கேளு பழந்தண்ணீர்பத்தியந்தான் வெண்ணீர்வாரே. 416

சூலைக்கும் புண்ணுக்கும் இரசப்போக்கு.

வெண்ணீரும்வெள்ளுள்ளிமற்றொன்றுகா வீரூகக்கொண்டிடவே விபரங்கேளு, தண்ணீராமற்றங்கேமுடங்கினேரந் தானேதானெழுந்திருந்துநடந்துசொல்வார், வெண்ணீராலேரண்டத்தயிலம்விட்டு வாரமொருக்கால்முழுகமைந்தாபாரு, மன்னீரும்வாசனைபோல்தேகமாகுமயக்கமறுமகிழ்ந்தங்கே யுண்ணச்சொல்லே. 417

ரசவேகம்வாயில்கட்டிஞல்.

உண்ணயிலே வாயிலெல்லாஞ் சூலைகண்டா லுரசியங்கேகொப்ப பளிக்கக்கியாழங்கேளு, எண்ணயிலேவெள்வேலு மெருக்கின்வேருங் கருவேலுந்துளசியுடகியாழம்விட்டு, நண்ணயிலேநா லுநாளுமியிலப்பா நற்சூலைவரச்சூலை ரண்டுந்தீரும், மண்ணயிலேயுள்ளுக்குப் புகையைக் கேளு மப்பனேகருவேலின் பிசினிவாங்கே. 418

நாட்பட்ட புண்ணுக்குப் புகை.

பிசினுடனேமுருங்கைவே ரெருக்கன்வேரும் பேரான அழிஞ்சி வேர்சிவனர்வேம்பு, பிசினுடனேயிவையெல்லா முண்மையுண்மை பிர ளவேதூளாக்கி யெடுத்துக்கொண்டு, பிசினுடனேதழலிட்டு வெறுகடி யைத்தூவ பெறுநாளைப் புண்ணெல்லா முலர்ந்துபோகும், பிசினு டனே யிவையஞ்சிச் சரியாய்த்தூக்கி பேசுகிறே னேத்திரோய்க் கெல்லாங்காணே. 419

கண்ணின்வியாதி தொண்ணூற்ரூருக்கும்.

காணப்பாதிரிகடுகுகடுக்காய்நெல்லி கடுந்தான்றிபசுவின்பால்கழு தைப்பாலும், பூணப்பாயதிமதுரம் பீதரோணி பொன்மெழுகுவெண் காக்கண்மிவையும்நோய், தோணப்பாமூலிப்பாலால் சாமமொன்று துவளவதையாட்டிநீகுளிகைகட்டி, ஊணப்பாமூலிப்பாலி லரைத்துத் தீட்ட மொழிகின்றவியாதிகளே யுற்றுக்கேளே. 420

உற்றுவள்ர்திமிர்முதல் படலந்தானு மொழுகிவிழும் நீர்ப்பில்லம் கூனுகாசம், அற்றுப்போம்வெள்ளைவா கடத்தின்போக்கு அப்பனே சுடர்கால வஞ்சனத்தைக்கேளு, பற்றிநின்ற கண்ணேய்க டொண் ணூற்ரூறும் பற்றறுக்கச் சிறுகீரை பொன்னுங்காணி, சுற்றவெள்ளை சாரணைவேர் வெள்ளைக்காக்கணமுஞ் சேரவே வேரெல்லாம் வாங்கு வாங்கே. 421

வாங்கடாதேற்றன்விரைதலைமண்டையோடு வளர்சுணங்கின்பல் கோழிமார்பிலத்தி, வாங்கடாவன்முத்துஇவைதான்சேரவரிசையுடன் சமனுகெல்லெண்ணவிட்டு, வாங்கடாகல்வத்தில்மயனம்போல மாட் டிநீசிமிளிலே வைத்துக்கொண்டு, வாங்கடா கண்ணிலிடு நெடுநாள் சென்ற வியாதிபோமாருந்தம் மாறுந்தானே. 422

கண்ணில்வியாதி தொண்ணூற்ரூருக்கும்.

மாறுதற்கின்னமொன்று செப்பக்கேளு மணிக்கொட்டை பாசி யிலேதருகதுத்தம், மீரூமற் சமனிறுத்துச் சிறுநீர்விட்டு வெண்ணெய் போலாட்டியதைக் குளிகைசேர்த்து, வேறுமொருவியாதிக்கு சிறுநீர்

விட்டு விரைந்துரைத்துக்கண்ணிலிடவெளிச்சமாகும், வீறுடையபுழுப்
பூவுங்குந்தந்தீரு மிருள்மூடும்புகைச்சலுக்குவிபரங்கேளே. 423

விபரமென்னமுசல்புழுக்கைசுட்டசாம்பல் வெங்கலத்தாலத்திலே
நெய்யைவிட்டு, விபரமுறக்களிம்பாக்கிக்கண்ணில்தீட்ட விழிமயக்க
முழிமயக்கம்புகைச்சல்தீரும், விபரமுறவெள்ளெழுத்து மாறுதற்கு
விரைந்தொழுக்குப் பசுவின்பால்தினந்தானூறு, விபரமுடன்மாறிப்
போம்கண்ணேயென்றுல் விசித்திரமாய்காதிலிடவிளம்புறேனே. 424

கண்ணிருண்டபுகைச்சலுக்குப் பச்சிலை.

விளம்புறேன்வலக்கண்ணேயென்றுல்மேனியினி யிலைகசக்கியே
காதிலூற்று, தளம்பியதோரிடைக்கண்ணேயென்றுல் சாற்றுவேன்
வலக்காதில்சாறுதன்னை, களங்கமற்றாண்டுகண்ணுநொந்தாலுல் நா
திரண்டிலொருமிக்கசக்கிவாரு, தளம்பியதோர்சிவப்புமறுநீருமா
றுஞ் சூட்டுறேன்புறவடையைத்துணிந்துகாணே. 425

துணிந்துகேள்நாயுருவிசிவந்தவேரை தோண்டியேபிடுங்கிவந்து
மண்வெட்டிக்காய்ச்சி, கனிந்தபழச்சாறூற்றிவேரையாட்டிக் கண்
ணிலேமத்தித்துப்பூசத்தீரும், யனிந்துமேபத்தியமோ வில்லையப்பா
பாங்கானயிறைச்சிவகைசேருசேரு, முனிந்துடையமாலைக்கண்காணு
தென்றுல் முக்கியமாயெட்டிவோர்மூலைப்பாலாட்டே. 426

மூலைப்பாலிலாட்டியங்கேகண்ணில்தீட்ட மோகமின்றிமாலைக்
கண்காணுமைந்தா, இலைப்பாலிற்பழமிளகுநல்லெண்ணெய்க்குளிட்டு
ஈரைந்துதினமெடுத்துக்கொண்டு, நிலைப்பாகஎண்ணெய்குத்தியரைத்து
நீட்டு நேர்ப்பாகமாலைக்கண்விர்த்தியாகும் மலைக்காமலெட்டுநாள்தீட்
டினுக்கால் மயங்காமலிட்டறுத்துவழிசெவ்வாமே. 427

கண்ணேய்க்குப் பிறவடை.

செவ்வாகமாலைக்கண்விர்த்தியாகும் செப்புகிறேனஞ்சனத்தை
சிறக்கக்கேளு, செவ்வாகுஞ்சுதமொன்றுகெந்திமூன்று சிறக்கவெள்
ளைச்சாரணைவேர்காலுதூக்கு, செவ்வாகநேர்வாளம்காலுதூக்கு செம்
பீரச்சாற்றினுற்குழையவாட்டி, செவ்வாகுமான்கொம்புசிமிளில்வைத்
துத் தேவையென்றுல்பழச்சாற்றில்தீட்டிடாயே. 428

வெள்ளெழுத்துக்கு.

தீட்டினுல்ஜன்னிவிஷம்பேயும்நீங்குஞ் செப்புகிறேனுமைபோ
லுன்மத்தமானுல், காட்டினுலொழிந்திடவேமருந்தில்லாமற் கடுகவே
பிடித்தவரைவிலங்குபூட்டி, ஊட்டியதோருலையிலிட்டுக் கொழுவைக்

காய்ச்சி யொழுகிவிடுவவர்மேலேயண்ட அண்ட, நீட்டினல்வாய்கிற
ந்துபேசுவான்காண் நிராகரித்துக்கிரிகையைச்செய்திடாயே. 429

உன்மத்துக்குக்கிரிகை யெலிகடிக்கு.

செய்திடவேயொழிந்துபோமிவற்றுக்கெல்லாஞ் செப்புறேன்பத்
தியங்கள்கிறமாயப்பா, நெய்யாகும்பாலாகுமற்றொன்றுகா நோகவடி
கட்டிமுழுகச்சொல்வாய், எய்யாதவெலிகடிக்கு மருந்துசொல்வோ
மிரங்களிசம்வேர்ப்பட்டைமாவிலிங்கப்பட்டை, மெய்யாகும்வெள்ளா
ட்டுநீரிலாட்டு விரவியேகுடித்திடவேவிஷங்கள்போமே. 430

விஷம்போகும்பூசிடவேயாதலையின்வேரை வெண்பசுவின்பாலி
லேயுள்ளுக்கூட்டு, சவம்போலேசுரணைகெட்டுவிஷங்களாகி கண்ணீர்க்
குள் நெய்க்கொட்டான்பழங்கசக்கி, நிசம்போலேவெண்ணெய்தனை
வழித்துமைந்தா நேர்பாகவேதலைக்குடோரியாடி, வசம்போலேதெய்த்
திடவுந்தீர்ந்துபோகு மருந்துகேளுள்ளுக்குள்மைந்தாநீயே. 431

மருந்துகேள்மூசுமுசுக்கைமூலம்வாங்கி யரைத்திடுவாயாவின்பா
லரைத்துநன்றாய், பொருந்தவேபிழிந்திடுவாய்குறுணிச்சாறு புகழாக
வடிகட்டிக்குறுகக்காய்ச்சி, விருந்தாகஆவின்வெண்ணெய்மேதிவேண்
ணெய் வெண்பொகுட்டினதிலிரண்டிலொன்றுமேதான், பெருந்தே
னிற்படியரைதான்கழுதைப்பால்கேள் பிசகாமலரைப்படிதான்பிலக்கச்
சேரே. 432

வெறிபித்தத்துக்குமருந்துவாலை.

பிலத்தேரிஞ்சிச்சாறிரண்டுகால்தான் பெற்றிடுவாய்பனைவெல்
லம்பலமுமூன்று, கலசத்திலுறவார்த்துநீபாகுசெய்து கடுக்காயில்சிறி
தாகயிடித்தூளும், நலத்துறவேகாற்படித்தூளிட்டுகிண்டி நலமாக
நாற்கழஞ்சுவுண்ணச்சொல்லு, புலத்தியனேபக்கமொன்றுவுண்டபேர்
க்குப் பொறிகலக்கம்வெறிமயக்கம்போகும்பாரே. 433

பாரப்பாதுவாலையிடமருந்துகேளு பாங்கானஆதலையுமுத்தெருத்
தின்செவியும், நேரப்பாவிரைவாண்டுமூலலிலிட்டு நெடுநாளைக்காடிவிட்டு
நெகிழவாட்டி, வாரப்பாசிசுமுதற்பாதம்மட்டும் வற்றவற்றத்தடவியே
வரிசையாக, சேரப்பாவொன்றரைநாட்சென்றமோரிற் றிறமாகத்து
வாலையிடுதெரிந்துபோமே. 434

தெளியாதவெறிபித்தவிஷமடக்கம் - தீர்ந்திடவுமூள்ளுக்குத்தின்
னக்கேளு, எளிதாகவிஞ்சிச்சார்கரண்டிரண்டு யிதற்குசெட்டிகழுதைப்
பாலிரண்டுஞ்சேர்த்து, அழியாதசர்க்கரையுங்கழஞ்சிரண்டு அப்பனே
தினம்பத்துவுண்ணச்சொல்லு, வழியாகமாறிவிடுந்துவாலையேதுமைந்
தனேமகத்தானமருந்துதானே. 435

தானென்றவறிவுகெட்டு மயங்கினோர்க்கு சாப்பிடவேசோறு
ன்றுசமைக்கக்கேளு, தானென்றபசுவின்பால்தூணிவாங்கி சுழலிலி
ட்டடுப்பேற்றிக்குறுணியாக்கி, தானென்றகுன்றிச்சார் நாழிவிட்டு
தனிமுசுறின்மூட்டையிலேயுரியமிட்டு; தானென்றபனடிவல்லமூன்
றுபத்து தாக்கிட்டுவைத்தபின்புசாற்றக்கேளே. 436

சாற்றக்கேள்பேய்வாழைப்பழந்தானப்பா தயவாக நாற்பதங்
கேயுரித்துச்சேர்த்து, சாற்றக்கேள்சர்க்கரையும் பலமிரண்டு சம்பா
நெல்லரிசியிலேபடியிரண்டு, சாற்றக்கேள்நெல்தனிலே சேருவொன்
று சட்டமாய்க்கட்டியேகைபாகந்தான், சாற்றக்கேளிவையெல்லாங்
கிண்டிக்கிண்டி சமைத்தங்கேமூன்றுநாள் தாக்கச்சொல்லே. 437

பிரமைபிறகடத்துக்குகரையும்.

தாக்கச்சொல்லிராப்பகலுமாறுநேரஞ் சாப்பிடவேயறிவுமயல்
தானேதீரும், தாக்கவேமற்றொன்றுமாகாதப்பா சனந்தீரும்விஷக்தீ
ருஞ்சம்பிரதாயம், தாக்கவேபிற்கடந்தான்றீரக்கேளு தனிக்கோவை
முத்தத்தண்டு முடக்கொத்தான்தண்டு, தாக்கவேசமனுகவிடித்த
வித்து தனிச்சாறுவுழக்கங்கேபிழிந்திடாயே. 438

சாராயவெறிக்கு.

பிழிந்தேதோர்கியாழத்திற்காடிநேராய்ப் புகட்டியதில்வெல்லமி
ட்டுக்கொடுக்கச்சொல்லு, அழிந்துவிடும்பிரகடந்தானலறியோடும்
அப்பனேசாராயவெறிக்குக்கேளு, சளிந்தெதாழுகும்சாராயம்விட்டு
மைந்தா சமைத்ததிலேகெய்யிட்டுச்சாப்பிட்டாக்கால், குளிர்ந்துச
டம்விழுமளவும்லாகிரியில்லை கூறுகனத்தினேதான் கொண்டபோதே.

பெறுவயிறுகரைய.

கொண்டெழுந்தபெருவயிறுகரைந்துபோகக் கூறுகிறேன்மருந்
தொன்றுகுடிலம்விட்டு, அண்டர்மகிழ்மேனியிலை காஞ்சோரியிலை
யும் ஆடுதின்னுப்பாளையிலையிவையெல்லாந்தான், கண்டிதமாய்ச்சா
திக்காயளவரைத்து கரைத்திடுவாய் மூன்றுபடிபழச்சார்தன்னில்,
விண்டுநிறத்துருசுகெந்திலிங்கமொக்கமீருமலரைக்கழஞ்சு வகைக்குச்
சேரே. 440

வகைசேர்த்து அடுப்பேற்றிமயனமாக்கி மைந்தனேயிரண்டு
தினமாறவைத்து, வகையாகக்குன்றடையருந்திநெக்கால் மகத்தான
பெறுவயிறுவற்றிப்போகும், வகைகேளு அந்திக்குக்கியாழங்கேளு
மைந்தனே காட்டுமல்லிசுரைபழுத்தல், வகையானகரிப்பானும் சமூ
லம்வாங்கி வரிகடுக்காய்முப்பதுடன்பாதிரியின்சருகே. 441

சருகுடனேமிளகுழக்குகட்டிப்போட்டுத் தனிச்சலந்தானுலு படிதயவாய்விட்டு, செருகுடையவடுப்பேற்றியெட்டொன்றுக சித் திறமாகவம்மியிலேழொன்றுக்கி, அருக்கந்தகியாழத்திற் கலக்கிரீயும் அடவாகக்கொடுத்திடுவாய்பட்சமொன்று, கருக்கின்றபெருவயிறு வொழிஞ்சிபோகக்கடுக்காய்பத்துப்பொடியாக்கியாழத்தூட்டு.

நீராமைகவுசிக்கு.

கியாழத்திற்பொடியிட்டரைப்படிதானீயுங் கறுத்தவெள்ளாட் டினுடநீரும்விட்டு, வசாயத்தில மூன்றுநாளாறவைத்து மைக்தனே பத்துமுறையிப்படியேயூட்டு, புசாயத்தபெறுவயிறுதணிந்துமாறும் பூட்டுகிறேநீராமைகௌசிக்கெல்லாம், விசாயத்தில்தருசினுல் நட்க க்கேளு விராகனேயிரண்டுபத்துதருசுதூக்கே. 443

தூக்கினேதார்தருசுதனேச்சுத்திசெய்து சுருட்டுவாயேரண்டத் தினேறழப்பா, காக்கவேவெள்ளுள்ளிக் கவசங்கட்டி தான்றிரும்ப வீலேகொண்டு பொதிந்துகட்டி, தேக்கமுட னுமிக்காந்தற்குள்ளே வைத்து திறமாகமறுநாள்மீயெடுத்துவைத்து, ஆக்கமுறுந்தேங்கா யில்வெருகடியுந்திருகியதனுடனேவெள்ளுள்ளியரைத்துச்சேரே.

நீராமைகவுசிக்குதுருசுபற்பவராகவித்தை.

வெள்ளுள்ளிதருசுபற்பங்கால்வராகன் வேதிச்சுயெட்டுநாள் விழுங்கத்தீரும், எள்ளவேபத்தியங்கள்சாமைக்கஞ்சி வாயடுக்கால் கொப்பளிக்கவென்னீரல்லால், எள்ளளவும்பத்தியங்கள் பிசகினுக் கால் என்மேலேகுறையில்லையிடுக்கமெய்தும், வள்ளலேயின்னமொ ன்றுவராகவித்தைமணிக்குடலிற்பெருங்காயம் பொரிக்காரந்தானே.

காரமொன்றுகாயம்ரண்டுயிந்துநாலு காயொன்று நாரத்துக்கள் ளிப்பால்கேள், வீரமுதற்கழஞ்சிரண்டுமிளகுரண்டு வெள்ளுள்ளிப் பருப்பங்கேபலழு மொன்று, கோரமுறுமுப்புளுக்குச் சேரவொன் றுய்க்குழையவெந்து ஆட்டியதில்வகையவித்து, ஆரவேபொடித்தி ரண்டுழக்குச்சேர்த்து ஆனதுதுளங்காய்போலுண்ணச்சொல்லே.

உண்ணுவதுமண்டலந்தான்பத்தியங்கேளு வுரைத்திடவேமிள நீருறவாமப்பா, நண்ணியிலேகியாழமொன்று நாட்டக்கேளு நலமான கல்நார்தான்கழஞ்சிரண்டு, நண்ணியிலே கல்மதத்தான் காசுதூக்கு கரியானகிறுகீரைவேரைமாட்டி, வண்ணமுறப்பாக்களவு அரசம் பட்டை வரிவெள்ளரிவிரையும்வராகனென்றே. 447

ஒன்றுகக்கூட்டியேவாங்கிவைத்து உத்தமனே யரசம்பட்டைக் கியாழம்வைத்து, நன்றுகக்காலத்தில் கியாழம்வைத்து நாட்டவே

யரைத்திருந்த மருந்துதானும், தின்றிடவேநீகொடுக்கில் பெரு வயிறுகவுசி திறமாகரோகமெல்லாந்தீர்ந்துபோகும், நின்றிடவேகா லேயந்தியிருவேளையுண்ணு நிசமாகும்படுபருவுக்கியம்புறேனே. 448

படுவன்பருவுக்கு.

படுப்பருக்களொழிந்திடவே மருந்துகேளு பண்பான வவுரி வேர்குடப்பாலேவேரும், தொடுத்துண்ணமூன்றுநாளிற்றீர்ந்துபோ குஞ் சொல்லுகிறேனிவைமூன்றும்பாலிலாட்டி, தடுத்திடவேகைபா கம்பிசகிடாமல் சார்பாகருவின்மொழிதப்பவேண்டாம், அடுப்பில் வைத்தரிசியிட்டுச் சமைத்துவுண்ணில் ஆச்சரியம்படுபருக்கள் தணிந்துபோமே. 449

போவதற்குக்குன்றியிலையிலுப்பைப்பட்டை புகழானசெருப் படியுமூன்றுமாட்டி, பாவகமாயிலுப்பைநெய்யி லிட்டுமைந்தா பண் பாகப்புண்ணிலிடப்பாறியோட்டும், சாவதில்லையிவைக்கெல்லாம்படு தாமரைக்குக்கேளு சாதகமாயைங்கோலவேரின்பட்டை, காவதிக மதுக்காரைவேரின்வித்து கழஞ்சிரண்டுபழச்சாற்றிற் கரையஆ ட்டே. 450

படர்தாமரை.

ஆட்டியேபாக்களவாய்மூன்றுகட்டி யப்பனேயுள்ளுக்குமேலும் பூசு, வாட்டியேயுதிர்ந்துவிடு மின்னமென்று வளரொருக்குவேர்ப் பட்டைகம்பின்பட்டை, நாட்டியதேர்த்தகரைவிரை சேரக்கூட்டி நாழிப்பால் தன்னிலிட்டுக்காய்ச்சியாற்றி, தாட்டியேயரைத்தருந்த மேலும்பூசதனித்தனியேதீருமடாசாற்றக்கேளே. 451

மலட்டுவலிக்கு.

சாற்றுகிறேன்மலட்டுவலிக்குமருந்துகேளுசாதகமாயெண்ணெ யிலேநுணுயிலைச்சாறுற்றி, தேற்றவங்கேகொடுத்திடவேநிவர்த்தியா குஞ் செப்பக்கேள்திரிகடுகுதூளாயாட்டி, மாற்றமில்லாக்காச்சிவி ரையோமமிந்து வகைநேராய்வறுத்திறுத்து முன்பொடியுங்கூட்டி, ஊற்றுவாய்நல்லெண்ணெய்விட்டிருட்டி யுண்ணவேமலட்டுவலியொ ழிந்துபோமே. 452

பவுத்திரத்திற்கு,

ஒழியாதபவுத்திரங்களொழியவென்றுல் உரைக்கிறேன்மேனி யப்பாசமூலம்வாங்கி, நெளியாமல்நிழலுலர்த்தாயுலர்த்தியாட்டி நேத் தியாய்வடிகட்டி வெருகடிதான்வாங்கி, களியாதவெண்ணெயிலே குழப்பித்தின்னக் கண்களித்துப்புண்ணுலருங்கடினமானுல், அளி யாமல்மண்டலந்தானுண்ணச்சொல்லு அப்பனேநீர்ப்பாச்சலாறுந் தானே. 453

ஆறுமப்பாயிம்மருந்தால் நிசமாய்ச்சொன்னேன் ஆருக்குஞ் சொல்லாதேயாத்தாள்சொன்னுள், மீறுமற்கொஞ்சநாள்வியாதியென்றால் விரையுடனேயிருபதுநாள்கொள்ளச்சொல்லு, வேறுபடும்வியாதியென்றால்மண்டலந்தானூட்டு விளம்பினதோர்மருந்தெல்லாமுண்மையுண்மை, வேறுமொருபதார்த்தங்களருந்தவேண்டாம்வீறுடைய நெய்பாலாம்விரைந்துபாரே. 454

பாரிசவாய்வுக்கு.

விரைந்துவரும் பாரிசவாய்வுக்கப்பா வெள்ளுள்ளிப்பருப்பங் கேசிரங்கைரண்டு, விரைந்துமூளையெடுத்ததனையோட்டிலிட்டு விரவி நீபொன்னிறம்போல்வெதுப்பிவாங்கி, விரைந்துடனேவிளக்கெண்ணைகழஞ்சிரண்டு விட்டப்பாபனவெல்லங்கட்டியொன்று, விரைந்தொக்கத்தூடுப்பினல்பிரளக்கிண்டி வெதுவெதுக்க மூன்றுகாலுண்ணச்சொல்லே. 455

தாகத்துக்கு.

சொல்லுறேனுடம்புழத்தித்தாகமானால் சூட்டுவாய்கற்றுழை மணியும்நாழி, செல்லவேசண்பகப்பூலவங்கப்பட்டை திறமானநல்ல வெல்லஞ்சேர்த்துவுண்ணில், அல்லலறுமிழத்தல்போந்தாகந்தீரும் அப்பனேவெகுதாகமடங்கக்கேளு, வெல்லுமேநெருஞ்சிக்காய்பச்சையோலை வில்வத்தின்பழச்சதையும்நெற்பொரியும்வாங்கே. 456

கரப்பன்சிலந்திக்கு.

நெற்பொரியுஞ்சீரகமுமேலந்தானும் நேராகவகைக்கங்கேவிராகன்றாக்கி, வற்பெரியகிழிகட்டிப்பாண்டத்திலிட்டு மாந்தளிருங்கூடவிட்டுச்சலமும்விட்டு, சொற்பெறவேயருந்திடுகிற்றுகந்தீருஞ்சொல்லுகிறேன்கரப்பனெடு சிலந்திக்கெல்லாம், நற்பெரியநன்னாரிசிறுகுரிஞ்சான் நன்மூலம்நிலவேம்புநாட்டக்கேளே. 457

நாட்டவேயந்தரத்தாமரையின்வேரும் நலமானநெல்லிமூள்ளியீசுரமூலி, கூட்டுவாய்கொழிஞ்சிவேர்பருத்திவேருங் கூரானபேய்ப்பீர்க்கின்சமூலங்கூட்டும், வாட்டமணித்தக்காளிவேருங்கூட வரைந்திடித்துவெள்ளாட்டுநீரைவார்த்து, நீட்டியேபிசைந்ததனைவடிதான்கட்டி நிம்பநெய்நல்லெண்ணெய்தேங்காய்நெய்யே. 458

நெய்யுடனேபுங்கெண்ணெய் நாலும்நேராய் நீகலந்துசாரணைநெகிழவார்த்து, மெய்யாகவடித்திறுத்துக்குடிக்கச்சொல்லு மேலுக்கும்பூசிடவேவிரணந்தீரும், கொய்யவெங்கீர்விட்டுக்குளித்து வரச்சொல்லகுணமுள்ளதாகவேயிருக்கும்பாரு, எய்யாதசடைக்கிரந்தியொழிவதற்கு இயம்புகிறேன்மருந்துவகையியம்புறேனே. 459

குக்கில்நெய்.

இயம்பியதோர்குக்கில்நெய்தானப்பா யீரிரண்டுகழஞ்சியொடு குக்கில்தானும், நயம்பெறவேவேப்பிலைச்சார்விட்டரித்து நாட்ட டாயிருகழஞ்சுநெல்லிக்கெந்தி, நயம்பெறவேசெய்பாகம்தவறிடாமல் நாட்டடாமருந்தையப்பாநவிலக்கேளு, வியம்பெறவேயாட்டிநீவழித் துக்கொண்டு வாரடாநெய்நாழிதாளிக்குள்ளே. 460

தாளிக்குள்மருந்திட்டுக்கலக்கிக்காய்ச்சி தயவாகவடித்திறுத் துக்கடுகுகூட்டி, வாளிப்பாய்காசெடைதானிரண்டுதூக்கி மகிழ்ந்து ண்ணத்தினமஞ்சுமைந்தாகேளு, சாளித்தசடைகரப்பன்தீர்ந்துபோ குந் தரியாதகிருமலுக்குப்புகையைக்கேளு, பூளித்தபொன்தாரஞ் சுத்திசெய்து கொம்பரக்குமவ்வண்ணமாகுந்தானே. 461

அவ்வண்ணமுருக்கியேபாவட்டங்கம்பா லப்பனேசாதித்துவு ண்டைசெய்து, அவ்வண்ணம்புளியந்தோல்கரத்திலிட்டுஅனலிட்டு த்தழலாக்கியவர்முன்வைத்து, அவ்வண்ணமண்டலந்தானுண்ணும் போது அப்பனேவியாதியெல்லாந்தீருந்தீரும், அவ்வண்ணமிருமல் போம்பக்கமொன்று அப்படியேபுகைபிடிக்கவுண்டாகாதே. 462

இரும்பலுக்குப்புகை.

அண்டரதுயின்னமொன்றுதாரத்தோடே அழகானபொற்கொ ன்றைப்பட்டைதானு, முண்டாதஅவரையிலைநீர்விட்டாட்டி மூலர வெள்ளைச்சீலையிலேதடவித்தீற்று, தண்டாதமோயுள்ளோன்மோரு ஞ்சோறுஞ் சாப்பிட்டுப்புகைகொளுத்திக்குடிக்கச்சொல்லு, மிண் டாதுயிருமல்போமின்னமொன்று வெள்ளியதோர்சீலையிலேபிரண் டைச்சாறே. 463

பிரண்டைச்சார்விட்டுநன்முய்ப்பிரட்டிக்கொண்டு பின்புகேள் தேங்காய்தான்குழையஆட்டி, பிரண்டைச்சாறதுவட்டியேதுணியில் தேய்த்துப் பேதமின்றியுலர்த்தியேமறுநாட்கேளு, பிரண்டையது மேனிச்சாற்பிரளத்தேய்த்துப் பொன்னினரிதாரமதிற்பிலக்கத்தே ய்த்து, பிரண்டிடாதுலர்த்தியேதிரியாய்க்கட்டிப் பிடித்துநீமோருஞ் சோறுண்ணச்சொல்லே. 464

உண்டபின்புநல்லெண்ய்க்குள்ளேமைந்தா வுறவெடுத்துத்திரி நனைத்துவுதறிப்போட்டு, உண்டிடவேதிரிகொளுத்தியவித்துநீயூமூ றிவரும்புகையெல்லாமுண்டாஞலல், முண்டுவிடுமிருமலெல்லாம்பய ந்தேயோடு மொருமூன்றுபுகையும்வெகுவுசிதமாகு, முண்டுவிடுநோ யெல்லாமற்பமாகுமுரைக்கிறேன்மாத்திரைதானுரைக்கிறேனே.

காலாந்தவைரவன்மாத்திரை.

உரைக்கிறேன்மாத்திரைபேரப்பாகேளு உயிர்க்கருள்காலாந்த வைரவன்தானென்பார், உரைக்கிறேன்வெண்காரம்சூதம்நாபி உற்

றலிங்கம்கோர்வாளம்திரிகடுகுதானும், உரைக்கிறேனிவையெல்லாஞ் சமனுய்த்தூக்கி உற்றபழச்சாறிஞ்சிச்சாறுங்கூட்டி, உரைக்கிறேனிச் சாறிரண்டுஞ்சேர்த்து ஒருசாமமாட்டியேயுண்டைசெய்யே. 466

உண்டைகுன்றி யிடைகூட்டிநிழலுலர்த்தி யூட்டுவாய்சீதசுர மொழியவென்றூல், சண்டையறும்வேர்க்கோம்புகியாழமத்தால் தக் கருவாயிஞ்சியுடசாற்றிலாதல், பண்டைசுறுந்தாபசுர மொழியவென்றூல் பழச்சாறிஞ்சிச்சாறும்பதமாய்ச்சேர்த்து, தொண்டையுறக் குளிகையிட்டுயருந்தகல்குந் துடாத்திசுரத்துக்குமூலப்பால்கூட்டே

கூட்டையிலேபத்தியங்கேள்காலத்தாலே குமையவேபால்களுசியந்திநேரம், வாட்டமின்றிச்சோறுடனேமுருங்கைச்சாற்றை மைந்தனேமாலைக்குக்கியாழங்கேளு, மூட்டையிலேசெந்தொட்டிபேராமுட்டி முள்ளிவேர்பற்பாடகஞ்சீந்திற்றண்டு, கீட்டவேமுத்தக்காசிவைகள்சேர நேர்ந்தசமபாகமதாய்நிறுத்திடித்து, ஊட்டவேயெட்டொன்றுய்க்கியாழங்காய்ச்சி யுண்ணச்சொல்சன்னிக்குவுரைக்கிறேனே. 468

சன்னிக்குருசியம்.

உரைக்கிறேன்சன்னிக்குருசியஞ்சொல்வோ முற்பனமாய்தேத்தின்காய்ப்பிஞ்சுருன்றுய், அரைக்கக்கேள்வெண்சீலயத்தன்மேலூட்டியாற்றி யடைவாகச்சன்னிவந்துஅசதியானால், விரையவந்துசீலயிலேகொஞ்சங்கீறி மென்முலைப்பாலதனைவிட்டுக்கசக்கிமுக்கில், புரையேறுதேபிழியில்வாந்தியாகும் பொருமலொடுநெஞ்சுவலிபோகுங்காணே. 469

சன்னிக்குத்தயிலம்.

காணப்பாமுக்காலும்விஷநீர்வீழும் காணுமல்விழுந்தோடுஞ்சன்னியெல்லாம், பூணப்பாயெண்ணெய்முதலியம்பக்கேளு புகழவேவேப்பந்தோல்சாறுழக்குவாங்கி, தோணப்பாபிரமிச்சாற்துளசிச்சாறுஞ் சுகமானதிராய்ச்சாறும்வகைக்குழக்கு, ஆணப்பாயிவ்வேரும் பலமுங்காலாயதிற்றூக்குமுசுறுமுட்டைப்பலமுங்காலே. 470

காலப்பூவெளிச்சமாம்பிசினுங்கால்காண் கலந்துமிகவிரந்தாட்டிவழித்துரீயும், காலப்பாவேப்பெண்ணெய்படியும்விட்டு காச்சியேகாசெடைதானுண்ணச்சன்னி, காலப்பாகிழிந்துவிடும் நவத்துவாரங் கதுப்பெல்லாங்குளிர்ந்திடவேகளங்காதீரும், காலப்பாசுரம்வந்தவுடனேதீரக் காட்டுகிறேன்பற்பத்தின்பெருமைக்கேளே. 471

பிரளயகாலாந்தவைரவன்.

பேருரைக்கமைந்தனேகேளுகேளு பிரளையகாலாந்தவைரவன் தானப்பா, பார்புகழுமரிதாரங் கட்டியொன்று பண்பாகப்பூசினிக் காய்த்தண்ணீர்க்குள்ளே, பேர்நோக்கித்தேளாந்த மெரித்துவாங்கிப் பிரட்டுவாய் சுண்ணநீர்கொண்டுபின்பு, ஆரவேதேளாந்த மெரித்துக்கொண்டு அந்திடைக்குச்சுத்திசெய்த நாபிதூக்கே. 472

தூக்கியேபிரண்டைச்சார்தன்னுலாட்டிச் சுருளவதைக் குகையிலிட்டு செம்மண்செய்து, தாக்குவாயுலேயிலிட்டுப் பழுக்கவுதித்தழலாறியெடுத்துநீ வைத்துக்கொண்டு, தேக்கவேசுக்கதனே தூளாயாட்டிச் சிறப்பாகத்திப்பிலியுந்தூளாயாட்டி, பார்க்கவே சுரம்வந்தாற் பொடியிரண்டில் பணவிடையும்நன்னலு பண்பாய்த்தூக்கே. 473

பண்பாகமூன்பொடியும்காலுங்கூட்டி பதமாகமத்தித்து பணந்தான்கால்நீ, எண்பதற்குவெற்றிலேயிற்கொடுக்கும்போது உடனேவிடும்விடாலுரைக்கக்கேளு, கண்பார்த்துஅரைப்பணந்தான் வெற்றிலேயிலூட்டு காட்டுமுன்னேசுரந்தணியுங்காட்டவேண்டாம், நண்பாகச்சுரங்களுக்குப்பண்டிதலாஞ்சிங்கி நாட்டமாயென்பதைநீ காட்டக்கேளே. 474

பண்டிதலாஞ்சிங்கிகுளிகைசுரங்களுக்கு.

நாட்டமுறுங்கடுக்காய்தான் பத்துவாங்கி நால்வராகனஞ்சப்பாவிங்கமொன்று, காட்டவேசாத்திரவேதியொன்றுக்கு நாபியொன்று தான்சேரக்கூட்டி, ஆட்டியேதூளாக்கிவைத்துக்கொண்டு அப்பனே பணவிடைதானெடுத்துக்கொண்டு, நீட்டுவாயனுபானமிளகுநீரிதன்னில்நீனவாகத் தயிர்வெல்லங்கச்சாயத்தூட்டே. 475

கச்சாயம்பேய்வாழைப்பழமுமாகுங் கனசுரங்கள்கலந்துபோம் பத்தியங்கேளு, கச்சாயமோருஞ்சோறுண்ணச்சொல்லு காட்டாதேயாருக்குமிந்தநூலை,கச்சாயஞ்சுரங்களுக்குக்குளிகைசொல்வோங்கனசூதம்வெண்காரமிளகுதானும், கச்சாயந்திப்பிலியுமற்றம்வித்தும் களங்கமின்றிச்சரிதூக்குக்கல்வத்தூட்டே. 476

ஊட்டியேமத்தஞ்சாற்விட்டுநீயு முறவாகயேழரைப்புசாமமொன்று, ஆட்டியேகுன்றியிடைகுளிகைகட்டி யாறியபின்னெருக்கம் வேர்கியாழத்தூட்டு, மூட்டியேசெவ்வியத்தூள்விராகனென்று மொன்றிட்டுக்குளிகையொன்றுமுழுங்கநல்கி, நீட்டவேவாதசுரஞ் சன்னிமூர்ச்சை நீலியாதகுளிர்ந்தசுரமனைத்தும்போமே. 477

அர்த்தனாரீசுரம்.

போமப்பாகுளிகையொன்றுதயிலத்தூட்டப் பொடியாகுஞ் சுரங்களெல்லாம்பத்தியந்தான்சொல்வேன், ஆமப்பாதயிருஞ்சோறுண்ணச்சொல்லு அர்த்தனாரீசுரத்தையறையக்கேளு, வேமப்பா

நாபிகேந்திவெண்காரஞ்சூத மீறுமற்கரிதூக்கிகொச்சிச்சாற்றூல், சா
மப்பாசாமமொன்றூட்டிவாங்கி தயவாகருகையிலிட்டுசீலைசெய்யே.

சீலையதுமண்செய்துசட்டிக்குளிட்டுச் சிறப்பாகக்கீழிலுமூப்பு
போட்டு, சாலவேமேலுமந்தவுப்பையிட்டுச் சட்டிகொண்டுகவிழ்த்
ததைத்தைக்கமூடி, ஆலையடுப்பேற்றியேகமலவன்னி யாட்டுவாய்மூ
ன்றுபத்துக்கடிகையப்பா, காலியிலே செங்கழுநீர்க் கிழங்குச்சாற்
றூல் கடுகவரைமறுநாளில்கொச்சிச்சாறே. 479

நொச்சிச்சாற்விட்டேரட்டிமூன்றுநாளில்நேகவரைப்பாகற்சாற்
விட்டுமைந்தா, அச்சமறவுலர்த்தியேதூளதாக்கி யப்பனேகுழியிலே
யிடித்துக்கொண்டு, உச்சிதமாய்மூன்றுசான்னசாறும்வாங்கி யொவ்
வொருபணவெடைதா னுண்ணச்சொல்லு, நச்சியிடுஞ்சுரந்தீரும்வய
ணங்கேளு ரண்டுபுறமொருபுறத்தில்நாட்டக்கேளே. 480

நாட்டப்பாமருந்திட்டசாற்றைவாங்கி நாசியொன்றில்நசியமிட
ச்சுரத்தைக்கேளு, மீட்டப்பாமொருபுறத்தி லடிக்குங்கண்டாய்மீள
வந்தநாசியிலேநசியமூற்றி, காட்டுமுன்னேயிருபுறமுந்தணிந்துபோ
குங் கருக்கிவிடும்விஷபாகக்கர்மம்போக,கூட்டுமுன்னேரெண்ணைக்கு
யோகந்தானுங் கூறக்கேள்புலத்தியனேகொள்கநீயே. 481

விஷபாகத்துக்கெண்ணெய்.

கொள்கடாவிளக்கெண்ணெய்படியும்நாழி கூறமுறும்பெருவா
யன்பாலுழக்கு, கொள்கியதோரீருள்ளிச்சாறுதானுங் கூட்டமாய
ரைப்படியுங்குறையாதப்பா, கொள்குவாய்தாணக்கிலையுமிக்க கொட்
டங்கரந்தையிலைசின்னிபத்திரி, கொள்கியதோர்காற்றெட்டிநாயின்
பத்திரி கொத்தோடேகற்பூரவள்ளிதானே. 482

வள்ளியொடுதுளசிவிஷ்ணு கிரந்திதானும் வளர்சங்கக்குப்பி
யொடுபருத்திபத்திரி, கொள்ளியெனுமருதிலையங்கொற்றுன்சங்கு
கோழியவரையிலையும்பிரமிமேனி, விள்ளியெனும்வாதமடக்கித்தா
னும் வேளையிலையிவைசாறுவகைக்குழக்கு, தெள்ளவேசிற்றவரைக்
கிழங்குதானுஞ் சிறுகுறட்டையப்பைகிழங்குதானே. 483

கிழங்குடனேநன்னரிவனத்தேத்தான்வேருங் கிருபையுறுஞ்
சிறுகிளாபெருங்கிளாவேர், களங்கமில்லாப்பாதிரிவேர்முன்னேவே
ருங் களச்சியிவைவகைக்குநீயிரண்டுதூக்கி, வழங்கவேகார்கோலி
னரத்தைமஞ்சள் விழாமரிசியிலவங்கப்பூதவிருட்சம், புழங்காதஆயி
லத்தோல்பெருமரத்தின்பட்டை பொலிவாகக்கழஞ்சைந்துவகைக்
குத்தூக்கே. 484

கழஞ்சாகக்கூட்டியே யாட்டிவாங்கிக் கலவடாமுன்மருந்தின்
சாற்றினேடே, விளஞ்சிடமேயடுப்பேற்றி மூன்றுநாள்தான் வெது
ப்பியே கொதிப்பித்துநாலாநாளில், சளந்திரவிநாயகர்க்குப் பூசை

செய்துதாய்பதத்தைமறக்காமல்வடித்துமைந்தா, வுளங்குளிரக்காடை
தானிரண்டுதூக்கி யுண்டுவாமேலுக்கும்பூசலாமே. 485

வங்கபற்பம்.

பூசிடவேவிஷபாகம் பாண்டுதீரும் பொறுமலரும் சோகையறும்
வீக்கந்தூக்கம், மாசியறும்வங்கபற்பந் தன்னைக்கேளு மைந்தனேபதி
னெட்டுகுட்டந்தீரும், வாசியுறும்வங்கத்தையுருக்கிச்சாய்த்துமலரவே
யிரகுபோல்தட்டிவெட்டி, பாசியுறும் கொச்சியிலே துலாந்தான்வாங்கி
பண்பாகவுலர்த்தியதைத் தூளாயாட்டே. 486

ஆட்டிநீபரப்பியே சீலைக்குள்ளே யதன்மேலே வெள்ளாவங்கத்
தகட்டைவைத்து, நீட்டியேருலைத்தூளைமேலுந்தூவி நேர்ப்பாகப்பாயி
லேசருட்டிக்கொண்டு, மூட்டியேயிருதலையுந் தீயைவைத்து மூடங்கா
மற்றினமொன்றுயெரித்தீயும், நாட்டியதேர்தகடெல்லாமெடுத்துக்
கேளு நன்றாகவேகாதகட்டைதள்ளே. 487

தள்ளிவிட்டுவெந்ததெல்லா மெடுத்துக்கேளு தயவாகச்சிமிளிலே
யடைத்துக்கொண்டு, தெள்ளியதோரனுபானங்கார்கோல்வித்து நிற
மானவாடுதின்னுப்பாலைவித்து, துள்ளியேயிவைசமனுய்த்தூளாயாட்
டிச் சூரணஞ்செய்வெல்ல மிதிற்சூட்டிமைந்தா, அள்ளியிடுவெருகடி
தான்வெண்ணெய்நெய்யி லாகாதகுட்டம்பதினெட்டும்போமே. 488

போவதற்குவங்கபற்பம் பணந்தான் றூக்கி பூட்டடாவெண்ணெ
யிலேவெட்டைக்கெல்லாம், காவதற்குச்சயரோகஞ் சுவாசகாசங்கடு
விளைப்புயீளைக்குத் தேனிலூட்டு, பாவதற்கு யெலிப்புழுக்கை முசுட்
டைத்தோடு பைங்கோழிக்கட்டமிவைசுட்டசாம்பல், வேவதற்குகாசி
டைதானலுதூக்கி விரவிநீபணவிடைநற்பற்பந்தானே. 489

பற்பமொடுவெள்ளரிக்காய்வெந்ததண்ணீர் பாங்கானவெள்ளாட்
டுப்பாலிலாதல், பற்பமிடுமிளகுநீரா லிவற்றிலாட்டப் படரானகல்ல
டைப்பு சதையடைப்பு, பற்பமிட்டு அழிந்துபோங் கிரிச்சினங்களெல்
லாம் பாய்ந்தொழுகுஞ் சலக்கழிச்சல் பாகமாக, பற்பமிடுகாந்தசெந்
தூரங்கூட்டிப் பரிந்தேனிலுண்டிடவே பரகாரமாமே. 490

சூலைக்குடோரி.

பரிகாரம்வெள்ளரிக்காய் வெதுப்புத்தண்ணீர் பழக்காயின் விரை
யுடனேயாட்டிநீயும், பரிகாரம்பற்பமிடு கிரிச்சினங்களாறும் பற்றறுக்
குங்கல்தெறிக்கும்பகரக்கேளு, பரிகாரமுட்டைத்தோடெலிப்புழுக்கை

பகர்காரம்வெள்ளையெச்சம் பதமாய்ச்சேர, பரிகாரம்வெண்காரம் பொ
ரித்துக்கொண்டு பாச்சடாகாசிடைநீ யாட்டுப்பாலே. 491

பாலிலேபொடியிட்டுப் பற்பமிட்டுப் பருகவேமேகமென்ற தினைத்
தும்போகும், காலிலேகையிலே சூலையாலல் காட்டுகிறேன் சூலைக்குக்
குடோரிதன்னை, சூலிலேயுரைசூதந்தாரங்காரஞ் சுககெந்திரிபலியுந்
திரிகடுகுவாளம், சாலிலேவளர்கரிப்பான் சாற்றில்நீயுஞ் சாமம்ரண்டு
ஆட்டித் தயவாய்வாங்கே. 492

வாங்கியேகுன்றியிடை குளிகைகட்டி மாட்டுவாய் மிளகுதண்ணீ
ரிஞ்சிச்சாற்றில், தாங்கியேவெவ்வேறுகுளிகையூட்டச் சாற்றுகிறேன்
சூலையெட்டுஞ்சாடிப்போகும், நீங்கியேகுன்மம்போ மகவைபோகும்
நோதநரிச்சூலை நிவர்த்தியாகும், பாங்கியேயிக்குளிகை சூலக்கெல்
லாம் பாடுகிறேன்ரகுராம பாணந்தானே. 493

இரகுராமபாணம் துத்தசெந்தூரம்.

காணப்பாகுன்மங்க ளதிசாரமான கிராணிமுதற் பல்வகைக்குங்
களங்கம்போலத், தோணப்பாதுத்தத்தின் செந்தூரந்தான் சூட்டுகி
றேன் துத்தமொடு காந்தந்தார, மூணப்பாவெண்காரம் நிமிளைதாது
மொவ்வொன்றுக் கொவ்வொன்று கழஞ்சுகூட்டி, பூணப்பாகெந்தி
ரண்டு பலகரையுமைந்து பொருந்தவே பழச்சாற்றி லாட்டிவாங்கே.

வாங்கிநீகுகைசேர்த்துச் சிறுபுடத்தைப்போடு மைந்தனேசெந்
தூரமாகிநிற்கும், வாங்கியேகாசளவு சீனிக்குள்ளே மாட்டடாசெந்தூ
ரம் பணந்தான்றாக்கி, வாங்கியேவயிற்றுவரை கிராணிபோகும் வறள்
குட்டம்சலக்கழிச்சல் மாண்டுபோகும், வாங்கியேசாதிக்காய்ப் பொடி
யிலூட்டு மாந்தமாய்க்கழிகிற மயக்கம்போமே. 495

இரசகற்பூரம்.

மயக்கமறுஞ் செந்தொட்டி வேரைவாங்கி மைந்தனே தோலுரித்
துத்தூளாயாட்டி, மயக்கமறுஞ்செந்தூரம் வயிற்றிலீய வந்தகிராணி
யெல்லாம்வாங்கும்பாரு, மயக்கமறுமிரதகற்பூரஞ்சொல்வோம்வியாதி
யெல்லாந்தீர்ந்துபோம் வரிசைகேளு, மயக்கமறவுப்புளுக்குச் செங்கல்
தூளும் வரிசைபெறவழித்தெடுத்து வைத்திடாயே. 496

வைத்தபோ ரிருவகையுந் தூளாயாட்டி மைந்தனே சட்டிக்குள்
பாதிநீயும், வைத்திடுவாயதிற்குகையைச் சூதமப்பா வாரடாகழஞ்சு
பத்துமாற்றமன்றி, வைத்தங்கேகுகைவாயில் பொடியுமிட்டு மறுசட்டி
கொண்டிடட்டு வாயைமூடி, வைத்துநீயேழுசீலை மண்ணும்பூசி மாயி
பதம்பூசித்து அடுப்பிலேற்றே. 497

அடுப்பேற்றிக் கமலவன்னி தினந்தானென்று அதின்பிறகு
காடாக்கினியுந்தான்மூன்று, கடுப்பமுடனுலுநாள் சென்றபின்பு கன்
றினிடசாணியந்தக்கட்டுமண்ணும், நடுப்போலேகட்டிநீதண்ணீரூற்றி
நன்றுகச்சுவறிப்பின் சீலைகொண்டு, வடுப்பாகாதேவாங்கிப் பின்னுங்
கேளு மறுபடியும்நீர்விட்டு யெரித்திடாயே. 498

எரித்தாறியெடுத்துப்பார்சட்டிமேலேயேறிநிற்குங்கற்பூரமெடுத்து
வைத்து, அரித்திடும்நாய்ச் சூலைமண்டைசூல யப்பனே நாசிப்புண்
தொண்டைப்புண்ணும், பரித்திடுமேநாசிநீர்கண்ணில்பாரும் பாங்கான
நீரிலே கொள்ளத்தீரும், பொரித்திடவே யிடையேது பணத்திற்பாதி
பூட்டடாசூலைமுதற் புண்ணும்போமே. 499

குரு முன்னிற்கவும்.

பண்போகுங் குன்மத்துக்குக் கனுபானஞ்சொல்வோம் பொடி
செய்வாய்நிரிகடுகு மணந்தான்மூன்று, பண்பாகக்கற்பூரமரைப்பணந்
தான்றேனில் பாச்சடாகுன்மமெல்லாம் பறந்துபோகும், கண்பாரச்
சூலைக்குவெள்ளுவாய்ப்பிசின் கடுஞ்சுக்குகாயமாம்வெள்ளுள்ளியாதல்,
உண்பதற்குக்கொடுத்திடவேநிவர்த்தியாகு முறைக்கிறேன்கிராணிக்கு
யுண்மைகேளே. 500

இரசபற்பம்.

உண்மைபெறச்சாதிக்காய்த்தூளிலிட்டு வொடுங்காதகடினமாம்
வாய்வுக்கெல்லாம், வண்மையுடன்சீரகக்கியாழத்திலூட்டு வருத்தமறு
மிரதபற்பம் வைக்கக்கேளு, வெண்மையுறுஞ் சூதமொன்று கெந்தி
யொன்றுமீருமற்றாளாக்கி வாங்கிக்கொண்டு, கண்மையுறுமோரண்டத்
தயிலத்துள்ளி காட்டியேமத்தித்துக் கலரவையே. 501

கலந்ததொருசூதத்தைத் தேன்புரட்டி கபடாகவுருட்டியே கருத்
தாய்மைந்தா, குலர்ந்துசெங்கல் குளிகைபிடித்துக் குடைந்துஅங்கே
கூரானயெருக்குப்பொன் னுவாரையின்பழுப்பு, பிலக்கவேமிளகுமிவை
நோயாட்டிப் பேணியேயென்மகனேயெடுத்துக்கொண்டு, பிலக்கவே
செங்கல்லுக்குள்ளேபூசி புகட்டடாகளங்கமென்ற சூதம்கேளே. 502

கேளடாகளங்கம்வைத்து மருந்தால்வாயைக் கெட்டியாயடைத்
துமறுசெங்கலாலே, சூளடாவடைத்துநன்றாய்ச்சீலைசெய்துசூட்டடா
யெழுசீலைமண்ணுமேலே, ஆளடாகுழியொன்று முழத்தில்தோண்டி
யதுநிரம்பவிற்கெருவும் போட்டெரித்து, நீளடாகுழிநிரம்ப மணலைக்
கொட்டு நீனைவாகயெருவடிக்கிப் புடத்தைப்போடே. 503

புடம்போடுபதின்மூன்றுவாட்டிமைந்தா புகழானசூதமங்கேபற்
பமர்ச்சு, கடம்போடுநோய்க்கெல்லாம்பணிவிடைதான்சத்து காசிடை
சிரகமுமதிற்றேனுங்குத்தி, உடம்போகவேறுண்ணநெஞ்சுவலிகிராணி
யொழியாதகிராணிக்கு யனுபானந்தானும், திடம்போடு சாதிக்காய்
கிராம்புபத்திரிதேனுஞ் சேர்த்திடுவாய்வுக்குச் சீரகத்தைக்கூட்டே.

கூட்டியிடுவசைதீர்க்கவென்றால் கூறுகிறேனெருக்கம்பால் துளி
யிரண்டு, மூட்டடாசெந்தூரம் பணந்தானப்பா வுத்தமனேபழச்சாறு
துளசிநீராம், நாட்டுமாதளைப்படிநீர் தண்ணீராகும் நல்லகண்டங் கத்
திரிச்சாபழச்சாற்நேராய், ஊட்டுவாய்சயமுதலாய்நெஞ்சுக்கட்டு வுற்ற
நீர்ப்பாய்ச்சலிவை யனைத்தும்போமே. 505

குருமுன்னிற்கவும் பண்டிதன்.

போமப்பாகுருவைநெல்லாறுகழஞ்சிரண்டு பொதிந்தூட்டுந்தன்
மாங்கிஷமடைப்புத்தீரும், நாமப்பாயிப்படியே நிச்சயமாய்ச் சொன்
னேன் நாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டும், ஏமப்பாநோயென்ற
தெல்லாம்போகும் என்மகனேயுந்தனுக்குவுரைத்தோமப்பா, ஆமப்பா
வியாதிக்கு மார்பிலாணி யறிந்தவனேயருள்யோகி பண்டிதனுமாமே.

பண்டிதனும்பரிகாரிவயித்தியனெனவும் பகருகின்றமொழியெல்
லாமவனுக்காகும், கண்டிதமாய்முகம்பார்த்துநோயைப்பார்த்து காற்
றெழுந்தநாடியுட கலக்கம்பார்த்து, மூண்டிவருமூன்றுக்கும் நவதாது
பார்த்து முனைகண்டுமருந்தினுட சடுக்கங்கண்டு, அண்டினபின்பொரு
ளாசைமீகுந்திராமல் அரிந்துசெய்வோனெழுபிறப்பு மயனும்பாரே.

அரிதாரபற்பம்.

பாரப்பாயரிதார பற்பந்தன்னை பாடுகிறேன் பொன்தாரம் பலம
தொன்று, நேரப்பாநற்காந்த மஞ்சாங்கற்பம் நீற்றியே யரைப்படியும்
நினைவாய்வாங்கி, சேரப்பாசட்டிக்குள்சாம்பலிட்டு சிறக்கவேயரிதாரம்
பரத்திமேலும், வாரப்பாசரம்பலிட்டுச்சட்டியால்மூடி வடிம்பெல்லாஞ்
சீலைசெய்து மண்ணுஞ்செய்யே. 508

சீலைசெய்துஅடுப்பேற்றியொருநாள்மட்டும் தீயாரூதேயெரித்து
வங்கப்பற்பம், சாலவேபணவிடைநற் றேனிலூட்டு சகலபுண்ணுஞ்
சூலையொடு வாதம்வாய்வு, வாலைப்பெண்போலவரு சயரோகம்போகு
மாட்டுதற்குத்திரிகடுகுதேனுமாகும், காலனும்நோய்களெல்லா மரிதா
ரக்கறுப்பு கைமுறையாய்ப்புலத்தியனே கண்டிடாயே. 509

கண்டிடாரிஷியிஞெடுமுனிவர்தேவர் கணநாதர்சித்தர்களும்யோகி
ஞானி, யொண்டிடார்பலநூலும்பலமுகமாய்ப்பாடி யூரிலேயலைந்திட
வும்பித்தரெல்லாம், கண்டிடாக்கற்பங்கள்மூதமுண்ணுர் கருவிபுறக்
கருவிகளுங்காணுர்காணுர், பண்டிடார்செகண்டி மறைத்தடித்தார்
பார்த்தறிந்தோன்மெய்ஞ்ஞானிபார்த்திடாயே. 510

பார்த்திடவேரண்டுபலந்தாரம்வாங்கிப் பாங்காகவேநறுக்கிப்பண்
பாய்மைந்தா, சேர்த்திடவேசாரணையைச்சமூலமாட்டிச் செப்பரிய
சட்டிக்குள்மூக்காலிட்டு, வார்த்திடவேசட்டிமேல்தாரம்வைத்து மறு
படிபின்சாரணையைவைத்துமூடி, நேர்த்திடவேசில்லிட்டுச்சீலைசெய்து
நீணவாகமூடியேழுமண்ணுஞ்செய்யே. 511

மூடிநீதியெரிப்பாய்சாமம்நாலு முதிரவதுவாறியபின்னிறக்கிவை
த்து, நீடிநீசட்டிக்குள்பற்றித்தீய்ந்து நின்றதெல்லாங்களைந்துமற்ற
தெல்லாம்பற்ற, மூடிநீகல்வத்தில்தூளாயாட்டி யுற்றசிறுகுழலிலே
யடைத்துவைத்து, நாடிநீபதினெட்டுக்குட்டந்தீர்க்க நல்வீரப்பெருக்
குடனேகிராம்புசேரே. 512

சேரப்பாசமபாகந்தயிலம்வாங்கிச் சிறப்பாகப்பண்வெடைதான்
றயிலத்துள்ளே, ஆரப்பாபற்பத்திற்பணத்திற்பாதி யளித்திடவேகுட்
டமொடுபுண்கள்நோயாம், பேரப்பாவொழிந்துவிடும் தேனுங்கூட்டு
பிலத்தூட்டுபட்சமொன்றுபிரிந்துபோகும், நேரப்பாவொழிந்துவிடுமி
வைக்கெல்லாம்பத்தியங்கேளு நெய்யாகும்பாலாகும்பழமுமாமே. ()

பழமாகும்வெள்ளாட்டினிறைச்சியாகும் பருமாத்தவெங்நீரும்
பருவம்வேணும், சளந்தீருமிரதசெந்தூரஞ்சொல்வோம் சகலசங்க
நோய்க்கெல்லாஞ்சஞ்சீவியாகும், விளந்தீருங் கெந்தியொன்றுதார
மொன்று மிக்கநவ்வற்பட்டையொடுஅரசம்பட்டை, அளந்தீரும்பரு
த்தியிலைபாகலிலைசேர் அப்பனேசரியிடையாய்ச்சேருசேரே. 514

இரசபற்பம்.

சேர்த்ததனிமையனம்போலாட்டிவாங்கிச் செப்புகிறேன்புதுச்சட்
டிக்குள்ளேநீயு, மாத்தமூர்தமூன்றுபடியுப்புமிட்டு மயனமென்றமருந்
ததற்குள்நடுவேவைத்து, வார்த்திடுவாய்சூதமதிற் பலந்தானொன்று
மறுபடியும்மீமருந்தாலேகுழியைமூடி, சாத்தியேசில்லிட்டுசீலைசெய்து
தணலூட்டிபதின்மூன்றுகடிகைதானே. 515

பதின்மூன்றுகடிகைநீயெரித்துவாங்கு பதத்தோடேசெந்தூரமரு
ணன்போலாம், விதிநூறுங்குழலிலேயடைத்துக்கொண்டு மிஞ்சிய
தோர்சட்டிக்குள்வெல்லமிட்டு, மாநாறும்பிரட்டியந்தவெல்லத்தன்னை

மாட்டுவாய்ப்பருத்திவிரைப்பிரமாணத்தில், கதிகாறுபதினெட்டும்சூலை தீரும் கருப்புட்டிப்பணவிடையில்வெல்லமூட்டே. 516

வெல்லத்திலூட்டிடவேபக்கசூலை மேல்சூலைகால்சூலைகுண்டிசூலை, வெல்லத்திலூட்டிடவேதசையில்சூலை வீக்கமொடுபுண்பிளவைமுழங் காள்சூலை, வெல்லத்தையூட்டிடவேசக்துநோயும் மொய்க்குடைச்ச லெலும்புருக்கிவிரணம்போகும், வெல்லத்திலூட்டிடவேநோய்களெல் லாம் வீரடங்கும்பத்தியங்கள்முருங்கைத்தண்டே. 517

தண்டுடனேதுவரையாமற்றொன்றுகா தண்ணீர்தான்வெந்நீராந் தாழ்ச்சியின்றி, மிரண்டுபுரிநோக்கெல்லாஞ்சத்தஞ்சூதம் வெள்ளையாஞ் செய்கிறவிபரங்கேளு, மொண்டுவாரிரண்டுபலச்சூதங்கல்லில் மூவிலை மின்னேச்சாற்முழுங்கவிட்டு, கண்டிதமாய்க்கடிகைதானூறுமத்தி கனக்கவதைமூன்றுண்டைகட்டுகட்டே. 518

கட்டினதைச்சட்டிநடுவைத்துநீயுங் கனலூட்டுகாற்கடிகைபின்பு கேளு, தட்டியேசுரையெல்லாங்கிண்டிக்கிண்டித் தான்வறுப்பாய்காற் கடிகைதப்பாதப்பா, துட்டியன்றிச்சூட்டடாகல்வத்திட்டுச் சுருளவே காற்கடிகைதூளாயாட்டி, கொட்டியிடுகுழலிலேபதனம்பண்ணி கொள் ளடாவனுபானங்கூறுறேனே. 519

பாங்கிப்பட்டை ரசாயனம்.

கூறக்கேள்பணவிடைநீபற்பந்தீர்த்து குளிர்ந்திருந்தவெல்லத்தில் குணத்தைக்கேளு, மீறக்கேள்பெருஞ்சூலைபக்கசூலை விலநோயும்பழு வெலும்புவீக்கந்தூக்கம், ஏறக்கேள்குன்மம்போமவத்தைசூலை எட்டு வகைச்சூலையெல்லாமிதமாம்பாரு, பாறக்கேள்பட்டைபிலோசாயனத் தைச்சொல்வோம் பட்டையஞ்சுபலம்வாங்குவெள்ளைப்பாகே. 520

பட்டைதனைத்தூளாக்கியெடுத்துக்கொண்டு பகரோமமதிவிடை யம்குராசானியோமம், கட்டையெனுஞ்சாதிக்காய்சாதிபத்திரி க்ராம்பு சுக்குதிரிபலைகன்மிளகுசேர்த்து, கட்டைபண்ணிவகைக்குநீ பலமுங் கால்தான் தளராட்டிப்பாண்டத்தில்வழித்துநீயும், இட்டமுடன்பட் டைத்தூள் கூடச்சேர்த்து இவையெல்லாஞ் சுயவாவின்பாலிதமா யூற்றே. 521

இதங்கேளுபசுவினெய்யோர்படியும்விட்டு இளங்கியேகுழம்பாக் கியடுப்பிலேற்றி, இதங்கேளுகமலவன்னிகடிகையொன்று வெந்திட வும்விடாமலேகிண்டிக்கிண்டி, பதங்கேளுமயனம்போல்பக்குவத்தைப் பார்த்துப் பற்றும்விளக்கிநன்றுய்மைந்தாகேளு, மதங்கேளுஆறுபலச் சீனிதூக்கி மறுபடியுமகப்பையால்சீனிகிண்டே. 522

சீனியிட்டுக்கிண்டியொருகலசத்திட்டுத் தினமூன்றுசென்றபின்பு தான்றிக்காய்போல், சீனியிட்டுவைத்திருந்தமருந்தைவாங்கித் திரட்டிடுவாயிருவேளுதின்றபோது, சீனியிட்டுமண்டலந்தானருந்தினுக்கால் தீருகிறநோய்களுகிராணிசூலை, சீனியிட்டுப்பறங்கிப்புண்வெட்டங்குட்டை சிரசில்வருஞ்சூலைமுதற்கரப்பன்போமே. 523

சூலைபோங்கபாலத்திற்குட்டம்போகுந் துயர்விளக்கும்நாவதனிற் சூலைபோகும், சாலைபோம்வெடிசூலைநெஞ்சுசூலை தட்டிமிதித்தொடித்தாற்போல்சரீரசூலை, சீலம்போங்கழல்வாதந்தந்தவாதந் தீரும்தீயெரிக்கும்விலாவெலும்புவீக்கஞ்சோகை, காலைபோமுடச்சூலைபக்கச்சூலை கரப்பன்முதலனைத்துமேகழன்றுபோமே. 524

குருமூன்னிற்கவும்.

போகின்றவியாதிக்குப்பத்தியத்தைச்சொல்வோம் புலத்தியனே கண்மணியேஞானமூர்த்தி, வாவதற்குச்சரீரங்கள்பிலமறிந்துவதின்முன்பித்தவெட்டைவாதவெட்டையானால், பாவதற்குப்புளியுப்பைமாறச்சொல்லிப் பருங்கோழிமுருங்கைக்காய்துவரையாம், ஆவதற்குமுசலுடும்புகீரைத்தண்டு அப்பனேசிறுகீரைபாங்குகேளே. 525

பாங்குகேள்மிளகுமஞ்சள்வெந்தயமீருள்ளி பரிவானவெள்ளுள்ளி சீரகங்கருவேம்பு, பாங்குகேள்பெருங்காயம்பத்தியத்துக்காகும் பணவெல்லம்கல்லவெல்லமிரண்டுமாகும்,பரங்குகேளிப்படியேசாப்பிட்டாக்கால் பற்றற்றுவல்வினையுமாறிப்போகும், பாங்குகேள்வாதவுடல்தூலகாசம் பத்தியஞ்சித்துப்பிட்டுப்பார்க்கச்சொல்லே. 526

காமாலைக்குதசமுகவுதயாக்கினி செந்தூரம்.

பாரப்பாலோகமென்றவுருக்குதன்னைப் பாடுகிறேன்காமாலைபாண்டுதீர, சீரப்பாபேதிகண்டபேர்கட்கெல்லாந் திசமுகயுதயாக்கினி செந்தூரமென்பார், சேரப்பாசூதமொன்றுகெந்திரண்டு சிறப்பான காந்தமதுபலமும்நாலு, நேரப்பாவுருக்குத்தூள்பலமும்நாலு நெகிழாட்டுக்கற்றழைச்சாறுவார்த்தே. 527

கற்றழஞ்சாற்றிலல்கடிகைநாலு களிபோலேயாட்டியேவில்லை கட்டி, விற்றழச்சட்டியிலேயாலிலையைப்பரப்பி மேல்வைத்துவில்லை தனியிலையால்மூடி, கொத்தானசீலைசெய்துமண்ணுஞ்செய்து கொடிய தோடுப்பேற்றித்தியைமூட்டி, முத்தாழமூன்றுபத்துக்கடிகையங்கே மூட்டிஈபார்ப்பளவில்செந்தூரமாமே. 528

ஆதியதோர்செந்தூரந்தூளாயாட்டி யடைத்திடுவாய்குழாயிலே யன்பாய்மைந்தா, பாகியதோர்சுக்குத்தூள்விராகனென்றில் பாய்ச் சடாரசெந்தூரம்பணந்தரன்மூன்று, வாகியதோர்நெய்தேனிலுண்ணச் சொல்லு வலியதொருபெருவயிறுகாமாலைசோகை, எகியதோர்பாண்டு பித்தம்விஷபாகந்தானும் விந்தனத்தில்வீழ்த்தியபோலெரியுந்தானே.

லோக செந்தூரம்.

தரனென்றயுதயாக்கினிதிசமுகசெந்தூரஞ் சாற்றுகிறேன் அரப் பொடியுமரசுகெந்திகாந்தம், தேனென்றவகையொன்றுகழஞ்சிரண்டு சிதமுமற்கற்றுழஞ்சாற்றிலாட்டு, மானென்றநலசத்திலிட்டுவைத்து வாய்மூடிப்பார்த்திருக்கவேகும்பாரு, கானென்றசாற்றுலேயாறவிட்டுப் பின்புகாட்டிமூன்றுதரம்வேகவையே. 530

கலந்ததோர்மருந்தங்கேயாறினுக்கால் கல்லிட்டுஆர்க்கவேதூளா யாட்டி, அலர்ந்ததோரனுபானம்வாய்வுக்கானல் அப்பனேதிரிகடுகு பொடியைச்செய்து, குலர்ந்ததொருபற்பத்தில்பணவிடைதான் கூட்டியேபொடியிரண்டுகாசிடையிற்சேர்த்து, வலர்ந்ததொருவுட்கொள்ளத்தேனிற்சேறு வாய்வுவருஞ்சன்னிக்குவரிசைகேளே. 531

வரிசைபெறச்செந்தூரம்பணவெடைதான்ரண்டு வாங்கிநீவெள் ளுள்ளித்தயிலத்தூட்டு, வரிசைபெறப்பிரமேகந்தீரவென்றுல் மருதோன்றிச்சாற்றிலூட்டுவண்மையாக, பரிசைபெறஎரிகுன்மம்போகவென் றுல் பருஞ்சீந்திற்றண்டுடனேபரிவாயூட்டு, உரிசைபெறவாதங்கள்தீரவென்றுல் உற்றகொச்சிக்கொடிவேலிகொழுஞ்சிவேரதானே. 532

வேளையில்முருங்கைத்தோல்சாற்றிலாதல் விரைந்திடவேவாதம் போமிகுதியாகில், நாளையிலேபெருங்காயத்தன்னிலாட்டு கல்லமஞ்சள் காமாலைகாசமாக, தூளையிலைப்பூவரிசிச்சீரகமும்நோய்த் தூளாட்டிப் பாலிலேயுண்ணப்போகும், வேளையிலேயந்திசந்தி கொண்டபோது வீறிட்டுஅடங்கிநோய்பிடியுங்காக்கே. 533

பிரிவுக்குக்கோடாசூரிக் குளிகை.

பிடித்ததொருகாக்கையிடவாயிற்கேளு பெருக்கவேயுப்பிட்டுவிடத் திரையின்விறகால், அடித்ததோரீசலிவறகுத்தன்னில் அடிக்கியேதிரி யெரித்துச்சாம்பலாக்கி, அடித்ததோர்சாம்பல்வேறுப்புவேறுய் ரண் டையுந்தான்வீட்டின்மேல்தூவக்கேளு, குடித்ததேரெண்ணெய்தனைக் கொப்பளித்தாற்போலக் கூட்டமெல்லாம்வேவ்வேறேபிரிந்துபோமே.

கூட்டமெனுநோயறவேகோடாசூரிக் குளிகைதனைச்சூட்டுகி
றேன்கூர்ந்துகேளு, ஈட்டமெனும்ஈரப்பிரசங்காந்தங்கெந்தி இயலான
வரிதாரஞ்செவ்வாலங்கொட்டை, நாட்டமெனுந்திப்பிலியாந்திரிப
லையுமுள்ளி நலமாகவகையொன்றுகழஞ்சியொன்று, காட்டமெனுஞ்
செம்புத்தூளீராறுகுன் கழஞ்சப்பா அக்காரகாரமொன்றே. 536

ஒன்றுகும்வாச்சாரம்கீர்வள்ளிவிரைதா ளுரைசினையப்பனைக்
கிழங்கு ஆக்கக்கூட்டி, நன்றுகளுளொன்றுக்கரிப்பான்சாற்றில நல
மானவிடாமலைகடிகையொன்று, அன்றுடமெட்டுநாளரைத்துதீயும்
அப்பனையுளுந்துபோல்குளிகைகட்டி, குன்றுகும்வியாதிக்குவுறுதி
கண்டு கொடுத்துவர ஆள்பலமுங்குறித்துப்பார்த்தே. 537

பார்த்துசெய்பிலவதிகப்பாண்டுபோகப் பழச்சாற்றிலிரண்டுண்
டைபதமாயுண்டு, சேர்த்துசெய்செறியாமைக் குணத்துக்கென்றுல்
செப்பரியபசுவினெய்கிராணியானால், சேர்த்துசெயச்சுக்குநீர்தன்னி
லூட்டுச் செகமாளமோராகுமுள்ளங்கிரோகும், கார்த்துசெய்விரோ
சிக்கயேரண்டெண்ணெய் கட்டுமேலங்கழற்றவென்றுல் வெல்லத்
தூட்டே. 538

ஊட்டுவாய்பழச்சாற்றில்விஷத்துக்கென்றுல் உட்கொண்டுமே
லுக்குந்துவாலைபோடு, நாட்டவேநெல்லுமுளைச்சாற்றிலுண்ண நா
சமாம்வினையனைத்தும் நன்றுப்க்கேளு, பூட்டிடா நீர்ப்பிளவைமேல்
வெளுப்பு புகழானலேபனத்துக்கெல்லாமேதான், நீட்டடாமுத்தக்
காசிடித்தநீரில் நெஞ்சானகிராணிக்குநேரேகேளே. 539

நேரானவசீரணமுங்கிராணிசூலை நிலையாதகடுஞ்சூலைக்கெல்லா
மப்பா, வவரானமுருங்கைத்தோல்சாற்றிலூட்டு மிகுந்தசெறியா
மைக்குத்தயிரிலூட்டு, வாரானசன்னிக்குமத்தஞ்சாறு மைந்தனே
யுள்ளுக்குமேலும்பூசி, சீரானமூச்சடைப்புசுவாசகாசந் தீரவேவெள்
ளாட்டுப்பாலிலூட்டே. 540

ஊட்டுநீபிரமேகமூஷ்ணந்தீர வுறவாகநொச்சிச்சாறூட்டியூட்டு,
நாட்டுநீகண்புகைச்சல்போகவென்றுல் நலமானபழச்சாற்றில்நெற்றி
யிலேதேய்ப்பாய், நீட்டுவாயுடலெரிவுபோகவென்றுல் நெல்லிக்காய்ச்
சாற்றிலேநினைவாயூட்டு, கூட்டுநீதண்ணீரில் பித்தம்போகுங் கூரான
கழுநீரிலுஷ்ணம்போமே. 541

போகுமடாவாய்வாதம்நடுக்குவாதம் புகட்டுநீசாதிக்காய்ப்பொ
டியிலப்பா, ஆகுமடாவுடல்வீக்கஞ்சிறுநீரிற்றீரும் அப்பனேவிஷக

டியுங்கடிவிஷமுமிக்க, வாகுமடாவஞ்சனைக்குச்சுக்குநீரில் வலிகடுப் புத்தீரவென்றுல்வசம்புத்தூளில், வகுமடாவாதமறுமுள்ளிச்சாற்றில் இயலானவனுபானங்கோடிதானே. 542

வாய்வுக்குத்தைலம்.

கோடியென்றவாய்வுக்குத்தயிலஞ்சொல்வேன் கூர்ந்துகேள்புலத்தியனேகுறுக்குத்திட்டம், தேடிநீல்லுவாய்வேரும்கொச்சி வெருளுஞ்சிற்றுமணக்குவேர்வகைக்குக்கேளு, கேடிலாப்பலமொன்றுயிடித்துவாங்கிக் கிருபையுடன்சலம்பத்துப்படியும்விட்டு, நாடிநீரன்டொன்றுய்க்குறுக்கிவாங்கி நாட்டுவாய்சிற்றுமணக்கெண்ணெய்படியுமொன்றே. 543

ஒன்றுனகள்ளிப்பால்படிதானொன்று வுத்தமனேவெள்ளுள்ளிப்பலமிரண்டு, நன்றுகோசலந்தான்படியுமொன்று நலமானதிரிபலையும்பலமூமூன்று, குன்றுமலாட்டியந்தயிலத்திட்டுக் குறுக்கிவந்தபதமறிந்துவடித்துக்கொண்டு, நின்றுகுமீசனுக்குப்பூசைசெய்து நிணவோடேகாசெடைதானுண்ணச்சொலலே. 544

சென்தூர ஆனந்தவைரவன்.

உண்டவுடன்வாயுவென்றதனைத்துமோடுமொழியாதவாயுவென்றுல்கோடாசூரி, உண்டையிட்டுவுண்ணச்சொல்தீருந்தீரு முத்தமனேயானந்தவைரவணக்கேளு, உண்டாகும்வியாதிகளிற்சுரங்கள் கூடில் உசிதமடாவிபரமுடனுற்றுக்கேளும், உண்டாகுமிதன்பேருசெந்தூரக்குளிகையுற்பனத்தையாருக்குமுரைக்கொணுதே. 545

உரையாதசூதமொருபலமுந்தூக்கு உற்றதோர்செந்தூரப்பலமுமொன்று, நிரையாதகெந்தகமும்பலமுமொன்றுநேரானயப்பிரேகம்பலமுமொன்று, கரையாதநாபியுமோபலமுமொன்று காணப்பாபலமூன்றுசெவ்வாலங்கொட்டை, வரையாதயிவைசேரநாகவல்லிச்சாற்றில் மயனம்போலாட்டிநீவழித்திடாயே. 546

வழித்தமேற்மருந்துக்குஷிபரங்கேளு மைந்தனேவெற்றிலையைத்துவாங்கி, வழித்திடுவாய்விரற்கனத்தில்குகையுட்குள்ளே மறுபடியுமறுத்தந்தக்குகைக்குள்வைத்து, வழித்தரைத்தவெற்றிலையுங்குகைமேற்பூசிவாகாகச்சீலைசெய்துமண்ணுஞ்செய்து, எடுத்துகெசபுடமொன்றுபோடுபோடு வளரருணன்போலிருக்கும்வரிசைகேளே

கேளப்பாசெந்தூரமெல்லாம்வாங்கிக் கிருபைபுரிசெவ்வாலங்கொட்டையோடு, வாளப்பாநாபியிவைபலமும்மண்டி மாட்டுநீவெற்

றிலேச்சார்விட்டுநன்றாய், நாளப்பாவொன்றறைத்துவழித்துநீயும்நற்
குன்றிப்பிரமாணமூண்டைகட்டி, மீளப்பாசுக்கிந்து சித்திரமூலம்
மீறுமற்பொடிசெய்துவெருகடிதான்றூக்கே. 548

தூக்கியதோர்பொடியிலொருகுளிகையிட்டுச் சுடுசலத்தில்சர்க்
கரையில்தன்னிலூட்டு, தாக்கியதோர்காளைமூன்றில் சுரமெல்லாந்
தீருந்தடைபட்டசுரசூலை கிராணிபாண்டு, தேக்கியதோரிவ்வகைக்
குன்குன்மத்துக்குஞ் செலுத்திலுலணத்தும்போம்பத்தியங்கேளு,
ஆக்கியதோர்சோற்றுக்குப்பாலாமற்றுன் றுகாதுபுளியுடலில்லித்
திடாதே. 549

இரசாயனவைரவன்.

அடுத்ததோரசானவைரவத்தைச்சொல்வேன் அப்பனேமச்ச
கெந்திராவறிந்துகொள்ளு, தொடுத்ததோருநோய்க்கெல்லாஞ்சம்
பிரதாயந் தொடுமுன்னேநோயெல்லாந்தூளாய்ப்போகும், கடுத்த
தொருசூதம்ரண்டுவசம்புரண்டு கழஞ்சப்பாசுக்கிரண்டுமிளகிரண்டு,
வடுத்ததோரிந்திரண்டுவாளம்ரண்டு இயலான திரிபலையுங்கழஞ்
சிரண்டே. 550

இரண்டாகுமூருத்திராட்சமிவைக்குநேரா யிட்டிடுவாய்வெள்
ளுள்ளிப்பருப்புதானும், இரண்டாகும்பாண்டத்தி லிட்டுக்கிண்டி
யீரமதற்குள்ளியிடதயிலங்கொண்டு, இரண்டாகுஞ்சாமமொன்று
மத்திபின்பு யெருக்கன்பால்வார்த்துமொருசாமமத்தி, இரண்டாகு
ஞ்சாமமொன்றுவெள்ளாட்டுப்பாலி லிட்டிளக்கிமத்திகெண்டைமீன்
பித்துவாங்கே. 551

வாங்கியதோர்பித்துக்குள்சாமமொன்று மத்தித்துவாறியபின்
னெடுத்துமைந்தா, பாங்கியதோர்குன்றியிடைகுளிகைகட்டிப்ப
ருமலந்தவியாதிபார்த்து, தாங்கியதோர்கரிப்பானீருள்ளிகீரிற்க
லந்தீருமிஞ்சிச்சாறிவையிலூட்ட, தேங்கியதோர்மூயல்மூர்ச்சை சி
லேற்பனத்தின் றிறமானமூர்ச்சையிவையனைத்தும்போமே. 552

சிலேபாணம்.

போமப்பாதலேவலியுஞ்சன்னிமூர்ச்சை புகழானகாலாதிவேத
னையையா, ஆமப்பாமூக்குநீர்ப்பாய்ச்சல்தானும் அரோசிமுதற்பறந்
தோடுமப்பாற்கேளு, வேமப்பாசுமெல்லாமொழிந்துநிற்கு மென்
சிலேபாணமென்றகுளிகைசொல்வோம், நாமப்பாசிலேயொன்றுதித்த
மொன்று கலமாகச்சுத்திசெய்துயெடுத்திடாயே. 553

எடுத்திடாமோர்சாய்ச்சித்தெளித்துக்கொண்டு இதமாகச்சா
மமொன்று ஆட்டிவாங்கி, தொடுத்திடாய்மிளகிடைக்குக்குளிகைக

ட்டிச்சுரங்களுக்குப் பசுவின்மோர்க்குள்ளேயூட்டு, விடுத்திடாச்சுர மெல்லாம்விட்டுப்போகும் மீறியதோர்சிலேற்பனத்தின் சுரத்துக் கெல்லாம், கொடுத்திடாய்சுரகாசகுடோரிமாத்திரை கூறுவேன்ம ருந்துவகைகூறுவேனே. 554

சிரகாசத்துக்குத்தாளகக்குளிகை.

கூறுவேனரிதாரமிரதஞ்சுக்கு கூர்மையுறும்வெண்காரந்திப்பி லிதானு, மீறுமேசம்பாகங்கரிப்பான்சாற்றில் வெண்ணெய்போல் சாமமொன்று ஆட்டிவாங்கி, ஊறுமேநொச்சிச்சாற்சாமமொன்று ஊ ராட்டிப்பாவட்டங்காய்பாற்கட்டி, தேறுமேயிஞ்சிநீர்தேனிற்சேர் த்துதிடமாகவுண்டையொன்றுகொடுத்திடாயே. 555

கொடுத்திடவேசுரகாசஞ்சுவாசகாசங் குத்திருமல்கெட்டிருமல் குறுகுறுப்பு, விடுத்திடவேசரம்பாய்ந்தாற்போலேயோடும் வீறங் கச்சுத்தியுடமருந்துசொல்வேன், கொடுத்திடவேநாபிக்குக்கீரைச்சா ற்றில் சூட்டுவாய்தினமொன்றுபழச்சாற்கொண்டு, அடுத்திடவேநா ளொன்றுசிலேதான்சுற்றி யப்பனேதாளகத்தின்சுத்திகேளே. 556

தாளகத்தையரம்தோலகியாழத்திலிட்டுத் தயவாகமறுதினத்தி லெடுத்துக்கொண்டு, மீளகத்திலுயிரெல்லாம்நோயைத்தள்ளி விடாத சுரமனைத்துக்கும்விபரங்கேளு, தாளகத்தைவலுப்பிக்குங்கற்பூராதி காயத்திரிமாத்திரையின்கட்டுதானும், கீழகற்று கற்பூரமிரதமிக்க கிருபையுயர்சாதிக்காய்சமனுயாட்டே. 557

சுரத்துக்கு உண்டை.

ஆட்டியதோர்தூளிடைக்குரெட்டிவாளம் அப்பனேசேர்த்த ணைக்குமரிச்சாற்றூல், தீட்டியதோர்சாமம்மீ யரைத்துவாங்கிச் சிறு வுளுந்துப்பிரமாணமுண்டைகட்டி, நாட்டியதோர்சர்க்கையிலீய்ந் தாயாலுல் நலமானயெட்டுவகைச்சுரமும்போகும், மீட்டியதோருட லறிந்துகொடுத்தாயாலுல் நின்றுபோங் கடிகையொரு மூன்றுமூ ன்றே. 558

வனதிகெசாங்குசரசம்.

மூன்றுநாழிகைக்குள்ளேசுரங்களிற்கு முறையாகப்பத்தியங் களிச்சாபத்தியம், மூன்றுநாழிகைவனதிகெசாங்குசரசத்தையுரை க்கிறேன்சுரசந்தத்தம்நாபிநாகம், தூன்றுஞாள்மடைத்தாரம்வாளங் கெந்தி சொர்னம்லோகமிரண்டுஞ்சமனுய்ச்சேர்த்து, தான்றுநாளுத் தமத்தாளிச்சாற்றில் தயவாகவேழுகிரகாரமாட்டே. 559

ஆட்டடாமத்தஞ்சாற்மணித்தக்காளி யடவாகமுன்போலேய ரைத்துயாற்றி, நீட்டியேபொரிகாரமாட்டிவாங்க நிணவாகக்குகைத்

தடவிப்பின்பு, ஊட்டியேயுண்டைதனைக்குரைக்குளிட்டு வுறவுளேர் வெண்காரமரைத்துமேலு, மூட்டியேதெரியாமலேழுசீலை முறையா கச்சுற்றிமீமண்ணுஞ்சேரே. 560

மண்செய்துபாண்டத்தில்நடுவேதானு மைந்தனேதமரிட்டுவோ டுபோட்டு, திண்செய்துஅதன்மேலேமணலைக்கேளு திறமாகநாலுவி ரற்கடையுமிட்டு, பண்செய்தகுகைதனேமணமேல்வைத்துப் பாங் காகமேலுமந்தப்பாண்டத்துள்ளே, தண்செய்தமணலதற்குமுக்காலி ட்டுத் தயவாகமேற்சட்டிகவிழ்த்துமூடே. 561

மூடியேயெண்சாமங்கமலவன்னி மூட்டிநன்முயாறியபின்கல்வ த்திட்டு, நாட்டியேகணேசர்க்குப்பூசைசெய்து நலமாகத்தூளாக்கி ச்சிமிலில்வைத்து, நீட்டியேநோயறிந்துகுன்றியிடையூட்டுநிலத்து நின்றவிருவகையாம்விஷங்கள் தீரும், வீட்டியேயனுபானம்வெற்றிலே யிற்பொதிந்து மென்றுதின்னச்சொல்லங்கேவிபரங்காணே. 562

நீராமை கவுசி மகோதரத்துக்கு உண்டை.

காணப்பாசலக்கழிச்சல்குட்டரோணங் காயாதசுவாசமகோத ரத்துக்கெல்லாம், பூணப்பாசினியிலேயுண்ணச்சொல்லு புகழாகவ யிற்றுவலிவியாதிக்கேதான், ஊணப்பாகாட்டாமணக்குநீரிலூட்டு வுற்றவெள்ளைச்சாரணைநீர்சுரத்தைத்தள்ளும், தோணப்பாதிரிகடு குபொடியிலூட்டு சுகஜன்னிமுதலானதெல்லாம்போமே. 563

போமப்பாயிஞ்சிச்சாற்றுள்ளேயுண்ணப் பொதுவான திரிதோ ஷம்போகும்போகும், வேமப்பாசூலைக்குப்பெருங்காயத்தூட்டு மே லுமினியனுபானம்வினையமாக, தாமப்பாசெய்திடவேபிணிகளெல் லாம்போகுந் தயங்காமற்பத்தியமாயிருக்கச்சொல்லு, ஆமப்பாயஷ்ட சூன்மம்நீராமைகவுசி யப்பனேமகோதரமுந்தீரக்கேளே. 564

கேளப்பாமகோதரத்துக்குண்டதென்னைக் கெட்டியாய்ச்சொல் லுகிறேனிருப்புச்சல்லி, நாளப்பாசெம்புதுத்தம்நாகமூன்றும் நல மாகவெவ்வேறேசல்லியாக்கி, மீளப்பாவகையொன்றுகழஞ்சியொன் றுதோராகயிந்துப்புநிமிளைகெந்தி, வாளப்பாமஞ்சிலையுங்கெவுரிதானு மாருமலைவ்வொன்று கழஞ்சிதூக்கே. 565

தூக்கியேபொடிசெய்துவைத்துக்கொண்டு சொல்லுகிறேனைய த்தகட்டையெருக்கம்பாலில், தாக்குவாயாழாக்குக்குள்ளேநீயுந் தய வாகமூன்றுதினமூறிப்பின்பு, ஆக்கியதோர்மூன்றகட்டுப் பொடியுங் கூட வமைத்ததற்குள்ளெருக்கம்பால்சிறுகவிட்டு, வீக்கியேபழச் சாறும் அரைக்கால்விட்டு விரவியொருகாகத்திலடைத்திடாயே.

அடைத்தேதார்மருந்தனீரவியில்வைத்து அன்றுடங்கிண்டி வரத்தினந்தானேழு, புடைத்தேதாரவிபட்டுவெந்துநீறிப் பொன் மெழுகுபோலிருக்குமொன்பதாகாள், உடைத்தேதோருண்டைக்காயைப்போலு முருட்டிநீயுலரவைத்துக்குழலிலிட்டு, படைத்தேதார்வியாதிக்குஅனுபானங்கள் பகருவேன்மைந்தாகேள்கண்டிடாயே.

கண்டிடாய்வியாதிகண்டு அனுபானஞ்சேர்த்துக் காட்டினுற்றீருறவியாதிகேளு, மண்டிடாய்மகோதரமுஞ் சலக்கோவையகிவை மதியழிக்குநீர்நமைவுகசிவுபாண்டு, வண்டாயவலிகுன்மந்தெறிகுன்மந்தானும் மகத்தானசத்திகுன்மம்வெப்புப்பார்வை, தெண்டிடாய்கடிகுன்மமேமுங்குன்மந் திரிகுன்மம்விஷபாசஞ்சோமம்போமே.

சிலோதாரையுண்டை.

போமென்றகிரிச்சினங்க ளாறும்போகப் பூட்டுகிறேன்சிலோதாரையுண்டைதன்னை, வேமென்றநாபிகெந்திசூதமிந்து மென்கவுரிபெருங்காயஞ்சவாக்காரந்துருசு, ஆமென்றகோர்வாளம்நஞ்சுபோக்கிவையெல்லாஞ்சமனஞ்சுத்தளாயாட்டி, வேமென்றவோடாட்டால் பழச்சார்வார்த்து வெண்ணெய்போலாட்டி வாங்குவாங்கே. 569

வாங்கியதேர்மருந்தனீமிளகுபோல மணியாக்கிக்குழலிலே வைத்துக்கொண்டு, வாங்கியதாரனுபானம்வெல்லம்நெய்யாம் வளமாம்பழச்சாறும்சுருக்கிச்சொன்னேன், தேங்கியதோர்வியாதிகேள் தூலகாயந் திறம்பெரியவயிறுநோயகவைநோயும், பாங்கியதோர் பெருவயிறுசெண்டைகுன்மம்பறந்தூறும்நீர்க்கோவைதீரும்பாரே.

சுராங்கிஷம்.

பாரப்பாசுராங்கிஷத்தையுரைக்கக்கேளு பண்பாகப்புறக்கருவும்அகக்கருவும்புறக்கி, பாரப்பாபன்னிரண்டுலட்சம்பாட்டில் பாடினேனஞ்ஞூறுயெண்பத்தைஞ்சும், பாரப்பாநோயெல்லாம் மத்தியோடும் பண்டிதருக்கிந்தூல்பழையதங்கம், பாரப்பாநாலுதிக்கும் போகிசித்தர் பார்த்திருப்பார் பொருளாசைபாரார்காணே. 571

காணப்பாசூதமொன்றுகெந்தியொன்று களுமத்தம்விரைமூன்றுசுக்குநாலு, ஊணப்பாதிப்பிலியும்நாலுதூக்கு வுரைக்கவதைதூளாயாட்டியடைத்துக்கொண்டு, பூணப்பாகுன்றியிடைபழச்சார்தன்னில் புகட்டிஞல்சுரம்போகும்விபரக்கேளு, தோணப்பாபழச்சாற்றிலிஞ்சிச்சாற்றில் துவளவரைவெவ்வேறசாமம்ரண்டே. 572

ரெண்டாகுஞ்சாமமரைகடலீபோலே யெண்மகளேயிடித்துலர்த்திவைத்துக்கொண்டு, ரெண்டாகுஞ்சுடுவெந்நீர் தன்னிலூட்டவெ

ண்சுரமுந்திரிசுரமுஞ்சன்னிபின்னு, மூண்டாகும்விஷசுரமுஞ்சன்னி தோஷந்தானு மூற்றமுறைதின்சுரமுமொழிந்துபோகும், அண்டாது சுரமெல்லா மெய்விட்டோவறைகிறேன்துத்தாசத் தாண்மைபாரே.

துத்தாசம்.

ஆண்மையென்றதுத்தமொன்று தருசுவொன்று அரிதாரந்தானென்றுசூதமொன்று, வாண்மையென்றகெந்தியொன்று சிலாதானென்று மைந்தனேயிவைசேரத்தூளாயாட்டி, தாண்மையென்றசட்டிக்குளிட்டுப்பின்பு சாரணையிலச்சாறுபடிகால்விட்டு, கேண்மையென்றவெண்கலக்கிண்ணியாலே கொச்சிக்கமூடியேசீலைசெய்யே.

சீலையதுமண்செய்துமண்ணுமிட்டு தீபாக்கினியாலேசாமமொன்று, சாலிசெய்தாரியபின்கல்வத்திலிட்டுத் தக்காளிச்சாறுவகையிரண்டுஞ்சேர்த்து, சேலிசெய்தமயனம்போல்வழித்துநீயுஞ் சிறுபயறுப்பிரமாணமுண்டைசேர்த்து, காலிசெய்ததனுபானம்பூரஞ்சூடன் கஸ்தூரிசிறக்கவதிற்கலந்துஆட்டே. 575

குளிர்காச்சலுக்குப் பாஷாணவுண்டை.

வாயுவென்னப்பட்டதுக்குத்தேனிஞ்சிச்சாற்றில் வளமாகயொ
ருபோதுகொள்ளத்தீரும், தேயமூதல்கலக்கியதுபழமலம்நீர்க்கட்
டுந் திறந்துவிடுமல்லாதுதேகசோஸ்தமுண்டாம், கேயமூள்ளபோக்
காகுமலக்கட்டில்லை நினைவுகெட்டமாந்தருக்குச் செய்யவேண்டாம்,
மாயமூள்ளமருந்தெல்லாமடக்கம்விட்டுச்சொன்னே மப்பனேவொப்
பில்லை யினைகோய்பறக்கும்பாரே. 1305

வேறு.

பறந்திடும்பத்துநாட்குள்பழமலங்கழியும்வாய்வு, பிறந்திடுமூ
ஷ்ணம்போக்குமிருமலுமீளாநீங்கும், சிறந்திடுதினவும்வாங்கும்நிரை
ந்ததையுண்டுவந்தால் நீள்பிணியண்டொட்டாதே. 1306

வேறு.

ஒட்டாதஈளையோடிருமல்விக்கலோடிடவே திப்பிலிவெந்தயம்
நெல்லிப்பருப்பு, சட்டாதசிற்றரத்தைநெற்பொரிசர்க்கரையுஞ் சம
னுகவகையொன்றுகழஞ்சியாறு, மூட்டாகக்காயவைத்துத்தூளாயா
ட்டி முறையோடே வடிகட்டிக்கொண்டு நெய்யில் விரவிகட்டாக,
யுந்தி சந்தி கொட்டைப்பாக்களவு கடுங்கழறத்தின்றுவரில்கள்ளம்
போமே. 1307

கள்ளம்போம்களகளத்தயிருமலீலை கபங்களோடுகயக்கமுங்
கல்போகும், கள்ளம்போமின்னமொன்றுவிக்கலுக்குசனித்துதொரு
விளாம்பழத்தின் விரையைப்போக்கி, கள்ளமில்லா மூலிப்பாலில்
சாரித்தப்பால்கடிய நல்லதிப்பிலியைவறுத்துக்கொண்டு, கள்ளமறத்
தூளாக்கிவடித்துயிந்து காற்கழஞ்சுமமுக்கிறுவேர்சுட்டாரியே.

காரியான திவையொக்கவொன்றுச்சேர்த்து கறந்தகொம்பில்தே
னிலேகலந்துகொண்டு, விரிவானயந்திசந்திகொள்ளக்கொள்ள விக்க
லெல்லாம்பறந்தோடுமிளைப்பமீளை, பிரிவானவிருமலொடுவரட்சிதா
கம் பேரானதோஷமுதல்பிரிந்துபோகும், தெரியாதவகையெல்லாம்
சொல்லிவிட்டோம் சிறந்தமகாவில்வாதிலேகியமாகிலத்தே. 1309

மகாவில்வாதிலேகியம்.

மாநிலத்தில்வில்வாதிலேகியத்தை வகையாகச்சொல்லுகிறேம்
வரிசையாகக், கானகத்திலில்லாதவில்வவேர்தான் கனத்தபிரயோக
த்துக்கஞ்சுதுலாம்கொறுக்கித், தானென்றபாண்டத்தி லஞ்சுகலநீ
ரும் சாதகமாயடுப்பேற்றியெட்டொன்றுக்கிக், கோனென்றவடிகட்டி
தாழிசேர்த்து கூறுகவஞ்சுதுலாம்பொடியைப்போடே. 1310

போட்டபின்புசர்க்கரைதானுருகிற்றுனல் பிறகுமதைவடிகட்
டித்தாழிசேர்த்து, நாட்டமுடனிஞ்சிச்சாற்கெல்லிச்சாறும் நலமாக
வகைக்குமொருதூணிசேர்த்து, வீட்டிமையில்லாதகடைமருந்தைச்
சொல்வோம் வெதுப்பாளவெய்யிலிலே காயவைத்துத் தீட்டடா
தனிமிளகுப்பொடியு மொருகுறுணிதிப்பிலியுஞ் செவ்வியமொடு தூ
ளாறுபடியே. 1311

படியல்லால்பலமாகச்சுக்குப்பத்தஞ் சுபலமோடுயேலமிலவும்
கஞ்சிறுநாகம், கொடியதாளிசபத்திரி சிற்றரத்தை மதுரங்கோட்ட
மொடுபேரரத்தையக்கிறுகாரம், துடியாகவகையொன்றுபலதான
ஞ்சு சொன்னதின்பின்சாதிக்காய்பத்திரிகிறும்பு, பொடியாகவகை
யொன்றுக் கீரஞ்சுபலந்தான்பொடியாக்கிமருந்தெல்லாஞ்வடிகட்டிப்
போடே. 1312

வடிகட்டிப்பொடியெல்லாம் கூடச்சேர்த்து வளம்பெறக்கியாழ
மொடுபாகுசாறல்லால், நெடியதொருகருப்பம்பால் கொம்மட்டி மாத
ளையாம் நேத்திபெறுபழச்சாறுவகைக்கு மஞ்சுபடிதான், முடிவாக
முன்சாறும் கூடக்கூட்டி முறையோடேவடுப்பேற்றிபபாகுகாச்சி,
அடிமுடியாயிருக்கின்ற கணேசனைப்பூசித்து அக்குழம்புபாக்கே
மருந்துமமைத்திடுமே. 131

மருந்தானபொடிப்பாகில் தூவித்தூவி வளமாகக்கைவிடாக்கி
ண்டிண்டி, பொருந்தவேகிளறியபின்நெய்படிரண்டரையும் பொலிவு
டனேவிட்டுளக்கித்தேனும்வண்ணம், திருந்தவேவிட்டிளக்கிலேகிய
மாங்கண்டாய் தின்னவேயிருபோதுகொட்டைப்பாக்களவும், அருந்த
வதுமண்டலந்தா னனுகாதுநோய்க ளசடில்லைநோய்க்குமார்பாணி
யெனலாமே. 1314

ஆமப்பாதீராதநோயுங்கேட்கு மதினுலேயொழிகின்றவியாதி
கேளு, வேமப்பாகுன்மமுதற்குஷ்டம்போகும் வெட்டைபோம் சதி
யோடேரோசியம்போம், போமப்பாகூஷயகாச மிருபலீளைபுகைச்ச
லொடுநெஞ்சரிப்புபித்தசோகை, நாமப்பாகாமாலை தொந்திப்போடு
நலங்கொடுக்குமதிசாரம் நாடாதோடும். 1315

ஓடுகிறவயிறிறைச்சல்ரத்தக்கடுப்பு மூளமாந்தைதலைநோயுசுர
மாந்தைதீரும், சாடுகின்றவெரிவுங்காந்தல்தீரும் தாகம்போம் நீரேற்
றமுப்பிசமுந்தீரும், வாடாதபுலத்தியனேஞானசீலா வளமானசிவ
யோகிமச்சகேந்திரா, நாடுகின்றநோயெல்லாம் விட்டோடிப்போம்நல்
லபிர யோகமடாபத்தியமும்நலமே. 1316

பத்தியமுப்புநெய்பால்துவரைப்பருப்பாம் பழுதகற்றும்வழுதல
ங்காய் முருங்கைப்பிஞ்சாகும், சத்தியெனுமூளைத்தண்டுமவரைப்பி
ஞ்சாந் தனிநெல்லியண்டமொடிவிரரால் தேளிசுறுமீன், வெத்திபுரி
வெள்ளாடுகாடைமுசலுடுதி மீன்வகைகளிதுவெல்லா முலர்த்தியே
கூட்டு, மத்தியிலேவிடாமல் நீமண்டலந்தான்கொண்டால் மகாநோயு
ந்தீருமந்தமகிமைஈயறியே. 1317

வில்வாதிலேகியம்.

மகிமைக்குவில்வாதிலேகியத்தை வகையாகச்சொல்லுகிறேன்
மைந்தாகேளு, மகிமையுள்ளவில்வரோகமூசுபலந்தான் வாகாகுநொ
றுக்கியேயிருதூணிநீரில். மகிமையுள்ளபாண்டத்திலிட்டுத்தீமூட்டி
வளம்பெறவேகாளொன்றுய்க் குருக்கிவடிகட்டி, மகிமையுள்ளசர்க்
கரைதானீயாறுபலத்தை வற்றிஇன்றகியாழத்தில்மாட்டுவாயே.

மாட்டுவாய்போட்டதிலேதகர்ந்துக்காச்சி வற்றியதுகுழம்பாதி
ப்பாகாய்நிற்கு, மாட்டுவாய்மிளகுபொடி செவ்வியந்திப்பிலியும் வள
மான மகாராஜயோகதீரா, மாட்டுவாய்மலமச்ச கெந்திபுத்ராவகை
யொன்றுபடிகாலாய்வகுக்கக்கேளு, மாட்டுவாயேலமிலவங்கமிஞ்சிமக
த்தானசிறுநாகம் தாளிசபத்திரியே. 1319

பத்திரியோடிவைக்கெல்லாம் வகைக்கொருபலந்தான் பகர்ஜாதி
த்திரிகொம்புபலமரையா, மித்தனியுங்காய்வைத்து தூளாயாட்டி

யியல்பானசாறுபாகிதுபருவங்குழம்பாய், வத்திவரும்தத்திலேகன மருந்துதூளே வடிகட்டிதூவியதைவாகுடனேகிளறு, வெதுவெதுப்பாய்லே கியமாமதிலேநெய்தேன்விட்டு ஆழாக்குவிரவியதைண்டே. 1320

கிண்டியதுலேகியந்தானுண்ணக்கேளு கேடிலேகட்டைப்பாக் களவுஅந்திசந்தி, கிண்டியலேகியமருந்தவாயுற்று வலிகுன்மமின்கி ணித்தவிருமலோடீளைகாசங், கிண்டியலேகியத்தினு கெஞ்சுசிரிப்புவா ய்வு கிராணியதிசாரமொடுபித்தகாமாலே, கிண்டியலேகியத்தினுல்தே ககாந்தல் கிளர்தாகஞ்சோபமொடு வாதந்தொந்திப்போ. 1321

தொந்தித்தபலரோக முஷ்ணரோகம் சோகமொடு விஷபாண்டு சுரங்களுப்பிசங்கள், தொந்தித்தவயிறுளைச்சல்தோஷம்வாந்தி தொ டர்ச்சியாய்வருமிரத்தபித்தரோகந், தொந்தித்தநீரேற்றம்வீக்கமலக் கட்டுதொலையாததலைவலிதுயரந்தீரும், தொந்திப்பால்லேகியந்தான் மண்டலந்தான்கொள்ளு சூட்டுறன்குண்டலாதிலேக்கியந்தானே.

வேறு-குண்டலாதிலேகியம்.

குண்டலாதிலேகியத்தைக்கூறக்கேளு குவலயத்தில் மண்டுசங் கம்வேர்நூறுபலமும், செவியமதிற்பாதிகண்டங்காரியுமவ்வண்ணங் கடுந்திப்பிலிமூலம், பண்டமுத்தக்காசுவில்வம் சித்திரமூலம்பகர்ந் தோமே. 1323

பகர்ந்தோம்சீந்திலிலப்பினேவர் பலனும்வெட்டிவிலாமிச்சு, பக ர்ந்தோர்சிற்றமுட்டிக் கொட்டிக்கிழங்குமமுக்கிரிவேர், பகர்ந்தோம் வகைக்குநாலஞ்சு பலமுங்கூட்டியிடித்தநூள், பகர்ந்தோம்பாண்டந் தனிற்பத்து மாக்கால்பாணிசேர்ந்திடுமே. 1324

பாணிசேர்த்துத்தீமூட்டிப் பருவத்துடனே யெட்டொன்றுய்ப், பாணிகுறுக்கிக்கற்கவகை பகர்வோர்திப்பிலிபலமிரண்டு, பாணிக்கி சையசுகைநீறுபலந்தானுலுகாகப்பூ, பாணிக்கிசையசீரகங்களிரண்டு பலமும் வகைமூன்றே. 1325

நான்றமேலமிலவங்க முத்தக்காசுசிறுதேக்கு, மூன்றுங்கற்கடக சிங்கியொடு மூலம்சாத்திப்பெருங்காயம், மூன்றும்வகைக்கிரண்டு பலமிளகுபொடிதானைப்படியே, மூன்றுஞ்சுக்கும்பொடியரையா முழுதுமிடித்துத்தூள்வடியே. 1326

வடித்ததூளொன்றுக்கி வைத்தகியாழங் குழம்பதிலேகடித்தா ப்போலே, பொடிதூவிக்கிளரக்கிண்டிவற்றவைச்சு பிடித்தபிடியாய், நறுநெய்யோர்படியும் விட்டுக்கிண்டியபின், தடித்தநறுந்தேன் ப யொன்றுதான்விட்டிளக்கியேமே. 13

வேறு.

லேகியமோர்புதுக்கரகத்திட்டுவைத்து என்மகனேவியாதிகண்டுஅந்திசந்தி, லேகியமோர்மண்டலந்தானுண்ணுவுண்ணுமியல்பான வியாதிபோம்வகையைக்கேளு, லேகியந்தான்சிலேற்பனங்களெலலாந்தீரு மிடர்படுத்தும்வாயுவென்ற தெல்லாந்தீரும், லேகியத்தாலிரு மல்போம்குண்டவாய்வு மெட்டுவகைக்குன்மங்கள் பலவுந்தீரும்.

தீராதவிக்கலொடுவெங்காரங்கள் திறமானபீனிசங்களுதாவே தனைகள், தீராதசுரதோஷஞ் ஜன்னியோடு தேகத்திலேங்கல்குத்து குடைவுளைச்சல்தீரும், தீராதவுப்பிசங்கள் நீறேற்றம்வீக்கஞ் செய் யாமலக்கினியின்மந்தஞ்சீதபித்தந், தீராதனெஞ்சேரிப்பு வாந்திசூடு தெளியாதபலதோவுந் தெளியுந்தானே. 1329

தெளியாததோகங்கள் பலவுந்தீரும் செப்பினேன்பத்தியத்தை திறமாய்கேளு, தெளியாதபுளிகசப்பு புகையிலைமாங்காஷங்கள் சீரா னகடல்சம்பைப்பாகல்பூசினிக்காய், தெளியாதபாவக்காய்ப்புன்சுரை சோம்பு தீண்டாதேவிலக்கிவிடும்சேர்ந்தருந்தக்கேளு, தெளிவானநெ ய்பாலுமிளகுமும்பு செங்கீரைமூலைத்தண்டு வழுதலையுமாமே. 1330

ஆமப்பாகொடுப்பையோட்வரைபிஞ்சு மப்பனேவெள்ளாட்டுக் கண்டமாகும், ஆமப்பாகடல்சம்பைதேளுமாகு மந்நேரங்குளச்சம் பையுலர்ந்ததாகும், ஆமப்பாமூருக்கையிலைபிஞ்சுமாகு மரைக்கீரைத ழையறுத்துத்தளர்ந்ததாகும், ஆமப்பாபசுவின்மோர் புளியதாகு மாச்சபயஞ்சுவாசகுடோரி சூரணத்தைக்கேளே. 1331

சுவாசகுடோரி சூரணம்.

சூரணமாஞ்சுவாசமென்ற குடோரிதன்னைச் சூட்டுகிலேன்திரி கடுகுசிற்றரத்தை, சூரணமாம்வக்காகாரம் வால்மிளகு சொல்லரிய தேசாபுரம்பொரிகாரஞ்சமனும், சூரணமாந்தாளிசபத்திரி செட்டிகூ ட்டி சூரியபுடத்தினிலுலர்த்திதூளாயாட்டி, சூரணமாய்வடிகட்டிகலந் துபுதுக்கரகத் தூட்டுவாயனுபானஞ் சொல்லக்கேளே. 1332

சொல்லக்கேளனுபானந்தேனிஞ்சிற்சாற்றில் சுகமானநறுநெய் யுங்கூட்டிப்பாரு, சொல்லக்கேள்தீருகிற தெண்ணவென்றால் சுவாச மென்றதொண்ணூற்றுரும்போகும், சொல்லக்கேளீளையோடு யிரும ல்காசம் கூடதிகவெட்டைமுதல் தூளாய்போகும், சொல்லக்கேளி மகொத்தசெந்தூரம்புகுந்தால் தொல்வினைகள்விழுந்தோடும் சுருதி னே. 1333

குமரித்தயிலம்.

சுருதிவெட்டை சூட்டுக்குசெப்பக்கேளு சுகமானகுமரியெள்
னுந்தயிலந்தன்னை, சுருதிவெட்டிவேர் முத்தக்காசிதானும் தொகை
வகைக்கிரண்டுபலந்தேராணப்போட்டு, சுருதிகொற்றிமுடக்கொற்ரு
னமுக்கிரூவேர் துடியானசிற்ரூமுட்டியிலாமிச்சிகோரி,சுருதிதாமரவேள
யஞ்சீராசெங்கழுநீர் தணுங்காகொறுக்கி மூன்றுவகைபலமே.

வகையொன்றுபலமூன்றுவீதஞ்சேர்ந்து மைந்தனேயிடித்துத்
தூள்பாண்டத்திட்டு,தொகையாகதூணிநீர்விட்டடுப்பிலேற்றித்தோ
ன்றவதுநாலொன்ரும்குருக்கித்தாங்கி, பகையாமச்சாறுவகைகரிசாலைச்
சார் பாங்கனசிறுகீரைச்சாறுங்கூட்டு, மிகையாதகொடுப்பய்மொசு
மொசுக்கைச்சாறு மேற்குமறிகெல்லிக்காய்சாரே. 1335

சேரடாநீர்வள்ளிக்கிழங்குசாறு சிறந்தநல்விளாநீர்தான்சிறமா
யப்பா, சேரடாபடிதானும்வகைக்குநாலு சேரவிட்டுநாலொன்ரும்
குறுக்கிவாங்கி, சேரடாமூன்வைத்தகியாழத்தோடு திரட்டுவாய்வின்
பால்படிதானலு, சேரடாதாழியொன்றில் காப்புக்கட்டித் திருத்தி
யெண்ணெய்படிநாலுவிட்டுச்செய்யே. 1336

செய்யடாவிநாயகனேப்பூசைசெய்து திறமாகமேல்மருந்துசெப்
பக்கேளு, செய்யடாநெல்லிமுள்ளிமதுரமேலம் சிறுந்தசிறுநாகப்பூ
தேவதாரு, செய்யடாமரணசிட்டிமரமஞ்சள் செண்பகப்பூக்புழுக்
கைவேர் செவ்வள்ளிக்கொடியும்,செய்யடாநற்கெந்தஞ்செஞ்சந்தனம்
சித்திபெறுஞ்சகஸ்திரமாம் வேதைபோடே. 1337

போடடாவிலவங்கப்பட்டைபத்திரியும் புகழ்பூலாக்கிழங்குகோ
ட்டம் கிராம்புசாதிக்காய், போடடாபுகழ் வேகைமூன்றுகழஞ்சிபுரள
வேபிடித்தாட்டுயிளநீராலே, போடடாகலக்கியெண்ணெய்யாழத்
தோடுபோலிவான சாறுபாலுடன்தாழிக்குள்ளே, போடடாவடுப்
பேற்றிதீயைமூட்டி புரையற்றமூணுநாள் சிறுகொதியும்புட்டு.1338

பூட்டியபின்னுலாநாள்பதங்கடுக்கில்நீரும்பொசியாமல்வற்றுபத
மெழுகிலேதான், நீட்டியேசட்டிமுன்னங் குங்குமுங்கத்தூரி நிசபுழு
குசட்டமொடு கோரோசனையும், வகைக்குநேரட்டியேலகையொன்று
கழஞ்சிரண்டுநறுக்கியிட்டுவடித்திடுவாய் தயிலந்தன்னைப், போட்டில்
லேவண்டுகடிதானிய புடம்வைத்தும் போக்குடனேநால்நாளைச்செ
ருக்கால்மூழுகே.

முழுகடாசியக்காயரைப்புவெங்கீ முழுக்கன்றுபால்தயிர்மோர்
நிகசப்புமகற்று, முழுகடாமுறையோடே மற்றுநாள்கூட்டு மோக
மில்லைக்குமியென்னும் தயிலத்துக்கு, முழுகடாபித்தவெட்டைதலை
கண்ணேறுவுமூடானவுட்சூடுகாந்தல்தீரும், முழுகடாதேகமொருகாந்
திகாணும் மூக்கினீர்சிறுப்பு மடைபந்தம்போமே. 1340

அரக்கெண்ணை.

பந்தமுடனரக்கெண்ணை பித்தவெட்டைசுர்ங்கள் பகையான
சயித்தியநீர்மூன்றுவகைப்பணைப்பும், கொத்துடனே போவதற்குக்
கொம்பரக்கோர்படிதான் கூறுகப்பொட்டணமாய்கட்டிப்பின்பு, சித்த
முடன்சலங்குறுணிதனில் தோளந்திரமாய்த் தீமூட்டியெரித்து நா
லொன்றுய்வாங்கி, வைத்தவுடன்குறுந்தோட்டி வமுக்கிறுவோர்வகை
யொன்றுபலமஞ்சு நொறுக்கிடாயே. 1341

நொறுக்கியேசலங்குறுணிதன்னிற்போட்டு நேராகவேகவைத்
தாளொன்றுகி, முறுக்கியேயிவ்வகைகள் பிழிந்தகியாழங்கள்மூட்டு
வாய்தயிர்தண்ணீர்ப்படியிரண்டு, மறுக்கியேபசுவின்பால்படியும்நா லு
வாகானபழங்காடிபடியிரண்டு, தறுக்கில்லாநல்லெண்ணை படியும்நா லு
தாழியொன்றுகாப்பிட்டு சாற்றக்கேளே. 1342

சாற்றக்கேள்விநாயகனைப்பூசைசெய்து சதாசிவனைத்தியானித்
துக்கற்கந்தன்னை, சாற்றக்கேளமுக்குறுகுறுந்தோட்டிவேரும் சதகு
ப்பைபொன்மெழுகுதேவதாரம், சாற்றக்கேளிலாமிச்சம் புழுகைகை
வோர்ன்னரிதக்கோலம் கோஷ்டமொடுமுத்தக்காசே. 1343

முத்தக்காசதிமதுரஞ்செவ்வெள்ளிக்கொடியும் முறையாகவகை
யொன்றுகழஞ்சிநாலு, சுத்தெக்கக்கியாழம் வைத்துயிடித்தரூள்தன்
னைச் சுகமாகக்கியாழந்தயிர்தண்ணீராலாட்டிக், கொத்தக்கலக்கியே
யொன்றுய்ச்சேர்த்துக் கொடுந்தீயைமூட்டாம லொழுகுதீயெரித்து,
வற்றக்காச்சாமலேமூன்றுநாள்கழித்து மற்றுநாலாநாளில்வடிக்கும்
பதம்பாரே. 1344

பதம்பாருமெழுகுபதம் கண்டுநீயும் பருவத்தேபுழுகுசட்டங்
கோரோசினையும்போடு, விதம்பாருவகையொன்று கழிஞ்சிரண்டுமெ
லிசாய்பொடிச்சிட்டுவடிப்பாயப்பா, மிதம்பாருகுளிர் விட்டுவண்டு
பட்டிலைவத்து மீறுமல்தானியபுடம்பத்துநாள்கழித்து, பதம்பாரு
நாட்கொருக்கால்மூழ்க வாகானசீயக்காயரைப்புவெங்கீரே.1345

மந்தாரகாசத்தயிலம்.

வெந்நீரும்விளாவாமல் முழுக்கன்றுதயிர்பால் வீரூன்புளிகசப்
புப்புகையிலையுமாற்றுத், தந்நீர்மைநோய்களெலலாம் விட்டேயோடும்
சாற்றினேன் மந்தாரகாசத்தின்தயிலம், பன்னீர்போல்தெளிவதற்
குக்கியாழந்தன்னைப் பாடுகிறேன் புலத்தியனே பகரக்கேளு, நன்
னரிகுறுந்தொட்டிபொன்னுங்காணி நல்லவட்டத்துத்திவோர் சீந்தித்
தண்டே. 1346

சீந்தியொடுமுடக்கொத்தான் சீரார்செங்கழுநீர் சிறந்தநலம்ப
னைக்கிழங்குநீர்வள்ளிக்கிழங்கு, போந்தஅல்லிதாமரைவேர்வேட்டியி
லாமிச்சுப் புகழாலம்விழுதுமாதரம்பட்டையோடு, சாந்தமலைதாங்
கிவேர்நீர்ப்பூலாவேருந் தறித்திடுவாய்வகையொன்று பலந்தான்மூ
ன்று, சேர்த்திடிசுக்லமயங்குறுணிதண்ணீர் தீட்டுவாய்மிடாவிலிட்டு
த்தீயைமூட்டே. 1347

தீமூட்டியெட்டொன்றுய்குறுக்கிவாங்கி சீலைவெடிகொண்டுபின்
புசெப்பக்கேளு, நேயமுடன்கடைமருந்துகற்கஞ்சேர்க்க நிகழ்த்துகி
ரேமேலமிலவுங்கமதிமதுரம், மாயமுறுவாய் மாமஞ்சள் சகஸ்தி
ரவேதிவாய் விளங்கச்சோலம் கோஷ்டம்சிறுநாகம், நாமுள்ளசதகுப்
பைவெந்தயஞ்சாதிக்காய்நல்லசிறுதேக்காத்தை செவியங்கூட்டே.

செவியமொடுசெண்பகப்பூத்தேவதாரம் திகைத்ததுதான்வகை
க்கொன்று கழஞ்சுமூன்று, குவியவேநெல்லிமுள்ளி கெந்தங்கஸ்தூ
ரிமஞ்சள் கூரியபுழுக்கைவேர் சாதிபத்திரியும், செவியமுறுங்கோது
ம்பைகிறும்புநாற்கழஞ்சி செஞ்சந்தங்கொத்தமல்லி திப்பிலிசிற்ற
ரத்தை, கவியவருகடுரோகணிவிளாவரிசிதானும் கழஞ்சிரண்டுவகை
யொன்று காயவைத்துயிடியே. 1349

இடிபொடியைத்தாழைவிழுதுச் சாற்றிலாட்டி யியல்பாகச்சாறு
படியொன்றுவிட்டு, வடிவானகுமரியுடசாறுமரைப்படியும் வளமான
நல்லெண்ணெபடிமூன்றுகலந்து, முடிவானகியாழமூன்புவைத்ததிலே
சேர்த்து முகுர்த்தத்தில் மஞ்சளில்காப்புக்கட்டி,படியாகக்கணேசனே
யும்பூசைசெய்து பரிவுடனேயடுப்பேற்றித் தீயைமூட்டே. 1350

மூட்டியேயெரித்திட்டு மூன்றுநாட்கப்பால் மெழுகுபதந்தன்
னிலேவடிக்கும்போது, கீட்டியேபுழுகுடனேபச்சைக்கற்பூர நிரமா
ங்கோரோசனையும் வகைக்குமிருகழஞ்சி, மாட்டியேபொடித்திட்டுவடி
த்திடுவாய் தயிலம்வண்டுகட்டிதானிய புடம்வைத்தெடுத்தக்கொ
ண்டு, மூட்டியேநாலுநாட்கொருமுழுக்கு முழுகுமுறையோடேசி
காயசைப்பு வெந்நீர்வாசே.

வார்த்தெண்ணீமுழுக்கன்றுமோர்தயிர்பா லிறச்சிமருவுகனும் விகசப்புபுகையிலையுமாற்று, வார்த்தெண்ணீ முழுகிவரில்போம் நோய்கேளு மைந்தனேமந்தாரகாசமொடுயேங்கல், வார்த்தெண்ணீ முழுகையிலிருமலீளை மகத்தானபக்கமந்தாரகாசம், வார்த்தெண்ணீ முழுகையிலே கபாலநீர்ப்பாய்ச்சல் வாதமொடுபொருமல்குறுவேர் வைத்பாமே. 1352

குறுவேர்வைகெஞ்சிருமல்நெஞ்செரிப்பு கூறியவசோசிபித்தந் தலைநோய்கண்வலியுங், கிறுகிறுப்புமுறிந்தொடுங்கியிவைகளெல்லாம் தான் கேளடாவுப்புடனேதுவரைவழுதலங்காய், மறுவில்லாமுளைத் தண்டுநறுநெய்பாலாம்மற்றுரைன்றுமாகாதுவாதராட்சதனே. 1353

வாதராட்சதக்குளிகை.

வாதராட்சதக்குளிகைதன்னைக்கேளு வகையாகயுரைக்கிறேன் மருந்துநீகேள், பெதமுறவளர்சூதம்பெரியலோகம் பிலமுடைய காந்தமொடுசெந்தூரங்கள், நீதமுடன்வகையொன்று பரிந்தாலொன்று நேர்வாளமிஞ்சியும்ரசகெந்தியோடு, வேதமுறைநாவிலிங் கம்வெண்கரந்தானும் விராகனஞ்சுவகையாகச்சுத்திசெய்யே. 1354

சுத்திசெய்தமருந்துடனேசெந்தூரங்கூட்டி சுருதிபெறநொச் சிலைச்சாற்றிலாட்டி, சுத்திபெறத்தூளாக்கிதெங்காசலத்தின் குப்பி தோன்றவேசீலமண்ணேழுத்திரஞ்செய்து, சுத்திபெறமகுடைச்சு மண்ணுஞ்செய்து சூட்சமாயோட்டியடுப்பொன்றுபோடு, சுத்தியா ய்தாழியொன்றில்நாலுவிரல்மண்ணும் சொரிந்துகுப்பிவைத்தபின்பு மணல்கழுத்திற்கொட்டே. 1355

கழுத்துமட்டுமணல்கொட்டி தீயைமூட்டி கமலவன்னியொரு சாமங்கடாக்கினியும்பின்பு, பழுத்தவிழுபதினெஞ்சிசாமாட்டி பார்ப் பளவில்செந்தூரமாகித்தப்பா, மழுந்தரித்தார்ப்பதந்தொழுதுவனு பானத்தில் வியாதிகண்டுமருந்துகொடுவகையேதென்னில், இழுத்து விடுந்திரிகடுகுவறுத்தசூளி லினித்தேனுடன்தலந்தூட்டுவாயே.

ஊட்டுவாய்பணவிடைசெந்தூரங்கூட்டி யொருநாளைக்கிருபோ தாயொடுங்கவட்டு, மூட்டுவாய்சத்திகுன்மமுதலஷ்டகுன்மம் முழங் குபதினெட்டுவகைகுன்மம்போகும், நாட்டுவாய்வாதவகையெண் பத்தஞ்சு நலங்கொடுக்கும்பலசூலவாய்வுக்கெல்லாம், நீட்டுவாய்சுர சன்னிதோஷத்திற்கு நெறியிஞ்சிமுருங்கைத்தோல் மூலிப்பால் சேரே. 1357

சேரடாபூரகம் வெள்ளுள்ளித்தயிலம் சேதிலேபணவிடை ன்செந்தூரத்தருந்தப், பாரடாவிழுந்தோடும்பலபலநோயகன்று

பாங்கானவனுபானம்பரிந்திட்டாக்கால், வேரடா அற்றவிடும்வ
திக்கெல்லாம் விரிணமுதற்புண்பொடிகளிவைகள் தாக், சேடாதிரி
டுகுத்தூள்தேனிலூட்ட சிலேற்பனந்தோண்ணூற்றுமுசிரங்கும்
போமே. 1358

வேறு.

சிறங்குசொறிவுவெடிப்புறங்கிதாப்பறங்கி யெரிப்பறங்கிதாங்
கம்போன்றவனல்சூலை, சன்னிவாதமண்டைநோய் அரங்கம்போன்ற
பீனிசமுமானதொண்டைப்புத்தரையாப்பும் பிறங்காயோனிலிங்கப்
புத்தெல்லாப்புத்தும்போமிதற்கே. 1359

இதுக்கேகுஷ்டம்பதினெட்டு மிரங்குங்களநோய்துடைவாழை,
இதுகண்பிளவை கிரந்தியுடனுறுப்பவுத்திரம்பலவாய்வு, முதுக்கண்
செவிநோய் செவிப்புத்து மூலரோகம் விப்புருதி, கதுக்காங்குறை
நோய்விஷகடியும் காணுதோடுங்கண்டறியே. 1360

அசுவாதிசூரணம்.

அறிவாலறிவாயசுவாதிசூரணந்தன்னை யறையக்கேள், பிறிவா
ய்வந்தபலரோகம்போகும்படிக்கு வழுக்கிறுவேர், குறியாயிடித்து
வடிகட்டிகூட்டு மருந்துதிரிகடுகு, நெறியாஞ்சாதிக்காய்பத்திரி தீத
மதுரங்கிறும்பாமே. 1361

ஆமேகடுகுமிறுகணியஞ்சமபாகங்குறுசானி, ஆமேவகைக்குமூக்
கழஞ்சியனலில் வெதுப்பிதூளாக்கி, ஆமேயிருபத்தைங்கழஞ்சு
மதிகசீனியிவையொக்க, ஆமேரட்டியமூக்கிறுவேர்ப்பொடியுஞ்சூ
ரணமாச்சே. 1362

வேறு.

சூரணமாச்சதனில்வெறுகடிதான்நெய்யில் குடார்ந்துயிருபோ
தமண்டலந்தானுண்ண, காரணமாய் வரண்டுவற்றியிருந்தசீதகம்
கனத்தவுடல்பூரித்துப்பருக்குமப்பா, பூரணமாய்தூலித்துப் பூரித்
தோர்க்கு பூட்டடாசீதனிலேமண்டலந்தான்வற்றும், வாரணமாய்
பித்தமொடுபாண்டுதீர வாழ்மேதைதபுளியாதமோரிலூட்டே. 1363

ஊட்டடாயெலிகடிக்கும் பசுவிநீரிலொடுங்காத சித்துவிஷந்தே
ட்குவேப்பெண்ணை, பூட்டடாவிளக்கெண்ணைமேலும்பூசு, பொல்
லாதயீயொடுசோகைதீய, மூட்டடாவெள்ளாட்டுநீரிலேதான் மிகு
ந்தபெரும்பாட்டுக்குயெள்ளெண்ணைவெல்லம், நீட்டடாவிரியனுக்கு
வெந்நீரிலூட்டி நிகழவேபூசிருடநின்றுபோமே. 1364

நின்றுபோம்தலையிலைத்திருந்தாலப்பா நேராவின்பாலிலேபூ
டுவூட்டு, நின்றுபோம்ஷட்குன்மம்வாய்வுமரோசிக்கு நீட்டடாகற்
பழச்சாற்றிலேதான், நின்றுபோஞ்சூலைகளுக்கமுரியிலேபூட்ட

தசோகைகாமாலைபோ, நின்றுபோம்நிம்பத்தின் சாற்றிலுண்ண
லகெட்டுப் பிள்ளையிலாவதற்குக்கேளே. 1365

பிள்ளையில்லாதவர்க்குமப்பா பிரமியிலைச்சாற்றில் பிசகாமல்நல்
லெண்ணெய்பாகலிலைச்சாறும், தள்ளாதமிளகுடனே கூட்டியுண்ண
சந்ததிதானுண்டாகுந்தாட்சியில்லை, கள்ளமூள்ளகைமசக்குக்காய்லெ
ண்ணைதன்னில் கனகமெழுகோடருந்து கனிவுண்டாகும் தெள்ளிய
நற்காயமொடு வுப்பிலிச்சாற்றிலருந்த தெரிவையர்க்குமாதவிடைசிறக்
குந்தானே. 1366

குஷ்டத்திற்கு.

தானென்ற குஷ்டமெல்லாந்தீருதற்கு தனித்தவேப்பெண்ணை
தனிற்சாரித்துண்ணு, தானென்றசெய்யான்தான்கடிவிஷங்கள் தீரச்
சலியாதேவெள்ளாட்டுரீரிலூட்டி, தானென்ற மேற்பூச்சு விப்பிருதி
தீரச் சாற்றினேன்வெள்ளுள்ளிவசம்பு வெந்நீரிலருந்து, தானென்ற
மேற்றடவிவிரியன்கடிதீர தனிப்பசுவின்பாலுண்டு மேலுந்தடவே.

மேலேறுவாய்க்கு வயறுநோவுக்கு வெற்றிலையிற்பொதித்துண்
டுவெந்நீருங்கொள்ளு, காய்கைமுகவெரிவுக்குஞ் சிரங்கும்போகக்
கறுத்தாட்டிரீரிலுண்டு துவாலைபோடு, சாலவேவாதத்துக்கோதண்
டத்தயில மதனில்காச்சியுண்டு மேச்சலியவதைப்போடு, நீலனென்
னவரும் சன்னிதீரநல்லெண்ணெய் நீனைவுடனேகாச்சியுண்டுமேலும்
பூசே. 1368

பூசுவாய்மலங்கக்குமிருமலுக்கும் பூட்டடாகொண்டத்திவருந்தி
மேற்பூசு, பூசுவாய்குடைவுகெற்பறேகவாய்வு மப்பனையிஞ்சிச்சாற
தனிறகொள்ளு, நேசமுடன்மேகவெட்டை தாதுநஷ்டம்நின்றதுவுந்
தீருதற்குகாவின்பாலிலருந்து, மாசற்றுக்கசப்புடனே புளிப்புமாற்று
மண்டலந்தா னுண்டவர்க்குவினையும்போமே. 1369

போமப்பாவாறுதிங்களுண்டபேர்க்கு பிலமெனுமாயசுவித்தி
க்கும்நடுவேன்காண, நாமப்பாசொல்லிவிட்டோம் காயசித்தியாகும்
நலம்பெறவேபன்னிரண்டு திங்களுண்டபேர்க்கு, வேமப்பாதேகம
துபொன்னிறம்போற்சிவந்து வேற்றுருவாஞசுகத்தி ரசுதிபிலனுண்
டாகும், ஆமப்பாகண்டதெல்லாந்திண்ணுணது ஆச்சரியமிதின்
பெருமையார்கண்டாரே. 1370

வேறு.

கண்டங்காரிதூதுவளே கடியவாடாதோடையிலை, ஒண்டவுல
பாடியாக்கி யுறுதூள்நன்றாய்வடிகட்டி, பண்டோர்செய்த

மூறைப்படியே பகரக்கேளுதிரிகடுகு, விண்டார்நத்தைப்பொடியி
கள் வகைக்காழாக்குவிளம்பினனே. 13

விளம்பக்கேளுகொம்புத்தேன் வெதுப்பிச்சட்டிகாயவைத்து,
குழம்பாய்க்காய்ச்சியதில்பொடிகள் குழுறத்தூவிக்கிண்டிடவே, தழ
ம்புச்சீனியாழாக்குத் தானுந்தூவிக்கிண்டியபின், நழம்பாறுகெய்யாழா
க்கு நலமாய்விட்டுக்கிண்டிடுமே. 1372

கிண்டியெடுத்தலேகியத்தை கிரிகையுடனேபுதுக்காக, மண்டல
மமைத்து மூன்றுகாள்வளமாய்த் தான்றிக்காயளவு, உண்டேயந்தி
சந்தியோ டொருமண்டலத்திலொழிவதுகேள், கண்டாலோடுமந்தார
காச்சுவாசங்கசநோய்வ. 1373

வேறு.

கோவானமகாவாதசன்னிக்கோர்தயிலம் நோக்குமுன்னே ஒழி
ந்துவிடசெப்பக்கேளு, காவானமுள்ளுவிலா முன்னேவேரும் கழற்சி
வேருன துத்திப்பட்டையோடு, பாவானசீந்திவேரமுக்கிருவேர் பற்
படம் நிலவேம்புயெட்டிவேரும், கோவானவெட்டியிலாமிச்சம்வேருங்
கொடியசிறுகுறிஞ்சிவேர் மலைதாங்கிவேரே. 1374

மாலைதாங்கிதூதிவேர் நஞ்சுண்டான்பட்டை வாகானமுருக்குந்
தாம்பட்டையோடு, உலையாதவாவரைவேர் கிளிமூக்குகிழங்கு உசி
லம்பட்டையொடு கடம்புநாவல்பட்டை, நிலையானசாரணைவேர் புளி
யம்பட்டை செம்பிரண்டைமணிப்பிரண்டை கிழங்குகூட்டி, தலையா
னபசலைகிழங்கரசம்பட்டை சுள்ளிவேர்முள்ளிவேர் முள்ளடியின்
கிழங்கே. 1375

கிழங்குவகையல்லாதுசீந்திவேரும் கிலுகிலுப்பைவேரழிஞ்சில்
பட்டைவேரு, முழங்கியகொன்றைப்பட்டை ஆயில்பட்டை மூத
ண்டகரியனூர்பொரியரிசிகூட்டி, களங்கமில்லாதருக்கம்பாலத்திபட்
டை கருவேலம்பட்டையோடு கருங்காலிபட்டை, விளங்குபெருவா
கைபட்டைகுமிழம்வேரும் வில்வவேர்வெள்ளறுகுசிவனர்வேம்பே.

வேம்பினிடபட்டைமுக்குறண்டி நெல்லிப்பட்டை வீரனீதா
டைவேர்பூனைமேற்கோவை, மாம்பட்டைபுசினிடபட்டைசங்கு
ப்பி மால்கிழங்குவேங்கைபட்டைநொச்சிவேரும், சோம்பில்லாச்சங்
கரம்பட்டையோடு சுறக்குடையசத்திசாரணையின்வேரும், வீம்பு
டைய எலுமிச்சுகாரத்தம்வேர் பிளகுசாரணைவேரமுக்கிருவே

சண்டகந்தாழையொடு சிற்றுமணக்கம்வேர்,பேரானவிளாவின்
வேர் பெருகுருஞ்சிவேரும் புங்கம்வேரதின் பட்டையுவாய்வேறுங்
கூட்டு, நேரானகொழுஞ்சிவேர் விஷ்ணுகாந்தி நிலத்தழுத்தக்காசு
கண்டங்காரிகூட்டே. 1378

கூட்டடா ஆடுதின்னுபாலைகஞ்சாங்கோரை கூறரியமாவாதம
டக்கியிடவேறும், கூட்டடாபுலிதொடரிவேரெழி முள்வேறுங்கொ
டியகார்த்திகைக்கிழங்கு வகைக்கிரண்டுபலந்தான், கூட்டடாதறியிட்
டுயிடித்தசூரணழுக்கு கொட்டடாகாற்குறுணி சலம்பாண்டத்தே.

பாண்டத்திலிட்டதையு மடுப்பேற்றிதீயை பரிவாகயெறியிட்
டெட்டொன்றுய்குருக்கி, பாண்டத்திலிட்டபின்பு சாறுவகைதன்னை
பகருகிறேங்கரிசாலைகுப்பமேனி,பாண்டத்திலிட்டதல்லால் கறுநொ
ச்சி பழுதில்லாவெள்ளைகொச்சி மாவிலிங்கவிலையும்,பாண்டத்திலிடுவ
தற்குப் பெருந்தும்பைகொத்தான் பகர்வேலிப்பருத்தியிலைப் பொ
ன்னுங்காணி. 1380

காணிபொன்னுவரையிலையு மெருக்கிலைபோற் பழுத்தல்கடியவி
தாயிலைவகைக்கு கால்படியுஞ்சாறு, ஆணியென்றும் வேப்பெண்ணை
புன்னையெண்ணை யழகானநல்லெண்ணை யிலுப்பையெண்ணை, பேணி
வரும்புங்கெண்ணை யிவைகளதுசமனுய் பேறுபடவகைக்குழக்குப்
பசுவின்கோமியப்பா, ஓணியவெள்ளாட்டுப்பால் கோமயழும்வகை
க்கு ஒருபடிதானிடுகற்க முறைக்கின்றேனே. 1381

உரைக்கிறேன்வெள்ளுள்ளி வசம்புதிப்பிலியு மொப்பரியகாட்
டுச்சீரகமதாகும், விரைக்கிறேன் சன்னிநாயகமுங்கூட்டு மீறுமல்வ
கையொன்றுகழஞ்சிமூன்று, அரைக்கிறதுசாறுகளால் கலக்கியிட்டு
அப்பனேதாழியொன்றில் காப்புகட்டி, நிறைக்கிறேனடுப்பேற்றிதீ
யைமூட்டி நினைவாகப்பதத்திலே வடித்துவையே. 1382

வடித்துவைத்ததயிலத்தைவண்டுகட்டிவளம்பெறவேநாள்செ
ன்றுயெடுத்துமைந்தா, குடிக்கவொருகழஞ்சியிடு மூன்றுதினமப்பா
கூறுகநியமிடுகால்கைமேற்பூசி, நொடிக்குமுன்னே பதிமூன்றுசன்
னிபோகும் நூற்றிரட்டியிருபதல்லால் வாதம்போகும், முடிக்கமுக
வாதமொடுபட்சவாத முயலகனுங்குமாகண்ட னெல்லாம்போமே.

போமப்பாவாதமென்ற தெல்லாம்போகும் பொல்லாதசன்னி
யொடுமேதாஷம்போகும், நாமப்பாவடக்கமெல்லாம் சொல்லிவிட்
டோம் நன்னூலாஞ்சூத்திரத்தை யடக்கியாடும், வோமப்பாதொட்
டெல்லா வியாதிகளினில் மெய்யுள்ளோர்க்குரைப்பது வேவிசேஷ
மாமப்பாமற்றுறையடித்திடாதே யறைகிறேன்நாவரட்சிவி
மூலக்கே. 1384

விக்கலுக்கு.

மயிலிறகுசுட்டகரிமதுரஞ்சீனி வடிதேனில்திப்பிலியும்வகை
யைக்கூட்டி, ஒயிலாகக்கற்கண்டுஞ்செய்வீராகி லோடிடுமேகாவரச்சி
விக்கல்சத்தி, பயில்தாகமூள்படலமூள்ளோங்காராம் பகராமற்பகர்ந்
ததுவும் பஞ்சாங்கண்டாய், அயிலாகவின்னமொன்றுசொல்லக்கேளு
அப்பனேவதிதாகம் போகவதிநெல்லி. 1385

வேறு.

நெல்லிநெற்பொறி சர்க்கரைதிப்பிலி, கொல்லிமான்கொம்புகூட்
டியுரைப்பது, வல்லிமாமூலப்பாலிலுரைத்திடச், சொல்லியோடும்
விக்கலுஞ்சித்தியே. 1386

வில்வம்நெற்பொறி சர்க்கரைதிப்பிலி, கொல்லிமாமூலத்தேனி
ற்குழைத்திட, வல்லவிக்கலுஞ் சத்தியுமாறிடுந், தொல்லையில்லைச்சுக
நீடுகாலமே. 1387

நீடுமாதளை நெற்பொறிசர்க்கரை, தேடுதிப்பிலி தேனிற்குழை
த்துண்ண, நாடுவிக்கலிருமலும்சத்தியும், பாடியோடும் பகராதிமது
ரமே. 1388

வேறு.

அதிமதுரஞ்சீரகம் வெங்காரம்கோஷ்ட மழகானதிப்பிலிவங்
காளச்சீனி, இதுசமனு யெலுமிச்சம் பழச்சாற்றிலேதா னியல்பாக
வுய்த்திடவே விக்கல்போகு, மதிசாரதோஷ மொடுதாகம்நீங்கு மப்
பனேமருந்திடுவரட்சி யிருமலுக்குப், புதுசாகசண்டமாருதலேகியத்
தை புகலுகிறேன் புலத்தியனேகண்டங்காரி. 1389

வேறு-சண்டமாருதலேகியம்.

கண்டங்காரிதூதுவளை கடியமிளகுதக்காளி, அண்டர்துதிக்கு
ஞ்சங்கிலேபு மாடாதோடைதுளசியிலை, கொண்டேவகைக்குக்கால்
படியாய்க்கூறப்புதுசாமஞ் சட்டியொன்றில், மண்டவதுவுமரைப்படி
யாய்வற்றக்காய்ச்சிக் கொள்வீரே. 1390

காய்ச்சிக்கொள்வீரதின்பிறகு கருப்புக்கட்டிப்பலமஞ்சு, பேச்
சில்லாதே பொடிசெய்து பின்சாற்றிலில்தூவியது, நீச்சில்லாதே
கால்படியாய் நிற்கும்நிதானங்கண்டரிந்து, கூச்சமறவேகடைமருந்து
கூட்டவகையுங் கூறுதுரே. 1391

வேறு.

கூறியகடுக்காய் திப்பிலியரத்தை குறையில்லாதவகையொள்ளு
கழஞ்சிபத்து, நீறியேவெயிற் காயவைத்துஇடித்து நேற்றிய
பொடியை வடித்துக்கொண்டு, தேறவேமூன்பு வற்றிக்குழை

சார்ந்திடவேபொடியதனைக்கூடத்தூவி, ஆறுதற்குமுன்பாகயடிப்
பற்றுமல் அடிக்கடிநீபருவமதாய்க்கிண்டுகிண்டே. 1392

வேறு.

கிண்டியரைக்கல்படிதேனைக்கிளறவிட்டுவதின்பின்பு, மண்ட
நறுநெய்மாகாணிப் படியைவிட்டு மத்திக்கச், சண்டமாருதலேகியத்
தைத்தான்றிக்காய்போலுண்டைசெய்து, கொண்டுவரவேயிருமலெ
லாம் கூப்பிட்டோடுங்கண்டீரே. 1393

கண்டீர்கைப்புபுளியகற்று கறியுப்புடனேகச்சலக்காய், விண்டார்
முருங்கைப்பிஞ்சவரை வீதிலாதவழுதலையும், பண்டார்நறுநெய்பால்
துவரைப்பருப்புமறுத்தழைக்கீரை, தண்டாந்துதிசமூலமும்நீ தள்
ளாதரும்பத்தியங்கடந்தே. 1394

மந்தாரகாசக்குழம்பு.

கடந்தேயிருமல்மந்தார காசமுதலாய்ப் போவதற்கு, வடர்ந்த
குழம்புவொன்றுதனை யறையக்கேளும்புலத்தியரே, துடர்ந்தேதகன
கமிளகொன்று துய்யநறுநெய்தண்ணம், படர்ந்தசீனி யிவைமூன்று
வகைக்கோர்பலமாய்ப்பாவுசெய்யே. 1395

செய்வாயிரண்டுசாமமறை தெளியவாட்டிப்பிசின்போல, நம்பும்
பருவம்புதுக்கரத் திட்டுலாலாகாள்முதவாய், வையம்புகழு மந்திசந்தி
வாகாயதான்றிக்காயளவு, உய்யும்படிக்கு அருந்திவரி லொருமண்ட
லத்திலோடிடுமே. 1396

வேறு.

ஓடிடும்வியாதிகேட்க வருதிகேள்தேங்காய்பாலில், கூறிடும்சிறு
பயற்றப்பறுப்பிடுகருத்தபாலால், நாடிடுமொன்றுய்க்காச்சிநயம்பெற
வுப்பும்போட்டு, தேடிடும்படிக்குக்கொள்ள தெளிந்து பஞ்சாகப்
போமே. 1397

வேறு-பஞ்சதாரைக்குழம்பு.

பஞ்சதாரைநாற்கழஞ்சு பருத்தசுக்குமுக்கழஞ்சு, இஞ்சிதிப்
பிலி இருகழஞ்சு, யேலந்தானுமொருகழஞ்சு அஞ்சுங்கூட்டிபொடி
செய்து, ஆவின்பாலில்கொள்வீராகில் மிஞ்சுபித்தந்தலைநோவு, வெள்
ளோக்காளமுள்ளதெல்லா மிஞ்சிப்பயந்துதானடுங்கி, யடவிக்கேகிப்
போய்விடுமே. 1398

வேறு.

மலைதாங்கிநன்னரி முள்ளிவேறு மகத்தானமுள்ளிக்காய்தான்
றிக்காய், மிலையாடாதோடைகோடிதுவியோடு இசைந்ததொரு தூதி
கண்டங்காரிகூட்டி, யிலைவில்லாதொருநாழிநீரிலப்பா அஷ்டபாகம்
யைக்காற்கழஞ்சுகூட்டி, நிலவரமாய்த்தேனுமொருகழஞ்சுகூட்டி
நெய்முடனேதிப்பிலியும்மேற்பொடியும்போடே. 1399

வேறு.

போட்டகியாழம்பொடிதேனும் பொருந்தமூன்றும் தினங்கொள்ள, நாட்டமாகப்பின்னிநின்றநாடுசெம்பைப் படுங்கண்டாய், மீட்டுமத்தேதாடே மிளகுஞ்சுக்குங்கூட்டியகியாழத்தில், வாட்டமின்றிப் பொடிதேனும் வருந்திக்குடிக்கவளமாமே. 1400

வளமாந்தாதுதாகநிற்கு மலமும்பந்தமயக்கமருஞ், சனமாய்த்திரந்ததலைநோயும் சளிறென்றேரும்வாய்வுக்குத், தூளியாங்கால்கைமேல்வலியு மோங்காரத்தேதடிருமல், மறையோர் மூனிவோர் நாடிவகைப் பகர்ந்தார்வாந்தியிருமலுக்கே. 1401

வேறு வாந்திவிக்கலுக்கு.

வாந்தியுமிருமலு மருந்துவீருக்குஞ், சேர்ந்திடுமிளகுடன் சுக்குத்திப்பிலி, கூர்ந்திடும்விலைவேர்கொத்தமல்லியும், சாந்தமாயிவையஞ்சும்சமன்கொடாக்குமே. 1402

ஆக்கியமருந்தஞ் சளவுனுழிநீர், வாக்குடனெட்டொன்றுய்வற்றக்காய்ச்சியபின், போக்குடன்கொண்டவர்பொலிவும்வீறும், விட்டேக்கியேபறந்திடுமியல்பதாமிதே. 1403

வேறு.

திரிபாலியிருவேலியிலாமிச்சம்வேர் சிறந்ததேர்மூண்டகத்தின்வளையமொடு, நெரியானவீழிமரப்பட்டையோடு நிறையொன்றுய்வகைக்குமிருகழஞ்சுகூட்டி, குறியாகவிடித்ததுவு முக்கூறிட்டுக்கொண்டிடவேயிருநாழிநீரிலிட்டுப், பிரியாமலொருகூறு அஷ்டபாகம்போதிரண்டுகொண்டுவரபிணிநில்லாதே. 1404

நில்லாதவிஷபாதச் சுரமும்மாந்தி நெஞ்சரிப்புக்குளிர்தாகம்வேர்வைகோழை, அல்லாதமலசலங்களழியாலு மப்பனேகண்மயக்கம் சஞ்சியோடுற, எல்லாம்விட்டோடுமாஞ்சோகைநீக்குமிதுக்குகைக்குற்றம்வரிலேறுதேபோம், வல்லவர்கள்கண்டறிந்துகொடுக்கத்தீருமாறலாய்துருசுமும் வாராதன்றே. 1405

வேறு-மாரல்சுரத்துக்கு.

மாறல்சுரங்கள்மாற்றுதற்குவகைகேள், சிந்திபேய்புடனும்கூறுமுத்தக்காசு, வேற்கொம்புபற்படாகமிவையும் தேறவகைக்குவொருகழஞ்சுசிதறவிடித்துக் கூறுசெய்துபேறுபடவேயிருநாழி நீரிலொருகூறதிற்போடே. 1406

போட்டேகியாழ மெட்டொன்றுய்க் குறுக்கிவாங்கிப்போதிரண்டு, நாட்டமுடனே தேன்கழஞ்சு நயமாய்மூன்றுநாளருந்த, வாட்

மேதமில்லையந்தமாறல் நாலு மூன்றும்போம், கூட்டமுடையபல
சாங்கள் குளிருந்தாகம்வேர்வைபோம். 1407

தாகம்வேர்வைமலப்பந்தஞ்சந்தித்திருந்த தொந்தமொடு, வே
கம்சோகம் நீரேற்றம்விட்டேயோடும்பத்தியங்கள், மோகமடக்கும்
புளிகசப்புமோரும்புகையுந்தள்ளிவிடு, மாகந்தெளியனன்னப்பாலப்
பாலருந்தசுகமாமே. 1408

திப்பிலாதிசூரணம்.

ஆமேயிருமல்சளத்துக்குமடங்கத்திப்பிலாதியைக்கே, ளாமே
சூரணஞ்செய்வதற்கு அப்பாதிப்பிலிமூன்றுபத, மாமேரெண்பவ
மாஞ்சிற்றரத்தைமிளகுவால்மிளகு, அமேயேலமிலவங்கப்பத்திரிப்
பட்டையதிமதுரம். 1409

மதுரந்திரிபலைசாதிக்காய்பத்திரி கிரும்புவாய்விளங்கஞ், சதி
ராம்கொத்தமல்லி குறுசாணிதாளிசபத்திரியும், மெதிராஞ்செலியஞ்
சிறுதேக்குமிருசீரகமுந்திப்பிலியு, நதிராங்கூகைநீருடனே நறுக்கு
மூலம்நாடிடுமே. 1410

மூலமமூக்கிருவேருமூன்றுகழஞ்சுவகையொன்று சீலமூடனை
காயவைத்துத்திரமாயிடித்துவடிகொண்டு ஞாலம்புகழும்தூதிகண்
டங்காரிசுரிசாலியுமுலர்த்தி யோலமெனவே யிடித்தபொடிவடிகால்
படியாயுரைத்தோமே. 1411

உரைத்தோமிந்தப்பொடிகளெல்லா மொன்றுய்க்கூட்டி யதிற்
பாதி உரைத்தோஞ்சீனிகலந்திடவேயோகோசூரணமான துக்கு, உ
ரைத்தோம்வேனில் வெருகடியாயிருபோதுநா, ளுரைத்தோமீளை
யிருமல்சயமோடுமரோசிவாந்தியுமே. 1412

வேறு.

வாந்தியுங்குடல் பிரட்டும் வாய்வும் வயிற்றுளாவும், தீர்ந்திடும்
சிலேற்பணங்கள் தெளிவுறுமலசலங்கள், ஆர்த்திடுங்கட்டுவிட்டு அதி
சூடுமிகுந்தபித்தம், பேர்ந்திடும்நறுநெய்தன்னிற் பேணிநீகொள்
ளுவாயே. 1413

கொள்ளுநல்லனுபானத்திற்கூறினேன்வகையாய்க்கேளு, தெ
ள்ளுமாதளங்கனியின்சாற்றில் நீதிண்ணும்போது, ஒள்ளிதாஞ்சுக
லநோயும்ஓடிடுபித்தம்போகும், தள்ளிடில்புளிப்புகைப்பு மோர்பு
ளிதானுந்தள்ளே. 1414

தள்ளியகோழைவாந்திசிலேற்பனந்தகர்ந்துபோக, வள்ளலே
பாழுமொன்றுவருக்கிறேன்வயணங்கேளு, கள்ளமில்லாதகொத்த
லியும்மேலங்காணி, நள்ளிருவேலிமூன்றும் வகையொன்றுகழஞ்சு
ன்றே. 1415

கழஞ்சிமூன்றல்லாலின்னங்கறக்கேள்மதுரஞ்சுக்கு வழஞ்சி நல்லகெந்தமிலவங்கபட்டைநாலு முளங்களிகூரண்டு கழஞ்சியு யொக்கப்போடு தழஞ்சியாயிடித்ததூளை தயவுடன்கூறுபோடே.

மோடனுமுக்கூறிட்டுப் பொலிவுடனேருகூறுக்கு, நாடிருநாழி நீரு நலம்பெறவெட்டொன்றுக்கித் தேடுநீயந்திசந்தி தினமூன்று மருந்தினுக்கால் பாடியே ஒடுமென்று பத்தியம்புளியுங்கைப்பே.

கைப்பொடுபுளிப்புமாற்றிக் கியாழநீரருந்திலப்பா, எய்ப்பில்லை யிருமலீளை சிலேற்பனமென்றவாந்தி பற்பலவரோசிகூடப் பரந்தி டும்பாரிலின்னஞ் சொற்பமாய்த்திப்பிலாதி லேகியஞ்சூட்டுகிறேனே

திப்பிலாதிலேகியம்.

சூட்டுலேகியந்தானப்பா தொந்திப்புகூயங்கள்தீர நாட்டுப் பிலிகழஞ்சு நாற்பதுபத்துஞ்சேரு, கூட்டுசுற்றரத்தைதானுங்கூறு மூப்பதுகழந்தீட்டுநற் கொத்தமல்லிபதின்கழஞ்சொன்னச்சேரே.

சேரடமிளகுக்குசெவியந் திப்பிலியின்மூலம்சேரடாமதுரநெல் லிச்சீரகமிரண்டோடேலஞ் சேரடாகறுக்குமூலம் சிறுதேக்குகூகை கீறுஞ் சேரடாவமுக்கிரூவேர்குரூசானிதிருந்தக்கூட்டே. 1420

திருந்தவால்மிளகுதாளிசபத்திரிகடுக்காய் சேருபொருந்தவே வகைக்குமஞ்சுகழஞ்செனப் பூட்டுமன்புமருந்தின்னம்வகைக்கு மூன்று கழஞ்சதுவகையாய்கேளு விருந்திலவங்கப்பட்டை பத்திரி விளம்பிஞ்மே. 1421

விளம்பிஞ்மிரும்புசாதிக்காய்பத்திரி இவைதானஞ்சுவளம் பெறக்காயவைத்து யிடித்ததூள்வடியுங்கட்டி பளம்பெறக்கண்டக் காரி தூதியுங்கரிசாலிப்பா, குளம்பெறவகைக்குழக்குப் பொடிவடி கொண்டுசேரே. 1422

சேரெருபடிநறுந்தேன் காச்சியே தெளிவுதன்னில் வார்பலம ருந்துத்தூளைவாக்குடன் விக்கிண்டி சீர்கண்டு நறுநெய்யுங் கால்படி விட்டுக் கிளரும்போது பார்த்திப்பிலாதிலேகியம் பாக்குப்பிரமா ணஞ்செய்யே. 1423

பிரமாணமுண்டை செய்துபின் பொருபோதருந்தப் பிரம மண்டலந்தான் பிசகிலாதுண்டாயகில் பிரமாணம்வியாதிவாத லேற்பனம்பித்தத்தோடு பிரமாணம்பணிப்புத் தொந்திபித்தவ சிபோமே. 14

போமல்சலபந்தங்கள் பொருமல்நெஞ்செரிப்புத்தாகம், போ
ளாயிருமல்வாய்வு திரட்சியும்ரோசிபோகும், போம்வலிகுன்மம்
வாய்வு வாயுறல்யுளித்தவேப்பம், போமதிசாரமக்கினி மந்தமும்
போகுந்தானே. 1425

தானென்றபத்தியங்கள் தன்னைகேள்புளிகசப்பு, தானென்று
தயிர்மோரோடு புகையிலைவாம்பாய்த்தள்ளு, தானென்றநறுநெய்
பாலுந் துவரையுமவரைப்பிஞ்சுந், தானென்றமுருங்கைச்சாறு வழு
மலைமுளைத்தண்டாமே. 1426

ஆமிளகுப்புமஞ்ச ளறைக்கீரைத்தளவுதள்ளி, பாங்கருவேம்பு
வள்ளிசீரகந்தூதிவற்றல், ஆஞ்சிறுகீரைபொன்னாங்காணியு மழகாய்
கூட்டி, ஆமற்றதொன்றுகாது அறைகிறேனறைகிறேனே. 1427

வேறு-பீனிசத்திற்குநசியம்.

அரைகிறேன்பீனிசத்துநசியந்தன்னை யப்பனேயாவெண்ணெ
யுழக்கழக்கு, அரைகிறேன்குங்குமப்பூ பச்சைகற்பூரமொடு அபின்
மருந்துங்கஸ்தூரி வகைக்குகால்கழஞ்சி, அறைகிறேன்பொடிச்சிட்டு
வேகவைத்துப் பதத்திலதைவடித்து ஆரவைத்துமப்பால்கேளு,
அறைகிறேனவ்வல்குறுணை வாயிலிட்டு அதின்பின்பு நாசியிலேநசி
யஞ்செய்யே, 1428

நசியஞ்செய்யிப்படியேயந்திசந்திநாள்மூன்றில் குணங்கண்டால்
பின்னுமப்பா, நசியஞ்செய்கானுநாளாறுநாள்தான் நாசிநீர்பாச்ச
லொடுபுண்ணுமாரும், நசியஞ்செய்சூலபீனிசமும்போகும் நாகரிக
மாகுமின்னம்நசியங்கேளு, நசியமொன்றுதேங்காய்நெய்யுழக்குவா
ங்கி நலமானகுங்குமங்கஸ்தூரிசேரே. 1429

சேரப்பாவெந்துகொண்டுநசியஞ்செய்யத் தீருதபீனிசநீரெல்
லாந்தீரும், ஆரப்பாவரிந்தமட்டும்சொல்லிவிட்டோமாருக்குஞ்சொல்
லாதேயடங்கியாடு, பாரப்பாவிந்தநூல்பார்க்கப்பார்க்கப் பண்டிதத்
தின்திறமெல்லாம்பரிவாய்த்தோணும், நேரப்பாயுள்ளவர்க்குச்சொ
ல்லுசொல்லு நெறிகுறிகளில்லார்க்குரீபூட்டாதே. 1430

பூட்டாதேயதைதமாறிமருந்திடாதே பொற்பூவும்வாசனையாய்ப்
பூட்டுபூட்டு, மூட்டாதேமுறையோடேயேதுஞ்செய்ய மோட்சத்தி
வந்தடையுமோசமில்லை, கூட்டாதேதியினமறிந்து கூட்டுகூட்டு கோ
டானகோடிபிணிசூலையும்போம், காட்டாதே எந்தநாளும் பலநோ
யெல்லாங் கடைபட்டுவோடிடுமேகன்னரோகம். 1431

வேறு.

கன்னரோகங்காதெழுச்சி காணுங்குறியைகருத்தக்கேள், முன்
னஞ்சூடுகொண்டதின்மேல் மூலங்கடுத்துமேலேரி, அன்னமொருத்
தப்பசியஞ்சி யதிநித்திரைசோம்பலுங்கொடிதாய்ப், பின்னுங்கப
பலவாய்வாகிப்பீனிசம் கூடப்பிறந்திடுமே. 1432

கூடப்பிறந்த செவிக்கிரைச்சல் குடையுங் குத்துச்சலமோடு,
நாசாமகாசிதனில் வறட்சியிருமலுண்டாகும், தேடாதன்னம்

விஷம்போலே தியக்கமயக்கமுண்டாகும், காடாசீதங்களத்துட நய்யுமலர்நீக்கட்டிடுமே. 14

கட்டுகண்ணிலொளிமயங்கும் கால்கையசைந்துவுளவுண்டா, மூட்டிச்சளிறென்றெனக்குற்று மூச்சுச்சுவாசமதிகரிக்கும், வெட்டுப்பட்டபுண்போலே மேனியெங்கும்விதனமுண்டாம், மட்டுப்படாத செவிரோக மருந்துவெண்ணெய்வைப்பீரே. 1434

மருந்துவெண்ணெய்.

வைப்பீறுண்ணெய்தனக்கு வகைகேள் நறுநெய்மருந்தரத்தை, வெப்பாலரிசிசீரகமும் விளங்காய்சாதிக்காய்பத்திரி, ஒப்பாங்கிராம்புமதிமதுரமோமமிரண்டுதாளிசப்பத்திரி, அப்பால்திரிபால்திரி கடுகு மிளகுகொத்தமல்லிவகை. 1435

வகையோரிடையாயதினிடை நற்சீனிகூட்டிமருந்துதனைத், திகையவெதுப்பிப்பொடியாக்கிச்சீனிகலந்துநெய்காழி,பகையில்லாதே வெந்திறக்கித்தேனுமளாவிப்பத்துடனே, நகையாதிறக்கியுண்டுவர நசியம்செய்யுநலமே. 1436

ஆமேசெவிக்குள்வருரோக மடங்காநறுநெய் வேப்பெண்ணெய், மாமல்துயின்றகடல்நுரையும்வசம்பு வெள்ளுள்ளிவாள்மிளகு, நாம தூடல்போல்நற்சோதி நற்சீரகம்பூசிக்கூடும், போமேவெந்துவிட்ட டைக்கும்புனிதமாகும் காதைதுழ்சி. 1437

சகலரோகந்தனக்குமெண்ணெய் தானேலாதியிலத்தைப், புக்லாய்வைத்துமுழுகிவரப் போமே சகலபீடையுந்தான், இகலாத்துவேசரீரத்துக் கேற்குஞ்சரீரசுவுக்கியமாம், சுகமாயிருக்கும்படிசொன்னேம் பித்தசிலேற்பனசுரம்போமே. 1438

பித்தசிலேற்பனசுரந்தன்னைப் பேசுங்காலவகைகேளாய், குத்தும்சூலையுமிடுப்பசைந்து குளறுப்பேசுங்குறுவேர்வை, கத்துமிருமல்கைகால்கள் கடுக்குமூர்ச்சையசதியுண்டா, மெத்தக்காதுகுடைந்திரையும் வதுப்புநாவுமுலர்ந்திடுமே. 1439

உலர்ந்தேதாவிற்றிலா மூட்போலுறையுந்தாகவயிறிரையும், கலந்தேதபிரிந்தமான்போலே காதல்கொடுதலுங்கடைசிவக்கு, மலந்தான்கட்டும் சிரங்கனக்குமனமுங்குமட்டு மதிமயக்கி, மலர்ந்தேமுகமூம் சாத்தியமென்னவறைவீரே. 1440

அறையுங்குணத்தின்படியாயிருந்தா லதற்கோர்கியாழமருந்தக்கேள், சிறந்தமுத்தக்காசுடனே தெசாபுரமிலாவிச்சம்வேர், நிறைந்தபர்பாடாகமிருவேலிவெட்டால் நெற்பொறியும், துறந்தமாவினிலே பிறகில்சொன்னே மிதுதான்கொத்தமல்லி. 1441

இதுவொன்பதுவுஞ்சமன்கூட்டி யிடித்துநாழிநீரிலிட்டு, அதுதனெட்டிலொன்றுக்கி யரத்தைபொடிமேல்முலேப்பாலும், விதியாலிரவுபகலுமிருபொது குடிக்கவிடாதாகில், பதியவிதிலேமாத்திரைகள் பாங்காய்க்கொடுநோய்பறந்திடுமே. 1

பறந்தவியாதியேனென்றால் பழையசுரமும்வகைதோஷம் நிறைந்தசன்னிபதின்மூன்றும் நெடுமூச்சேதிநெஞ்சேரிப்பும், பித

கல்பித்தசிலேற்பன தோஷசுரமும்பிரிந்தோடும், சிறந்தமலமூத்
ரங்கழுந்தெளிந்தேவிழியுஞ் சிறந்திடுமே. 1443

இடும்பைசெய்வாதேதென்னி லீரேழுநாள்வீறெடுகும், படு
பாடனேகம்கைகடந்த பருவமெனவேமலிவுண்டாம், கெடுநாள்மல
முங்கட்டிவிடும் நிகழ்கடுகுரோகணிகடுக்காய், திடமாயிந்துப்புடனே
பேய்ப்புடலுங்கியாழத்துடனேகூட்டே. 1444

கூட்டிக்கியாழமூலப்பாலுங் குறுகியிஞ்சிச்சாறுடனே, ஆட்டிக்
கொடிக்கமேற் பொடிதிப்பிலியுங்கோடாசூடியிட்டு, மூட்டமலபந்த
முங்கழியும் மூர்ச்சைதெளியுஞ்சன்னியும்போம், தாட்டாமரைக்கட்
புலத்தியனே சகலதோஷந்தணிந்திடுமே. 1445

வேறு-கற்பமுறை.

தணியப்பாவுலேமுகத்தில்துருத்திகொண்டு தரமாகவூதிடு அழு
குமட்டும், பணியப்பாவெடுத்ததனேயாறவைத்துப் பாங்காகப்பின்
பொருக்காலழுகூறாது, துணியப்பாயின்பமது குகையில்வைத்து
துலங்கவேபின்பொருக்கால் நன்றூயூது, அணியப்பாகந்தமதுதராப்
போல்நிற்கு மகாகாந்தசத்தருமைதானே. 1446

அருமையென்றகாந்தத்தை யுருகுகையில்வைத்து அப்பனே
மூன்றுதரமழுகவூது, பெருமையென்றகாந்தமது சத்தாய்ப்போஞல்
பேச்சேதிசூதமொருபலத்தைத்தாக்கிக், கருமையென்ற காந்தமது
சோதித்தேதறக் கருவேலையல்வீரொடுகாரங்கூட்டி, யுரிமையென்ற
சாரமுடன்பழச்சாற்றூலாட்டி யுலர்த்துவாய்பணம்போலே வில்லை
செய்யே. 1447

வில்லைசெய்தமருந்தெல்லாஞ்சமனுய்ச்செய்து மீறியதோர்காந்த
சத்துருக்குப்போது, சொல்லுவேன்சத்துக்குச்சமனுய்த்தாக்கு துடி
யாகவொவ்வொன்றிற் கொடுக்கவாங்கும், அல்லாதுசமனுகத்தாக்கிப்
பின்பு அப்பனேயோடுகொண்டுமூடிக்கொண்டு, வல்லதோருகுகை
யழுகுன்றூயூது மகத்தானகாந்தமதுவங்கந்தானே. 1448

தானென்றகாந்தமதுவீயமாக சாத்திரமெல்லாம்படித்தே னரு
மையென்றே, நானென்றவாணவத்தால் வெளியிற்போட்டேன்
நாட்டாதேகள்ளரென்றபிள்ளைக்கெல்லாம், வானென்றவீயமதைப்
பதனம்பண்ணு வண்மையாயதினுடையநாகங்கேளு, வேனென்ற
வயப்பொடிதான்பலந்தானஞ்சு வெள்ளையுடன்தாளகமுஞ் சூதங்
கூட்டே. 1449

கூட்டுவாய்கற்கமொடுசாரந்தன்னைக் குறிப்பாகவகைக்கோர்பல
வீதங்கூட்டி, மூட்டுவாய்பூரித்துகழஞ்சு ஒன்று மூற்றியதோர்வெண்
கருவிரோலாட்டு, ஆட்டுவாயிருசாமமரைத்துப்பின்பு வளமாகவில்லை
செய்துரவியிற்போடு, காட்டுவாயுலர்ந்தபின்பு குகைக்குள்ளாகநல
மாகவைத்துதனைக்குகைவாய்மூடே. 1450

மூடப்பாவோடுகொண்டுசீலைசெய்து முன்போலேயுருக்கியெடு
ன்கலமாய்நிற்கும், தேடப்பாமுன்போலேசோதித்தேறு செக
ல்லாமிரும்பினிடவீரங்காணுர், ஆடப்பாவிதினுட்டுச்சித்தராட்டு

அரகராகாந்தமதுகூடிற்றுளை, வீடப்பாபெலத்துதடாமறலிமே
மிதமிஞ்சுமென்றுசொல்லிமறைத்திட்டாரே. 14.

மறைத்திட்டாரயத்திஞெடுகாந்தந்தன்னை மக்களையவழிருத்
துக்கட்டுமென்றி, குறைத்திட்டாரறுசுவையும்சுழற்றுமுன்போகொ
ள்வதற்குமூகல்கற்பமென்றுகூறு, நிறைத்திட்டேனுலகமெல்லாஞ்
சித்தாய்ப்போக நிலையானதாறுவகையுறுதிசொன்னேன், முறைத்
திட்டந்தப்பாமல்கற்பமுண்ண முந்தவே அயமதுரு மொழிந்திட்
டேனே. 1452

மொழிந்ததொரு அயக்காந்தம்பலந்தான்ரண்டு முத்தமிழ்சேர்
புலத்தியனேவகையொன்றுக்கு, தெளிந்ததொருதங்கமது பலந்
தான்ரண்டு சேரவேமூன்றுமொன்றுயுருக்கியாட்டு, குளிர்ந்ததொ
ருகல்வத்திற்பொடியாய்ச்செய்து கூறப்பாகண்டிடைக்குச்சவ்வீரத்
தை, வழிந்தோடுமச்சதிலேபனியிற்போடு மாட்டடாதங்கவிடை
சூதந்தானே. 1453

சூதமுறவாலேயதாய்நாள்மூன்றில்தான் சுருக்காகநித்தியமொரு
சாமமாட்டி, நாதமுறமூலைப்பாலிலாட்டுவாட்டு இராப்பனியிற்போட்
டுவிடுமூன்றுநாள்தான், வாதமுறவேதையிடும்வாதிக்கல்லோவயித்
தியத்தில்வாலோசமாகச்சொன்னேன், வேதையிதிலொட்டாது ஆசி
யாதே வேதைக்குக்குறுவேரைவிளம்பக்கேளே. 1454

விளம்புவேன்மாலோசங்கண்டிடைக்கிராட்டி மீறியதோர்கெந்தி
யிடுசிலபத்தொன்று, வளம்பெறவேபொற்றலையின் சாற்றுலாட்டு
மாவட்டிரண்டுநாளரைத்தபின்பு, உளம்பெலக்கக்குப்பியிலேயுலர்
சாத்திவிடு உத்தமனேவாலுகையிற்றீயைமூட்டு, தளம்பெறவேமூ
ன்றுநாள்முத்தீயிட்டுத் தப்பாதுதளமுறச்சென்தூரந்தானே. 1455

சென்தூரம் சிவப்பென்றுல் முருக்கம்பூவொவ்வாதேகமதுக்கழ
வேதுவயிரவனைப்பூசி, சென்தூரமெடுத்தடக்கிச்சிவனைப்பூசி தேவி
யோடுகணபதிக்குப்பூசைபண்ணு, சென்தூரந்தின்பதற்குத்தீட்சை
முன்னே செயமாகக்காரியமோடிலக்கணமுஞ்சொன்னேன், செந்
தூரங்குன்றியிடைமூதண்டத்தின் திறமானலேகியத்தில் பொதிந்
துதிண்ணே. 1456

திண்ணவேலேகியந்தான்முன்பேசெவ்வாய் தீட்சையிருநீற்று
ள்ளேதிடமாய்ச்சொன்னேன், அண்ணலேலேகியத்தையாருஞ்சொ
ல்லா ரழகாகக்காசிடைலேகியத்திற்கொள்ளு, உண்ணவேமண்டலங்
கொள்வயசுகண்டு உத்தமனேநோயென்றுதல்லாம்போகும், அந்த
மொடுபல்சீனிபத்தியந்தானப்பனேமற்றுன்றுமாகாதென்னே.

ஆகாது என்றுசொன்னதேதென்றுக்கா லவமிருத்துகட்டுதற்
குப்பத்தியம்வேணும், வாகாகச்சென்தூரம்நோய்கொண்டோர்கு
ளமானவனுபானமறிந்துகூட்டி, தாகானமண்டலமேகுன்றி
ஞ் சாற்றினுெம்நோயெல்லாந்தவறுண்டேபோம், வாகாலபத்
கள்காக்கவேண்டா மத்தியமாம்புகையிலையும்புளியுந்தானே.

தானென்றரெண்டும்விட்டுக்கொண்டாற்கேளு தவறுதுசகல வியாதிகளுந்தீரும், ஊனென்றவுடம்பெடுத்தாற் சாகாக்கல்லி யுற்ற வினையிதுக்கல்லோதளஞ்சொந்தூரம், மானென்றபெண்கள்வலைக் குள்ளேசிக்கி மாள்வதற்கோசொந்தூரவைப்பைச்சொன்னேன், தா னென்றபோய்விட்டுதன்னைக்காணுஞ் சாதகமாய் லட்சியத்திற்குறி யைப்பாரே. 1459

பாரப்பாவாசியினல்யோகமாகும் பரிவானதீட்சையினுற் சித் தியாகும், காரப்பாசாபமெல்லாம்நிவர்த்திசெய்து கற்பத்தில்முதல் கற்பங்காந்தங்கொள்ளு, சேரப்பாசித்திபெற்றகெதியினுலே செந் தூரமெடுத்தாலேதெளிந்துகாணும், பேரப்பாகேட்டுடனே எமதூ தர்கள் பேசாதேயோடுவர்காண் பின்பாராதே. 1460

பாராதேசித்தாந்தமொன்றுமில்லே பஞ்சகர்த்தாள் சடலவேகு மட்டுஞ், சோராதேயென்றுசொல்லும் வேதாந்தத்தை தெரிந்தறிய மாட்டார்கள்சைவமாடு, கூராதேபூரணமே தெய்வமன்றிக்கோவிலு க்குட்சுவம்புவந்துபரதாரத்தைச், சேராதேயிருப்பதென்னவென் றுசொல்லி செப்பேடாசித்தாந்தத் தெளிவாமாடே. 1461

தெளிவானமனத்தோர்க்குவாதஞ்சொன்னேன் திடமற்றமூட ருக்குத்திடமுஞ்சொன்னேன், தெளிவானமனத்தோர்க்கு வயித்தி யஞ்சொன்னேன்செய்முறைக்குக் கற்பத்தினெறியுஞ்சொன்னேன், தெளிவானமனத்தோர்க்குநூலுஞ்சொன்னேன் சித்தியுடன்முத்தி பெறயோகஞ்சொன்னேன், தெளிவானமனத்தோர்க்கு மவுனஞ் சொன்னேன் தீட்சையொடுபூசைவிதி செப்பினேனே. 1462

செப்பினேன்வாரத்திலட்சங்காப்பு திறமானவயித்தியத்தில் ரண்டுலட்சம், செப்பினேன்வாதநூலாயிரந்தான் தெளிவானரெண் டுகண்டந்திரத்தைத்தேர்ந்து, செப்பினேன்சூதந்தானிருநூற்ப்பா தீட்சைவிதியிருநூறுந் தெளிவாய்ச்சொன்னேன், செப்பினேன்ஞா னமாயிரந்தான்தேர்ந்து தெளிவாகவிருநூறுந் திறந்திட்டேனே.

திறந்திட்டேன் வயித்தியத்திற்குறுக்கிலட்சஞ்செப்பினேனதி ற்பாதியதனைத்தேர்ந்து, திறந்திட்டேன்வாதத்தின் சூத்திரம்போற் றெளிவாகவயித்தியத்திற் சூத்திரஞ்சொன்னேன்,சிறந்திட்டேனிவ் வண்ணமாகமூன்றுஞ் சிறுபிள்ளைக்காணுலும் வயித்தியந்தான், திறந் திட்டேன்பூரணசூத்திரந்தானப்பா செயலிருபத்தோராயிரத்தாறு நூறே. 1464

நூறுனவிருபத்துவென்றுங்காட்டி நவலுமனுபவத்தினுல்நா லுகாண்டம், வீறுன திதைக்குறிக்கிச்சூத்திரம்போல் வெட்டவெளி பூரண சூத்திரத்தைச்சொன்னேன், கூறுன திருநூற்றுப்பதினருக் குள் கொட்டினேன்சரிகையுடன் கிரிகைசொன்னேன்,பேறுனயோக மொடுசூரனத்தோடு பிலத்தசுவாசந்தனிலே பேணிக்காணே.

காணப்பாவிட்டகுறைமார்க்கத்தோணும் கைவிட்டசூத்திர மாய்வெளியிற்போட்டேன், தோணப்பாகற்பத்தினேர்மையாவுந்து யாகசுறுக்கியதைநூறுய்சொன்னேன், பேணப்பாகற்பநூலிருநூ

றுஞ்சொன்னேன் பிலத்தமாந்திரிகைமைஞ் ஞாறுஞ்சொன்னேன்
நூணப்பாயிந்திரமுமையந்திரஜாலம் பூட்டினேனுயிரந்தன்புகழ்ந்து
பாரே. 1466

பாரப்பாவடிவெடுத்துகற்பங்கொண்டு பரிவாகவுண்டுவருங்கா
லந்தன்னில், தாரப்பாவாதமொடுபித்தத்தாலே சனித்தவிலேற்பன
த்தாலேதாறுமாறுந், தூரப்பாபாரமாகக்கற்பங்கொண்டு சுழற்றுநீ
யலையாதேநோய்கள்போக, காரப்பாசெந்தூரமின்னங்கள்தாறுங் கட்
டாய்செந்தூரித்து கடக்கவையே. 1467

வையப்பாகற்பங்கள்கொள்ளுமுன்னே வகையாளலேகியங்கள்
சூரணங்கள், செய்யப்பாகிருதங்கள்தயிலமோடு கெட்டியாய்செய்து
கொண்டுகிரமத்தேதாடே பொய்யாகவுரைப்பதென்ன புத்திசொன்
னேன் புலத்தியனேவதுக்குரைத்தபத்தியமப்பா, மெய்யாகுமென்
றோர்க்குமெய்யாய்நிற்கு விளம்பவென்றுல்பொய்யாகும் விளம்பக்
கேளே. 1468

கேளப்பாகற்பூசலாசத்துத்தான் கெடியாகபலமொன்றுபொ
ரிகாரந்தான், நாளப்பாபலமொன்றுரெண்டுங்கூட்டி நலமானபருத்
திவேர் அத்திவேர்த்தேதால், நீளப்பாபாங்காகக்கியாழஞ்செய்து நிச
மாகவிட்டுவாட்டுவொருநாள்மட்டு, மாளப்பாவஞ்செருவிற்புடத்தை
ப்போட்டு ஆறியெடுகல்வத்திலாட்டத்தானே. 1469

ஆட்டத்தூளாகுமடாவெண்கருவைவிட்டு யரைத்துவில்லேசெ
ய்தூவியுலர்த்திக்கொண்டு, மாட்டவேயஞ்செருவிற் புடத்தைபோ
ட்டு வாகாகவரைத்தரைத்துவஞ்சுதரமானுல், நாட்டவேவெண்பொ
டியாமதனையுண்ணநலமானபெருவயறுமகோரங்குஷ்டம், ஓட்டப்பா
ரீர்ச்சிறுப்புகல்லடைப்பு மோடுமப்பாவெடியுப்புச்சுண்ணநீரே.

வெடியுப்புப்பலம்பத்துநீறுபத்து வேகமடாபழச்சாறு சாம
மட்டு, அடியுப்புக்கரண்டியிலேவார்த்துவைத்து அப்பனேகொதிக்க
வைக்கசுண்ணமாகும், கொடிதப்பாபீங்கானில்நீறதாகுங் கூறினேன்
வயித்தியனுடவுப்புநீரே, துடியுப்பாசலாசத்துத் தனக்குமூன்னே
தோயப்பாதலேநோயுந் தணியுமன்றே. 1471

வேறு-காமரசம்.

தணிந்தகாமரசந்தன்னைச் சாற்றக்கேளு பெரும்பாடும், தணிந்
தேபோகுமெலும்புருக்கி தாதுநட்டம்பிரமேகம், தணிந்தேபோகு
மூஷ்ணங்கள் சகலசுரங்கள்பண்புடனே, தணிந்தேபோகும்நீரிழிவு
மரோசிகாந்தல் வாந்தியுமே. 1472

தூதுவளம்பூமுருக்கம்பூசொல்லும்வகைக்குநன்னரி, பாதநெரி
ஞ்சிலேநிலப் பனையும்வகைக்கோர்பலமாகும், ஓதுமதுரம்நன்னரி
வொவ்வோறிரண்டாஞ் சதாவேலிச், சோதமூன்று பலமுலர்த்திப்
பொடித்தூள்வடியுங் கண்டதுவே. 1473

கண்டபசுவின்பால்பதக்கு காச்சிப்பின்னேப்பொடித்தூவிக்,
ண்டித்திரண்டுவரும்போது கிளர்சர்க்கரைதேன்நெய்மூன்றும், கொ

கடவகைக்கோர்படிவிட்டுக் கூட்டித்தான்றிக்காயளவு, வண்டலுண்டுபுளிகசப்பு மருந்தார்பெருமை வகைகேளீர். 1474

பெரும்பாடுடனேயெலும்புருக்கிபிறமேகங்களோடிப்போம், தருக்காதகருமிகவுண்டாஞ் சாறுங்காரணமிவையென்று, வரும்பார்வதிக்குவெள்விடையோன்மகிழ்ந்தேயருளச்செய்ததுதா, னிரும்பாருலகிலிதுபெரிதா வெந்தமருந்துஞ்சிறிதாமே. 1475

பாலாட்சசூரணம்.

ஆமாம்பாலாட்சசூரணத்தையறையக்கேளும்புலத்தியனே, ஆமாமுந்திரிபேரீச்சுமக்கிருகாரமதிமதுரம், ஆமாங்கோஷ்டங் கொத்தமல்லிமுக்கிருவேர்சடாமாஞ்சி, ஆமாமேலமிலவங்கப்பத்திரிபட்டைபரத்தையெட்டே. 1476

எட்டாஞ்சாதிக்காய்பத்திரிகிரும்புமிருகசீரமொடு, எட்டாந்திரிபால்திரிகடுகுமினியதாளிசபத்திரியும், எட்டாஞ்சிறுகாகப்பூவுமிலாமிச்சம்வேர்வால்மிளகு, எட்டாஞ்செவியம்நன்னரி கீழ்க்காயநெல்லிநெற்பொறியே. 1477

பொறிசிற்றரத்தைதல்லகெந்தம்புகழ்சேர்வெட்டிவேர்தகர,மரிதாரந்திப்பிலிமூலமொடுசமமாகருசானி, விரிவாமளிளப்பழத்தேதுமேன்மைபெருதக்கோலமல்லால், தெளிதற்கூகைநீறுமூத்தக்காசுஞ்சமனுய்சேர்கழஞ்சே. 1478

சேரக்கழஞ்சாய்காயவைத்து யிடித்தநூலவடிசெய்து, காரமுடையவங்காளாச்சினிசமனுய்க்கலந்தபின்பு,சாரமூடனேபுதுக்ககந்தன்னிலடக்கியனுபானம், நேரமறிந்துதேனிஞ்சிச் சாறும்நறுநெய்நீட்டிடுமே. 1479

இடுமேஅந்திசந்திலொருகடியாயொருமண்டலமிணங்கக், கொடுமேயதனற்குணங்கேளு மருட்டும்வாந்திசெஞ்சொரிப்பு, விடுமேயந்திசுரம்வெட்டைமேகந்தாதுகட்டமுதல், படுமேயிருமல்களைச்சூடும்பணைப்பும் யாவும்பறந்திடுமே. 1480

வேறு.

பறந்திடக்களைமேலந்த சரம்போகக்கியாழங்கேளு, திந்திட்டேன்வற்பூலாவேர்வில்வவேர்சிற்றரமூட்டி, யமைந்திட்டேன்விஷ்ணுகாந்திநன்னரியிவையோடைந்தும், குறைந்திடாதொவ்வொன்றுக்குப்பலஞ்சுக்குமிளகுகூட்டே. 1481

கூட்டடாயிரண்டுமொன்றுக்கரைப்பாலுந்தானுமாக, நாட்டடாகட்டியஞ்சு கூறிட்டுவொருகூறுக்கு, மூட்டடாசலமிரண்டுபடிவிட்டுவெட்டொன்றுக்கி ஆட்டடாவந்திசந்தியரசூடுகளையுமாகும். 1482

மாறுமேகவிசுரங்கள்வந்துளபலநோயுந்தான், வீறுமேயடங்கும்வேறொருகுணமுமில்லை,தேறுமேவியாதியெல்லாந்தெளிமேசிந்தையில்லை, ஆறுமேமருந்தில்நோய்களண்டாது வருஞுமே.

வேறு-சொர்ணகருஷ்ணவயிரம்.

ஆமப்பாபுலத்தியனேசொர்ணகஷண வயிரவத்தையறைகிறே
னன்பாய்க்கேளு, ஆமப்பாதங்கம்ரெண்டுகாசுதன்னே யச்சமாய்லே
சாகத்தகடுதட்டி, ஆமப்பாசாதிலிங்கம்கழஞ்சுநாலுமதுவுடனே சே
வீரம்வெண்காரமணியும், ஆமப்பாசுத்திசெய்து தகட்டில்வைத்து
அடைவாகப்பொதிந்தபின்பு மறைகிறேனே. 1484

அறைகிறேனொருசட்டிக்குள்கற்சுண்ணமளந்தொருபடிபோட்
டதிலேதானும், குறையாமலொருபடிசாறுயம்விட்டு கூறுமரீற்றிய
தைக்குகையுஞ்செய்து, நிறையாகசட்டிக்குள் குகைநடுகவைப்பாய்
நீதியாய்தங்கத்தின் தகட்டுபொட்டணத்தை, மறையாமல்பதியவை
த்துமேலுஞ்சாராயம் வழுவாமலரைப்படியும் விட்டிடாயே. 1485

விட்டபின்புகற்சுண்ண நீறுல்மூடி மேற்சட்டிகவித்துமேசீலம
ண்செய்து, சட்டமாய்விராயகனேப்பூசைசெய்து தாயாரையர்ச்சித்து
அடுப்பிலேற்றி, இட்டமாய்தியானித்துகமலவன்னி யெரியிடுவாயிரு
சாமம்செந்தூரமாகு, மஷ்டதிக்கும்வெல்லுமடாசகலநோய்க்குமாணி
யடாயனுபானத்தாட்டு ஆட்டே. 1486

ஆட்டடாகோழிமுட்டைத்தயிலம்வாங்கி யதிலேதானிருகழஞ்
சுதயிலந்தன்னில், பூட்டடாசெந்தூரம் பணவிடைதானொன்று போ
தரண்டுமண்டலந்தான்பூட்டுபூட்டு, மூட்டடாமவுனமற்றபசாசுபேய்
கள் முரணைகூயகாசம் குன்மஷ்டம், நீட்டடாமேகவகை நீரிழிவு
சோகை நில்லாதகிராணியொடு பவுத்திரங்கள்போமே. 1487

போமப்பாபவுத்திரங்கள்கரப்பனொடுகிரந்திபுண்பொடிகளை
யாப்புபுடைத்தவிரணம், போமப்பாவிஷபாகம்பாண்டு பெருவயறு
பொல்லாத பித்தகாமாலையோடுசோகை, போமப்பாமூலமூளபினி
சம்மீர்பாச்சல் பொருமலொடுதக்கமல்லா லீளையிருமலுந்தான், போ
மப்பா பலரோகமெல்லாம்போகும் பிணியறிந்துவனுபானம் பூட்ட
லாமே. 1488

ஆமப்பாவாகடத்திற் சூத்திரத்தையெல்லா மறைந்திட்டேன
னுவொன்றுமடக்கமில்லை, வேமப்பாநோயெல்லாம் படுறீபற்றும்
வேறுள்ளநோய்களெல்லாம்விபரமில்லை, சோமப்பாவிந்த நூலதோ
கையேதென்றுல் சொல்லுகிறேனுயிரத்தைந் நூறுஞ்சொல்லும், நா
மப்பாவுள்ளபடிசொல்லிவைத்தோ நாதாக்கள்கடாட்சத்தால் சூத்
திரந்தான்முற்றே. 1489

அகத்தியமுனிவரருளிச்செய்த வயித்தியகாவியம்-1500
முற்றுப்பெற்றது.